நாடகக் கலைக் களஞ்சியம




ஜீபிடர்-
லாவண்யா
மனிதன்
டைரக்ஷன்
ராம்நாத்
ஸ்டுடியோ
நெப்ட்யூன்

நாடகக் கலைக் களஞ்சியம்

★

"வாழ்வு சிறிது வளர்கலை பெரிதே"

★

நாடகக் கழகம்
(பதிவுற்றது)
14, மவுண்ட் ரோடு :: சென்னை-2

RELEASING SHORTLY!
AVM PRODUCTIONS'
CHELLAPILLAI
AVM PRODUCTIONS
G.H.RAO

பொருளடக்கம்

★

கர்ணிக்கை	...	3
நடிக மகராஜன்—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	...	5
சில வாழ்த்துரைகள்	...	6
திறந்த வெளி அரங்கு	..	7
தமிழரது ஆசை—டி. கே. சி.	...	9
நடிகர்களின் நல்வாழ்வு—ஸி. என். அண்ணாத்துரை	...	10
நாடகப் பேராசிரியரின் வாழ்க்கை—புத்தனேரி ரா சுப்பிரமணியன்	...	11
கலையும் வாழ்வும்—என். எஸ். கிருஷ்ணன்	...	15
நாடகத்திலே மலர்ந்த அன்பு—வெ. சாமிநாத சர்மா	...	17
தெருக் கூத்து—பெ. தூரன்	...	19
பண்பும் பயனும்—"சுகி"	...	23
புதிய இலக்கிய முறை—எஸ். வையாபுரிப் பிள்ளை	...	26
போற்றத் தகுந்த பெரியார்——கி. சந்திரசேகரன்	...	29
முத்தமிழ்—அ. வரதநஞ்சைய பிள்ளை	...	31
தமிழில் நாடகங்கள்—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை	...	34
கிரேக்க காமெடி—பி. கோதண்டராமன்	...	35
தமிழ் நாடகத் தலைமையாசிரியர்—டி. கே. ஷண்முகம்	...	37
உணர்ச்சி பொங்கட்டும்—கி. ஆ. பெ. விசுவநாதம்	...	42
ஸ்பெஷல் நாடகங்கள்—எம். கே. தியாகராஜ பாகவதர்	..	44
நாடகக்கலை வளர—பு. ரா. மதிவாணன்	...	45
நமது காணிக்கை—எஸ். டி. சுந்தரம்	...	47
புதிய சகாப்தத்துக்கு அடிகோலியவர்—நாரண துரைக்கண்ணன்	...	49
நடிகர் ஒற்றுமை—எம். எஸ். முத்துக்கிருஷ்ணன்	...	51
தமிழ் நாடகத் தந்தை—க. அன்பழகன் எம். ஏ.	...	53
அமெச்சூர் நாடகங்கள்—பு. ரா. வெங்கடாசலம்,	...	55
தமிழே சிறந்தது—சங்கரதாஸ் சுவாமிகள்	...	57
நாடகக்கலையின் பழமை—டாக்டர் ஆ. கே. ஷண்முகம்	...	58
நகைச்சுவை—டி. என். சிவதாணு	...	59
பிழைக்கும் வழிகாட்டிய பெருமான்—வி. என். சம்பந்தம்	...	59
வாழ்க நாடக வள்ளல்—வீ. வே. முருகேச பாகவதர்	...	60
தென்னாட்டில் நாடகக்கலை—'கோவை கிழார்'	...	61
பம்பாயில் நாடகக் கலையின் நிலை—"வேணு"	...	64
மறுமலர்ச்சி கண்ட நாடகப் பெருந்தகை—டி, கே. ஷண்முகம்	...	67
நாடகக் கழகம்—தோற்றமும் வளர்ச்சியும்	...	73
மகத்தான சாதனை	...	77
பம்மல் சம்பந்தம் நூல்நிலையம்—திரு. வி. க.	...	79
எங்கள் நன்றி	...	79

விலை ரூ. 1.

Printed at the Vizia Rama Press, 2/11, Mount Road, Madras-2.



பாலு பிரதர்ஸ்

ஓவிய நிபுணர்கள்

2, தாயர் சாகிப் தெரு, :: சென்னை 2

[போன்: 85515]



காணிக்கை

நாடகப் பேராசிரியர் திரு பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மலராக "நாடகக் கலைக் களஞ்சியம்" என்னும் இத் தொகுப்பு நூலைக் கலை உலகத்திற்குக் காணிக்கையாக வழங்குகிறோம்.

இக் களஞ்சியத்தைக் கருத்து மிளிரும் எழுத்தோவியங்களால் அழகு படுத்திய தமிழ்ச் சிற்பிகளுக்கும், நாடக மேடையின் சிறப்பு வளர்ச்சியைக் கண்ணைக் கவரும் மூவண்ண அட்டைச் சித்திரமாக எழுதி உதவிய ஓவிய நிபுணர்களான பாலு சகோதரர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய மெய்யன்பர்களுக்கும், போட்டோ-ப்ளாக்குகளைக் கொடுத்துதவிய அன்பர்களுக்கும் அச்சு வாகனமேற்றித் தந்த விஜய ராமா அச்சகத்தாருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றி உரியதாகும். எண்பது வயது பூத்த இளைஞர் சம்பந்த முதலியார் அவர்களைப் பாராட்டுவதன் வாயிலாக நம் தாய் நாட்டுக் கலைஞர்களும் கலையன்பர்களும் நீடிய ஆயுளும், ஈடிலாப் புகழும், வாடிடா வாழ்க்கையும் பெற்று மகிழவேண்டுமென மனங்குளிர வாழ்த்துகின்றோம். வாழ்க நாடகக் கலை!

—நாடகக் கழகத்தினர்.

முத்தமிழ் மரபு

—(o)—

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று அழகிய பிரிவுகளை உடையதால் நமது மொழிக்கு முத்தமிழ் என்றும் நமது நாட்டிற்கு முத்தமிழ் நாடு என்றும் பெயர் உண்டாயிற்று.

ஆனால் இயலும் இசையும் செழித்து ஓங்கியுள்ள அளவுக்கு நாடகம் வளரவில்லை. எக்காரணத்தாலோ நாடகத் தமிழ் ஆதரவிழந்து விட்டது. ஆதரவிழந்த நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்துத் தமது வாழ்க்கையில் பெரும்பகுதியை அதற்காக அர்ப்பணித்துவரும் பெருமை நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்களுக்கே உரியது. முத்தமிழ் மரபைக் காத்து வளர்த்த அம் முதுபெருங் கிழவரின் 80-ம் ஆண்டு நிறைவு விழாவை யொட்டி அவருக்கு எங்களது அன்பு கலந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர் நீடூழி வாழ்ந்து நாடகக்கலையின் மாண்பை மேலும் உயர்த்துவாராக!

நாடகக் கலையின் வளர்ச்சி நல்ல நடிகர்களையும் பொறுத்திருக்கிறது. 'கலைவாணர்' என். எஸ். கிருஷ்ணன் 'அவ்வை' டி. கே. ஷண்முகம் போன்ற குணசித்திர நடிகர்களைப் பெற்றுள்ள நாம் பாக்கியசாலிகளே!

★

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

362, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,

எஸ்பிளேனட், சென்னை—1

நடிக மகராஜன்

[கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை]

தத்தளித்து நின்ற தமிழ்நா டகத்தாய்க்குப்
புத்துயி ரூட்டியநற் புண்ணியவான்—தித்திக்கும்
செந்தமிழ்ச் செல்வன் திருவளர் சம்பந்தன்
சந்ததம் வாழ்க தழைத்து.

அந்திமதி சூடிநின் றம்பலத்தி லாடிநிதம்
சிந்தைமகிழ் கூத்தன் திருவருளால்—செந்தமிழ்
நாடுபுகழ் சம்பந்தன் நடிக மகராஜன்
நீடுலகில் வாழ்க நிலைத்து.

கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்துநமக்கு
எண்ணரிய போதனைகள் ஈவதற்கு—நண்ணும்இந்த
நாடக சாலையொத்த நற்கலா சாலையொன்று
நீடுலகில் உண்டோ நிகழ்த்து.

★

பத்தரை மாற்றுத் தங்கம்

"புத்தமணி"

முத்தமிழ்க் கலையாய் நாட்டில்
நாடகம் முழங்கு மாறு
புத்துயி ரூட்டிக் காத்த
புகழினன் தொண்டை நாட்டின்

உத்தமன் அறிவும் அன்பும்
ஒழுக்கமும் ஒருங்கே பூணும்

பத்தரை மாற்றுத் தங்கம்
பம்மல்சம் பந்தம் வாழ்க !

சில வாழ்த்துரைகள்

Vice-President's Secretariat,
New Delhi,
January 19, 1953.

Thank you very much for your letter of 15th January. I am aware of the impressive contributions made by Rao Bahadur P. Sambanda Mudaliar to dramatic art, and it is only right that we should acknowledge our gratitude to him for his services.

Yours sincerely,
(sd.) Dr. S. RADAKRISHNAN.

*
* *

Madras-8,
January 18, 1953.

I am glad to learn that the Nataka Kazhagam is arranging to publish a special souvenir on Dramatic Art in connection with the 81st birthday celebration of Rao Bahadur P. Sambanda Mudaliar.

I have always held the view that the culture of any nation is best represented in its arts and literature, and in particular in its theatre and architecture. The art of drama has been considered to be one of the greatest of arts by our ancients. The Sage Bharata indeed described the art as containing the essence of the Four Vedas. The importance of the theatre at the present day cannot be minimised. It is a powerful vehicle of instruction, dissemination of ideas and even propaganda. It is therefore necessary to see that the highest standards are maintained in the art and that its integrity is not afected.

I join on this occasion in the tribute paid to the eminent dramatist for whom I have the highest regard.

Yours sincerely,
(sd.) P. V. RAJAMANNAR

*
* *

நாடகப் பேராசிரியர் திரு. ராவ் பகதூர ப. சம்பந்த முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி "நாடகக் கலைக்களஞ்சியம்" என்னும் மலர் ஒன்று வெளியிட நாடகக்கழகம் முன்வந்திருப்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய பெரியோரின் வாழ்க்கையைப்பற்றிய குறிப்புகள, நிகழ்ச்சிகள் அடங்கிய கலைக்களஞ்சியம் மலர் வர்யிலாக வெளிவரவேண்டியது மிகவும் முக்கியம். இதுவே நாம் அன்னாருக்குச் செய்யவேண்டிய கடமையும், நன்றியுமாகும்.

திரு. முதலியார் அவர்களை அறியாதவர் இம்மாகாணத்தில் ஒருவரும் இருக்க மாட்டார்கள். அதே போன்று அவர்கள் எழுதியுள்ள எண்ணற்ற தமிழ் நாடகங்களை மேடைகளில் கண்டு களிக்காதவர்களும் இருக்கமுடியாது எனறு சொன்னால அது மிகை யாகாது. திரு. முதலியார் அவர்கள தமிழ்க் கலைக்கும, தமிழன்னைக்கும். தமிழ்நாட்டுக்கும் இன்னும் நீண்டகாலம் தொண்டாற்றிவர இறைவன் நீண்ட ஆயுளையும், தேக நலத்தையும் அருளவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

— ராஜா. எம். ஏ. முத்தையா செட்டியார்.

திறந்த வெளி அரங்கு

நாடகக் கலைக்கு மக்களிடம் செல்வாக்கு வளர்ந்தோங்கி வருகின்றது. நாடகக் கழகத்தின் முயற்சியால் தமாஷா வரி நீக்கப்பட்டபின் சென்னை ராஜ்யத்தில் சனி ஞாயிறு தவறுமல் பல திறப்பட்ட நாடகங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் தரத்தைப்பற்றி இப்போது ஆராய வேண்டியதில்லை. அவற்ருல் கலை ஆர்வமும் கலைஞர்களின் திறமையும் வளர்ச்சி பெறுகின்றன என்ற மட்டில் பெருமை கொள்வோம்.

நாடகங்களுக்காகத் தனியே அரங்குகள் இல்லாதது மிகப்பெரிய குறையாகும். இக்குறை மேல் நாடுகளிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

"ஆங்கில நாட்டினரின் மதப் பண்பாட்டிற்கு செயின்ட் பால்ஸ் கத்தீட்ரலும் வெஸ்ட் மின்ஸ்டர் பள்ளியும் எப்படி உயர்ந்த சின்னங்களாக விளங்குகின்றனவோ அவற்றைப் போன்று நாடகக் கலைக்கும் ஒரு தேசிய நாடக மேடை உருவாகிக் கலையின் சிகரமாகக் காட்சி தரவேண்டும்" என்று பேரறிஞர் பெர்னுட்ஷா குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. நாடகம் தயாரிப்பதைவிட அதனை அரங்கேற்றுவதற்காகப் பணநிலைக்குத் தக்கவாறு மேடை தேடும் பிரச்னை மிகப் பெரிதாக உள்ளது! நாடகங்களின் மூலம் கிடைக்கும் வருமானம் சில சமயங்களில் தியேட்டர் வாடகையைச் சரிக்கட்டுவதற்கே போதுமானதாக இருப்பதில்லை. இதனுல் உயர்ந்த நாடகங்களை முனைந்து நடத்தும் துணிவு கலைஞர்களுக்கு ஏற்படுவதில்லை.

திறந்த வெளி அரங்கின் அவசியம் பற்றி திரு. ஜி. டி. ஸோந்தி என்பவர் 'மார்க்' என்னும் சஞ்சிகையில் எழுதியுள்ள யோசனைகளைக் குறிப்பிட்டு "ஹிந்து" பத்திரிகையில் 22-2-53 இதழில் ஒரு சிறந்த துணைத் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் 3 அடி உயரத்திற்கு மண்ணினுலாவது மேடையமைத்துப் போதிய பாதுகாப்புடன் ஆடம்பரம் எதுவும் இல்லாமல் சிக்கனமாகத் திறந்தவெளி அரங்குகளை உருவாக்கிக் கொள்ளலாம் எனத் திரு ஸோந்தி குறிப்பிட்டுள்ளாராம்.

திறந்த வெளி அரங்கம் நம் நாட்டிற்கு மிகப் பொருத்தமானது. வருடத்தில் சுமார் 9 மாதங்கள் திறந்தவெளியில் நாடகங்கள் நடத்தலாம். எனவே வசதி வாய்ந்த எல்லா ஊர்களிலும் திறந்த வெளி மேடை அமைக்கப்பட வேண்டியது அவசியம். நகரசபைகளும் பஞ்சாயத்து போர்டுகளும் ஊர்ப் பிரமுகர்களும் கலையுணர்வோடு முயன்ருல் எளிதில் அரங்குகள் அமைந்துவிடும். சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற பெரிய நகரங்களில் திறந்த வெளி அரங்குகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். நகரமன்றத் தலைவர்களும் உறுப்பினர்களும் இதுபற்றிக் கவனம் செலுத்தி விரைவில் தீர்மானங்கள் நிறைவேற்றி மக்களுக்கு எளிதில் பயன்படும்படி வசதியான திறந்த வெளி அரங்குகளை உருவாக்குவார்கள் என எதிர்பார்க்கிறேம்.

★

நாடகக் கலைக் கொடி

உலக நிகழ்ச்சிகளை உருவகப் படுத்திக் காட்டுவதே நாடகம். "உலகமெல்லாம் ஒரு நாடக மேடை" என்ருர் மகாகவி ஷேக்ஸ்பியர். இந்தத் தத்துவத்தை உணர்த்தும் முறையிலேயே தூய வெண்மையின் நடுவே நாடக அரங்கும் அரங்கின் உள்ளே உலகமும் பொறிக்கப்பட்டுள்ள கலைக் கொடியை நாடகக் கழகம் உருவாக்கியுள்ளது.

நாடகக் கலைக் கொடி சாதி, சமயம், நாடு, மொழி, கட்சி முதலிய எல்லாப் 'பாகுபாடு'களையும் கடந்த ஒரு பொதுச் சின்னமாக இருக்கவேண்டுமென்ற புனிதமான நோக்கத்துடன் நாங்கள் இக்கொடியை உயர்த்தியுள்ளோம். நாடகத்தால் நாடு நலம் பெறும் என்ற நம்பிக்கையுடையோர் யாவரும் இக் கலைக் கொடியின் கீழ் ஒன்றுபட்டுப் பணிபுரியுமாறு அன்புடன் வேண்டுகிறேம்.

நாடகக் கழகத்தினர்.

கிருஷ்ணா பிக்சர்ஸ்
மருமகள்
உங்கள் அபிமான நக்ஷத்திரங்கள்
அனைவரும் நடிப்பது
டைரக்ஷன்: யோகானந்த் .... ஸூப்பர்விஷன்: பிரசாத்



ஆதரவாளர்கள்

கே. காமராஜ்
ப. சம்பந்த முதலியார்

★



★





டிரஸ்டிகள்

எஸ். எஸ். வாஸன்
ஏ. வி. மெய்யப்பன்
ரா. கிருஷ்ணமூர்த்தி(கல்கி)
டி. கே. ஷண்முகம்
வி. ஸி. கோபாலரத்னம்

நிர்வாகிகள்
[1950 முதல் 1952 ஏப்ரல் வரை]

★



டி. கே. ஷண்முகம் (தலைவர்)





கே. சுப்ரமண்யம் டி. என். சிவதாணு
பொதுச் செயலாளர்கள்

கே. சாரங்கபாணி
பொருளாளர்

★ நாடகக் கழகம்

நிர்வாகிகள் [1952 ஏப்ரல் முதல்]



என். எஸ். கிருஷ்ணன்
தலைவர்



டி. கே. பகவதி
(நாடகப் பேராசிரியர் விழாவின் பொருளாளர்)



புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

டி. வி. சுந்தரம்

பொதுச் செயலாளர்கள்



ஜி. கோவிந்தராஜுலு நாயுடு
பொருளாளர்

நாடகப் பேராசிரியரின்
80ம் ஆண்டு நிறைவு விழா
1-2-1953

★

கலந்து கொண்ட
கலைஞர்களும், தலைவர்களும்

★

சில காட்சிகள்

தமிழரது ஆசை

[டி. கே. சி.]

ஆயிரக் கணக்கான வருஷமாகத் தமிழ் நாடு நாடகக் கலையில் திளைத்து மயங்கிக் கொண்டிருக்கிறது. ஊர் ஊராய் மந்தை நாடகம், நொண்டி நாடகம் போன்ற நாடகங்கள் பல. கல்யாணம் கல்யாணமாக பரத நாட்டியம். பரதநாட்டியம் என்றால் நாடகம் தான்.

இத்தனை நாடக அம்சங்களும் வீணாகவா போய்விடும்! கவிஞர்களை ஆட்டி விட்டன. அவர்கள் பாடுகிற கவிகள் எல்லாம் நாடகம் என்று சொன்னால் மிகையல்ல. கோவைகள் கலம்பகங்கள் எல்லாம் நாடகங்கள். தேவாரப் பாடல்களும் மற்ற பக்திப் பாடல்களும் அநேகமாய் நாடகங்கள்தான்.

எத்தனையோ நாடகங்கள் அரங்க மேடைகளில் அரங்கேறியதில் குறைவில்லை. எல்லாம் மறைந்து போய் விட்டன!

அவைகளின் வாரிசாக ஒரு நாடகம் நம் கைக்கு வந்திருக்கிறது. அதுதான் குற்றாலக் குறவஞ்சி. கவிகள் என்ன—பாத்திரங்கள் என்ன—நடனங்கள் என்ன—சங்கீதம் என்ன எல்லாம் சேர்ந்து நம்முடைய மனசைக் கொள்ளை கொண்டுபோகின்றன.

கலாக்ஷேத்திரத்தில் ருக்மணி தேவியார் குற்றாலக் குறவஞ்சியை அற்புதமாய் நடத்திக்காட்டுகிறார். கட்டாயம் பார்க்க வேண்டிய நாடகம். இருக்கட்டும்.

மேல் நாட்டாரிடம் குற்றாலக் குறவஞ்சி மாதிரி நாடகம் இல்லாதிருந்தது. அதாவது சங்கீதம் நடனம் கவி இவைகளால் ஆகிய நாடகம். அது குறையென்றே பட்டது மேல் நாட்டாருக்கு. அதன் மேல் இப்பொழுது அத்தகைய நாடகத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பெயர் ஆப்பரா (Opera). ஆனாலும் அவ்வளவு திருப்தியாக அமையவில்லை என்றுதான் மேல்நாட்டார் சொல்லுகிறார்கள். காரணம், கவியும் சங்கீதமும் அவர்களுக்கு வரமாட்டேன் என்று சாதிப்பதுதான்.

ஆகவே மேல் நாட்டார் வசன முறையிலேயே நாடகங்கள் எழுத ஆரம்பித்தார்கள். ஷேக்ஸ்பியர் கூட செய்யுள் உருவம் கொடுத்தாலும் நாடகங்கள் எல்லாம் வசனப்போக்கு தான் என்று மேல்நாட்டு நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

வசனப் போக்கிலேயே எழுதுவது எளிது. கேட்பவர்களுக்கும் எளிதாய்ப் போயிற்று.

அந்த வசனப் போக்கை ஒட்டி இந்தியர்களும் நாடகம் எழுதினார்கள். இதை ஆரம்பித்தது கன்னட ஆசிரியர்கள்தான். நரசிம்மராவ் செட், கோபால்ராவ் செட், சுந்தரராவ் செட் என்று ஆரம்பித்துத் தமிழ்நாட்டையே படை எடுத்து விட்டார்கள். தமிழ்ப் பண்பு என்பது அந்த நாடகங்களில் கிடையாது. பாட்டும் பேச்சும் ஏதோ ஒரு விதமான தமிழாய் இருக்கும். கன்னடத் தமிழ் என்று சொன்னால் குற்றமில்லை.

நாடகங்கள் தமிழ் நாட்டில் இந்த நிலையில் இருக்கும்போது ராவ் பகதூர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் தமிழ்ப் பண்பு கொண்டதான நாடகங்களை எழுதினார்கள். தமிழர்களுடைய மனசைக் கவர்ந்து விட்டன நாடகங்கள். அப்படிக் கவர்ந்த காரணத்தினாலேயே "நாடக சபாக்கள்" பல இடங்களிலும் உண்டாயின. நாடகங்களை நடித்தார்கள். தமிழர்களுக்கு என்றுமில்லாத விருந்தாய் இருந்தன. ப. சம்பந்தமுதலியார் அவர்களைத் தெரியாத தமிழன் இல்லை என்று ஆய்விட்டது.

தமிழ் நாட்டில் நாடக யுகத்தை ஸ்தாபித்தவர் ராவ் பகதூர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள்தான். இன்னும் பல்லாண்டு முதலியார் அவர்கள் ஆரோக்கியத்துடன் இருந்து நாடகக் கலையை வளர்க்க வேண்டும் என்பது தமிழர்களுடைய ஆசை.

நடிகர்களின் நல்வாழ்வு

[சி. என். அண்ணாத்துரை]

நாடகக்கலை முன்னேற்றத்திற்குப் பல காரியங்கள் நடைபெறவேண்டியிருக்கின்றன. முதலிலே, ஊருருக்குத் தியேட்டர் வசதிவேண்டும். இப்போது, எல்லாம் சினிமாக் கொட்டகைகளாகிவிட்டன. நாடகத்திற்கெனத் தனித் தியேட்டர்கள் இல்லை. திருச்சி நகரசபை ஒன்றில் மட்டுமே தனித் தியேட்டர் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, ஒவ்வொரு நகரசபையும் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்காரும், செல்வவான்களும், நாடகக்கலை அபிவிருத்திக்கு உதவி அளிக்க வேண்டும். இவைகளுக்காகப் பொது மக்கள் முயலவேண்டும்.

பொதுவாக, நாடகக்காரர் என்றால் முன்பெல்லாம் மதிப்புக் கிடையாது. நையாண்டி செய்வார்கள். பொதுமக்களுக்கும் நடிகர்களுக்கும் தொடர்பு இருப்பதில்லை. இப்பொழுது நடிகர்களிடம் நன்மதிப்பும், தொடர்பும் ஏற்பட்டிருக்கின்றன. இத்தொடர்பு நீடிக்க வேண்டும். இதனால் தக்க பயனும் ஏற்பட வேண்டும். நாடகக்கலை அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால், நாடகக் கலையின் முக்கிய அம்சமாக விளங்கும் நடிகர்களுக்கு நல்ல சம்பளம், வாழ்க்கை வசதி, முதலியன கிடைக்க வேண்டும். இலாபப் பங்கீடும் தரப்படவேண்டும். இவைகளைச் செய்யப் பெரிய கம்பெனிகள் முன் வருமா, என்பது சந்தேகம். அவைகள் கலை அபிவிருத்தி என்றால், சீனுக்குமேல் சீன், கலர்விளக்குக்குமேல் கலர்விளக்கு அமைப்பது, என்ற முறையிலே வருமானத்தை மேலும் மேலும் நாடக இயந்திரத்திற்கே செலவிடுகிறார்கள். அந்த இயந்திரம் பிரமாண்டமாகி விடுகிறது. அதன் பசியை அடக்கவே அவர்கள் முயலுகிறார்கள். ஆகவே அவர்கள் நடிகர்களின், நாடகத் தொழிலாளரின் வாழ்க்கை அபிவிருத்திக்கான வழிவகை செய்ய முன்வருவதில்லை. அவர்களின் வரவு செலவுக் கணக்குப் புத்தகம், இத்தகைய கலை அபிவிருத்திக்குத் தூண்டுவதில்லை. பங்குதாரர்கள் கொண்ட ஒரு லிமிடெட் கம்பெனி அமைக்கப்பட வேண்டும். அதிலே சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பட வேண்டும். அதன் வருவாயை நாடகத் தொழிலாளருக்கு (போனசாக) இலாபப் பங்கீடாகத் தரப்படவேண்டும் அப்போதுதான் திருப்தியான மனமுடைய நடிகர்கள் இருப்பார்கள். நடிப்பு நேர்த்தியாக இருக்கும். நாடகக் கலையும் வளரும். வேதனை நிரம்பிய வாழ்க்கையிலே உள்ள வித்வான் பாடுகிற காம்போதி கூட முகாரியாகத்தானே இருக்கும்? அது போலத்தான். நடிகருக்கும் நிம்மதி வேண்டும் வாழ்க்கையிலே. நிச்சயம்வேண்டும் தொழிலிலே, எத்தனையோ நல்ல நடிகர்கள், குரல் கெட்டுவிட்டதாலோ, கம்பெனிச் சட்ட திட்டங்களை மீறிவிட்டதாலோ, நடிகராக இருந்த நிலைபோய், நடுவீதிகளில் திண்டாடக் காண்கிறேன். பத்து வருடங்களுக்கு முன்பு பிரபல நடிகராக இருந்துவிட்டு, இன்று பிழைக்கும் வழியுமற்றுள்ள மாஜி நடிகர்களையும் பார்க்கிறேன். மீசையைத் தடவியபடி, நானுந்தான் இராஜபார்ட்டாக இருந்தேன் என்று கூறிக் கொள்வதைவிட அவர்களுக்கு வேறோர் சுவை இல்லை. இப்படி நடிகர்களின் வாழ்வு நொடித்துப் போகிறதென்றால், எப்படிப் படித்தவர்களும் பண்புள்ளவர்களும், நாடகத் தொழிலிலே ஈடுபடமுடியும்? அக்கறை கொண்டவர், முதலிலே, முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, நடிகர்களின் நாடகத் தொழிலாளரின் நலத்தைத்தான். அது நடைபெற்றால்தான் நாடகக் கலை முன்னேறும். வாழ்க நாடகக் கலை!

★

ஆடல்

"கல்வி யறிவினற் சிறந்தவர்கள் நூலாராய்ச்சியினால் அறிந்து கொள்ளும் அரிய நீதிகளைக், கல்வி நிரம்பாதவர்க்ளும் காட்சி மாற்றத்தாற் கண்டு உணரும்வண்ணம் செய்வது ஆடலாகும். ஆடலைக் கூத்தென்றும் நாடகமென்றும் வழங்குவர்."

—டாக்டர், உ. வே. சாமிநாதையர்.

நாடகப் பேராசிரியர் வாழ்க்கை வரலாறு

(புத்தனேரி ரா. சுப்பிரமணியன்)

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழின் முழக்கம் இன்று நாடெங்கும் கேட்கிறது. கூர்ந்து நோக்கினல் 'நாடகம்' ஒன்றிலேயே முத்தமிழும் பொருந்துவது விளங்கும். இயலும் இசையும் இல்லையானல் நாடகம் இல்லை! எனவே, நாடகக் கலையை 'முத்தமிழ்க் கலை' என்று சொன்னலும் பொருந்தும்.

முத்தமிழ்க் கலையாகிய நாடகத்தின்மீது இந்நாள் மக்களுக்கு ஒரு புதிய நாட்டம் பிறந்திருக்கிறது. 'பேசும் படக் காட்சிகளினல் நாடகக் கலை எங்கே நசித்து விடுமோ' என்று பலர் அஞ்சியதுண்டு. ஆனல் மக்களிடையே விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டுள்ள காரணத்தினலே, ஒருபுறம் திரைப்படமும், மற்ருரு புறம் நாடகமும்—ஒன்ரேடொன்று மோதுதலின்றி—வளர்ந்து வரும் சூழ்நிலை தோன்றி விட்டது. கலை வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி இது.

தமிழகத்தில் நாடகக் கலைக்கு ஒரு சிறப்பான இடம் இந்நாள் கிடைத்திருக்கிறதென்ருல் அதன் புகழ் அத்தனையும் 'நாடகப் பேராசிரியர்' திரு பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுக்கே உரிய தாகும். இதில் இரண்டுபட்ட கருத்து யாருக்கும் இருக்கமுடியாது.

துவண்டு கிடந்த நாடகப் பசுங்கொடியைத் தமது முயற்சி என்னும் கொழு கொம்பினல் தாங்கிப் பிழைக்கவைத்தவர் திரு. சம்பந்த முதலியார். அவரது முயற்சியால் நாடகம் புத்துயிர் பெற்றுத் தழைத்துப் படர்ந்து ஓங்குகின்றது.

"தொண்டை நன்னடு சான்ருேருடைத்து!" இந்த முது மொழியின் பொருள் திரு. சம்பந்த முதலியார் அவர்களோடு பழகியவர்களுக்குத் தான் நன்ருக விளங்கும்! கள்ளங் கபடற்ற உள்ளம்; கனிந்த மனப் பண்பு; நுண்ணறிவு; எவரிடத்தும் இனிமை ததும்ப, அடக்கம் தவழ, அன்பு முனைக்கக், குழைவாகப் பழம்போலப் பேசிக் குறுநகை புரியும் பெருந்தன்மை; அவ்வளவு குழைவிலும் தம் கருத்தை விட்டுக் கொடுக்காமல் ஆணித்தரமாக ஏற்றும் நல்லாண்மை. இத்தகைய சான்ருண்மைப் பண்புகளையெல்லாம் திரு சம்பந்த முதலியார் அவர்களிடம் சிறிது நேரமேனும் பழகியவர்களே காணமுடியும்.

திரு பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், சென்னைமாநகரில், பெருந்தன்மை பொருந்திய குடும்பத்தில், 1873, பிப்ரவரி முதல் நாள் தோன்றினர். அவருடைய தந்தையார் திரு. பி. விஜயரங்க முதலியார் நல்ல செல்வாக்குடையவர். பள்ளி கண்காணிப்பாளராகப் பணியாற்றிப் புகழ் பெற்றவர். முதன்முதல் தமிழ்ப்பாட நூல் எழுதியவருமாவர்.

திரு சம்பந்தம் தமது பச்சிளம் பருவத்திலேயே கல்வியிற் பேரார்வம் காட்டினர். பஞ்சுப் பொதியிலே தீ பற்றுகிற வேகத்தில் அவரது பக்குவப்பட்ட நெஞ்சிலே கல்விக் கனல் கொழுந்து விட்டு வளர்ந்தது. சென்னை கோவிந்தப்ப நாயக்கர் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, மாகாணக் கல்லூரி ஆகியவற்றில், முறையே அவரது கல்வி தங்குதடையின்றி வளர்ந்தது. இக் காலங்களில் அவருக்குப் பரிசாகக்கிடைத்த வெள்ளிப்பதக்கங்களும், பலப்பல. 'மெட்ரிகுலேஷன்' தேர்வில் மாகாணத்திலேயே முதல்வராகத் தேறி, திரு. ஜெயராம செட்டியாரின் தங்கப் பதக்கமும் பெற்ருர்.

பி. ஏ. வகுப்பில் ஆங்கிலத்தில் சிறப்பு வரிசையில் மாகாணம் முழுவதிலும் இரண்டாவது இடம் பெற்றுத் தேறினர். வரலாற்றுப் பகுதியில் முதல் வகுப்பில் தனிச் சிறப்போடு தேறும் பெருமையும் அவ்வாண்டில் திரு சம்பந்தம் ஒருவருக்கே கிடைத்தது.

கார்டன் (Gordon) வரலாற்றுப் பரிசு, பவல் (Powell) தமிழ்ப் பரிசு, பவுர்டில்லியன் (Bourdillion) பரிசு முதலியவைகளும் திரு சம்பந்தத்திற்கே கிடைத்தன. மாகாணக் கல்லூரிச் சுவர்களில் தொங்கும் சிறப்புப் பலகைகள் பலவற்றில் திரு சம்பந்தத்தின் பெயரை இன்றும் காணலாம். பல்வேறு சமயங்களில் தாம் பெற்ற பரிசுகளை யெல்லாம் தொகுத்து இன்னும் மிகக் கவனமாகப் பாதுகாத்து வருகிருர்.

இத்தகைய பரிசுகளைத் திரு சம்பந்தம் பெற்று விட்டாரென்ருல் அவ்வளவு எளிதானதல்ல! அவருடன் பயின்ற சர். வேப்பா ராமே

சன், பனகால் அரசர், பேராசிரியர் சிங்கார வேலர் முதலிய அறிஞர்களைத் தோற்கடித்துப் பெற்ற பரிசுகள் அவை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அந்தக் காலத்தில் திரு. 'ஸ்டுவர்ட்' (Mr. Stuart) என்னும் பேராசிரியர் ஒருவர் இருந்தார். அவர் யாரையும் விரைவிலே பாராட்டி விடமாட்டாராம்! எந்த மாணவரும் அவரிடம் உளங்கனிந்த பாராட்டுப் பெற்றதில்லை. ஆனால் திரு. சம்பந்தத்திற்கு 'ஸ்டுவர்ட்' துரைமகனாரின் பாராட்டும் கிடைத்துவிட்டது! இதனை அறிஞர் பலரும் வியந்து பாராட்டியுள்ளனர்.

கல்லூரிப் படிப்பும் முடிந்தது. நண்பர்களது தூண்டுதலின்படி திரு. சம்பந்தம் சட்டக் கலை பயின்று வழக்கம்போல் சிறப்பாகத் தேறினார். பின்னர்த் திரு. குமாரசாமி சாஸ்திரியார் என்னும் மாபெரும் வழக்கறிஞரிடம் சட்டப் பயிற்சி பெறும் வாய்ப்பும் கிடைத்தது. இதன் பயனாகச் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார். வாக்குத் திறம் வாய்ந்து வழக்கறிந்து மன்றாடிச் சிறப்பும் எய்தினார்.

1924-ல் சிறு வழக்கு நீதிமன்றத்தின் (Small Cause Court) நடுவராகத் (Judge) திரு. சம்பந்தம் அமர்த்தப் பெற்றார். அது முதல் *1928*-வரை சிறப்புடன் நீதி செலுத்தினார். *1928*-ல் அவருக்கு வயது *55* நிறையவே, நீதிபதி பொறுப்பினின்றும் ஓய்வுபெற வேண்டியதாயிற்று. நீதிபதியாக ஏழாண்டிற்குக் குறைவாகவே பணியாற்ற முடிந்ததாகையால் உதவிச் சம்பளம் (Pension) பெறும் வாய்ப்பும் இல்லாது போயிற்று. இடையே சிலகாலம் திரு சம்பந்த முதலியார் அவர்கள் தலைமை மாகாண மாஜிஸ்திரேட்டாகவும் பணியாற்றி யுள்ளார்

ஓய்வு பெற்றதும், தமக்கிருந்த நாடகக் கலை. யார்வத்தையும் திறமையையும் உருவான வழிகளிற் செலுத்தும் வாய்ப்பைப் பெற்றார். இளமையிலிருந்தே நாடகத்திலே தனிப்பட்ட ஆர்வமும் நடிப்புத் திறமையும் அவரிடம் பொருந்தி வளர்ந்துள்ளன.

மக்களின் வாழ்க்கை இயலை—உள்ளப் பாங்கைத் தம் நெஞ்சக் கண்ணாடியில் தெளிவாகக் கண்டார். தாம் கண்ட காட்சிகளைப் பற்பல நாடகங்களாக உருவாக்கி யுள்ளார். அவரியற்றியுள்ள சமூக நாடகங்கள் அத்தனையும் மக்கள் வாழ்வியலின் மறுபதிப்பாகவே விளங்குகின்றன.

இதுவரை தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் மிகப் பெரும்பாலானவை நாடகங்களே! ஏறத்தாழ *5500*-இடங்களில் அவருடைய பல்வேறு நாடகங்களும் நடிக்கப் பெற்றுள்ளன. இவை தவிர, அவருக்குத் தெரியாமலே பள்ளிகளிலும், பொது இடங்களிலும் நடிக்கப் பெற்றுள்ள அவருடைய நாடகங்கள் எத்தனையோ?

திரு. சம்பந்த முதலியார் அவர்கள் நாடகங்கள் எழுதுவதோடு அமைதியுறவில்லை, அவற்றில் நடிப்பதிலும் அவருக்குப் பேராவல். இதுவரை 500-க்கு மேற்பட்ட நாடகங்களில் அவர் நடித்திருக்கிறார். 'மனோஹரா' என்னும் நாடகத்தில் அவர் மனோஹரனாக நடித்த மாண்பினைப் பாராட்டாதார் இலர்.

'சுகுண விலாச சபை' என்னும் நாடகக்கலை நிலையத்தை நண்பர்களின் கூட்டுறவால், பல ஆண்டுகளுக்கு முன்பே துவக்கி, அதன் வழியாகப் பல நாடகங்களை நடத்தியிருக்கிறார். அந்நிலையத்திலே அரசியல் தலைவர்களும். அறிஞர்களும் ஆர்வத்தோடு ஈடுபட்டுப் போற்றினர்.

நாடு முழுவதும் அளவற்ற பாராட்டுதலுக்கு உரியதான பெருமை திரு. சம்பந்த முதலியாரின் 'சபாபதி' என்னும் நாடகத்துக்கே உண்டு. அதைப் படித்துவிட்டு வயிறு குலுங்கச் சிரித்து மகிழ்ந்தனர் தமிழர்கள். முகத்திலே சிரிப்பே இன்றிக் கூம்பிய உதட்டினராயுள்ளவர்கள் கூட 'சபாபதி'யைக் கண்டு சிரித்துத்தான் தீர வேண்டும்! அந்நாடகம் திரைப் படமாகவும் வெளிவந்து மக்களிடையே பெருங் களிப்பை உண்டாக்கியது.

மேலும், திரு, சம்பந்த முதலியார் அவர்கள் எழுதிய லீலாவதி சுலோசனா, தாசிப்பெண், ஊர்வசியின் சாபம், காலவரிஷி, யயாதி, ரத்னாவளி, வேதாள உலகம் முதலிய பல நாடகங்களும் பேசும் படக் காட்சிகளாக வெளிவந்துள்ளன.

நாடகக் கலையின் பெருமை, அதன் வளர்ச்சி இவைபற்றி 'இந்து' இதழில் திரு. சம்பந்தம் அவர்கள் எழுதிவந்த கட்டுரைகள் கலை யன்பர்களுக்கு விருந்தாக விளங்கின.

இன்றைய நடிகர் உலகம் திரு. சம்பந்தம் அவர்களைத் தம் தந்தையாகப் போற்றுகின்றது. சிறந்த கலைஞர்களின் உள்ளத்திலெல்லாம் அவர் வீற்றிருக்கிறார். சென்னையில் நடைபெற்ற ஒரு நாடகக் கலை மாநாட்டின்போது, மேடைமீது சிறந்த சினிமா நடிகரான திரு. எம். கே. ராதா, திரு. சம்பந்த முதலியார்

அவர்களின் தாள் பணிந்து, அவருடைய கைகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டு மகிழ்ச்சிக் கண்ணீரால் நனைத்த உள்ள நெகிழ்ச்சி இன்னும் என் கண்முன் காட்சி தந்துகொண்டிருக்கிறது.

தமிழ் இசை இயக்கம் துவங்கியவுடனே, தம் முதுமையையும் பொருட்படுத்தாமல் திரு. சம்பந்த முதலியார் அவர்கள் வீறுகொண்டு முன்வந்து, சென்னைத் தமிழிசைச் சங்கத் தொடக்க விழா வரவேற்புக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பண்பை— உணர்ச்சி வேகத்தை—யாரும் மறக்க முடியாது.

பொதுநலப் பணி என்றால் மிட்டாயைக் கண்ட குழந்தைபோல, ஆவலோடு முந்தி வந்து பொறுப்பேற்றுக் கொள்ளும் உணர்ச்சி திரு. சம்பந்த முதலியாரிடம் வளர்ந்தோங்கி உள்ளது. எத்தனையோ மாநாடுகளில் அவர் தலைவராக விளங்கியுள்ளார். 1944-ல் 'நாடகப் பேராசிரியர்' என்னும் பட்டத்திற்கு உரியவரானார்.

பழமை–புதுமை என்ற இரண்டையும் காளைகளாகப் பூட்டித் தம் வாழ்க்கைச் சகடத்தை நல்ல வழியிலே ஈர்த்துச் செல்பவர் திரு. சம்பந்த முதலியார். மயிலை கபாலி கோவிலின் அறங்காப்பாளராக 25-ஆண்டுகளுக்குமேல் எவ்வகையான குறைபாடும் இல்லாமல் தொண்டு செய்துள்ளார். திருக்கோயில்களில் அவர் சமயச் சொற்பொழிவுகளும் செய்வதுண்டு. அந்நேரங்களில் அவரது தோற்றம் நம்மைப் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய நாயன்மார் காலத்துக்குக் கொண்டு செல்லும்! நம்மிடையே நடமாடும் நாவுக்கரசர் போன்று அவர் காட்சியளிப்பார். ஆனால் பொது மேடைகளில் திரு. சம்பந்த முதலியார் அவர்களின் தோற்றமோ புதுமையிற் புரளும் மேலைநாட்டுத் துரைமகன் போன்றிருக்கும்! 'கோட்டு', 'சூட்டு', 'டை' இல்லாமல் மேடைகளுக்கு வரமாட்டார். கோவிலிலே சொற்பொழி வாற்றும் சம்பந்தரும், மேடையிலே வீற்றிருக்கும் சம்பந்தரும் ஒருவரே என்றால் யாரும் நம்பமாட்டார்கள்! இரண்டு தோற்றங்களிலும் அத்தகைய வேற்றுமையிருக்கும்.

எந்த அரசியற் கட்சியிலும் அவர் ஈடுபட்டதில்லை. தமிழ்த் தொடர்பான நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்து கொள்வார். கூட்டங்களில் அவர் மிகவும் மெல்லிய குரலிலே—ஆனால் அழுத்தமாக—நடிப்புணர்ச்சியோடுதான் பேசுவார். அவரது பேச்சிலே நகைச்சுவை மிகுந்து தோன்றும். சொற்போருக்கு இடந்தரக்கூடிய எவ்வகையான பிணக்குகளிலும் அவர் தலையிடவே மாட்டார்; ஒதுங்கிக்கொள்வார். தனிப்பட்ட முறையிலே வேண்டுமாயின் தம் கருத்தை விளக்குவார்.

பெற்றோர்களிடத்தில் திரு. சம்பந்த முதலியார் அவர்களுக்கு அளவிறந்த பற்றுதல் உண்டு. பெற்றோர் வணக்கம் என்பது அவரது அன்றாடத் திட்டங்களில் ஒன்று என்று சொல்லலாம். தம் தந்தையாரின் பெருமையைப்பற்றி அவர் எல்லோரிடமும் சொல்லிப் பெருமைப்படுவதுண்டு.

"ஒழுங்கு முறை" என்றால் என்ன என்பதைத் திரு. சம்பந்த முதலியார் அவர்களின் இல்லத்திற்குச் சென்றவர்கள் உணர்வர். ஒரு திட்டமில்லாமல் எந்தத் துறையிலும் அவர் இறங்குவதில்லை. தமிழைப் பற்றியானாலும் சரி, தம்மைப்பற்றியானாலும் சரி, செய்தித் தாள்களில் ஏதேனும் குறிப்பு வந்தால் அதனை உடனே கத்தரித்துத் தொகுத்து விடுவார். 1891-ம் ஆண்டிலிருந்தே இந்தப் பழக்கத்தைக் கையாண்டு வருகிறார். அவரது வீட்டில் செய்தித்தாள் துணுக்குகளின் தொகுப்புக்கள் பலவற்றை இன்றும் காணலாம்.

அண்மையில் அவரது வீட்டிற்குச் சென்றபோது, அவருடைய அன்றாட அலுவல்கள் என்னவென்று கேட்க நேர்ந்தது. உடனே தயக்கம் இன்றி, ஓர் அலமாரியைத் திறந்தார்; ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த துண்டுச் சீட்டை எடுத்துக் காட்டினார். அதில் அவருடைய அன்றாட நிகழ்ச்சி முறை—விடியற் காலையில் எழுவது முதல் இரவு படுக்கைக்குச் செல்வதுவரை—ஒன்றுவிடாமல் மணிக்கணக்குகளோடு குறிக்கப்பட்டிருந்தது. அக்குறிப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வைத்ததாகவும் தோன்றியது! அதே முறையை இன்றும் பின்பற்றி வருவதாகவும் கூறினார்.

இளமை முதல் அயராது தொகுத்து, உள்ளபடி உணர்ந்து குறித்துவந்த பற்பல செய்திகள் மேலும் நூல்கள் எழுதுவதற்குரிய வாய்ப்பை அவருக்குத் தந்துள்ளன. இம்முறையினால் காலக் குறிப்புகள், உணவுப்பொருட் குறிப்புகள் போன்ற நூல்களை வெளியிடும் வாய்ப்புப் பெற்றார்.

அவர் எழுதிய இன்னும் சில நூல்கள் அச்சிடப் பெறாமல் இருக்கின்றன. 'தமிழ் மொழி வரலாறு' பற்றிய கையெழுத்துச் சுவடி

யொன்றும் திரு. முதலியார் அவர்களிடம் உள்ளது.

நாடகக் கழகம் என்னும் கலை நிலையம் 1950-ல் தோன்றியது பற்றி திரு. சம்பந்தம் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அது மக்களின் மதிப்பிற்குரிய பொது நிலையமாகத் திகழ வேண்டு மென்னும் ஆசையோடுதான் அதன் ஆதரவாளராக விளங்கி வருகிறார்.

இப்போது நம் நாடகப் பேராசிரியர் அவர்களுக்கு 80-ஆண்டுகள் நிரம்புகின்றன. ஆண்டிலும் தமிழறிவிலும் பழுத்து விளங்கும் அவரது உள்ளத்திலே இளைஞர்க்குரிய உணர்ச்சியும் ஆர்வமும் குடிகொண்டுள்ளன. செந்தமிழ்மீதும் தமிழ் நாட்டின் மீதும் அவருக்கு அளவிலாப் பற்று உண்டு. சென்னை நகரின்மீது ஆந்திரர் உரிமை கொண்டாடுவதை உணர்ந்தபோது அவரது உள்ளம் குமுறலாயிற்று. மனத்துடிப்பைப் பல மேடைகளிலே கொட்டியிருக்கிறார். அவருடைய வாழ் நாளிலேயே, 'சென்னை தமிழ் மாகாணத்துடன் சேர்ந்து விட்டது' என்ற நற்செய்தி மலர்வதால் அவருக்குப் புதிய ஊக்கம் ஊறியுள்ளது.

திரு. சம்பந்த முதலியார் அவர்களின் மணி விழாவை உரிய சிறப்போடு கொண்டாடத் தவறிய தமிழகம் அவரது 80-ம் ஆண்டு நிறைவு விழாவை மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடித் தன் குறையைத் தீர்த்துக்கொண்டது. திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் தலைமையில் இவ் விழா கொண்டாடப்பட்டது. சென்னை முதலமைச்சர் டாக்டர் ராஜாஜி அவர்கள் முதலியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தினார். மாறுபட்ட கருத்துடைய அரசியல் தலைவர்களும் கலைஞர்களும் ஒரே மேடையில் முக மலர்ந்து கலந்துகொண்டு பாராட்டியது இவ் விழாவிற்குத் தனிச் சிறப்பை யளித்தது. இதனைத் திறமையாக நடத்திய பெருமை நாடகக் கழகத்துக்கே உரியது.

இவ்வளவும் எழுதிய பிறகு, முதலியார் அவர்கள் என்னிடம் கூறிய ஒரு குறிப்பு நினைவுக்கு வருகிறது: "யார் யார் என்னைப் பற்றிக் கண்டித்துக்குற்றங்குறைகளை வெட்டவெளிச்சமாக்குகிறார்களோ, அவர்கள்தாம் என் நண்பர்கள்; என்னைப் புகழ்பவர்கள் எனக்குப் பகைவர்களே!"

இந்தக் கோட்பாட்டின்படி யான் அவருடைய நண்பனானாலும் சரி, பகைவன் ஆனாலும் சரி; அது பற்றிக் கவலையில்லை, தமிழ் நாடகக் கலை உயர்வின் எல்லையை எட்டிப் பிடித்திருக்கும் நாடகப் பேராசிரியரின் பெருமையை உண்மை பிறழாமற் கூறிவிட்டேன் என்ற ஆறுதல் மட்டும் எனக்கு உண்டு. எனவே பெருமிதம் அடைகிறேன்.

வாழ்க நாடகப் பேராசிரியர்!

உலகியல் வாழ்வை யெல்லாம்
உணர்ச்சியோ டுருவ மாக்கிப்
பலசுவை யினிது கூட்டிப்
பாட்டுடன் கதையும் சொல்லும்
இலகுநாட் டியமுங் காட்டி
எழில்பெற நிகழும் வேதம்
நலமுயர் புகழின் ஓங்கும்
நாடகக் கலைய தாமே!...

—சுத்தானந்த பாரதியார்,

கலையும் வாழ்வும்

['கலைவாணர்' என். எஸ். கிருஷ்ணன்]

அழகுடையது கலை; ஆனால், அழகு மட்டும் கலையல்ல, அழகுபடுத்துவதுதான் கலை. எப்படி?

மாலை நேரம். கதிரவன் தன் ஒளியில் வான வீதியில் தங்க முலாம் பூசிய வண்ணமாகவே ஆழியை நோக்கி அதிவேகமாக மறையப் போகும் மனோஹரக் காட்சி கண்ணையும் கருத்தையும் கவரும் அழகின் பரிமளிப்பு. ஆனால் இது கலையா?

இந்தக் காட்சியை ஒரு சித்திரக்காரன் காண்கின்றான்; புறக்கண்களால்மட்டும் அல்ல; அறிவுக் கண்களாலும் பார்க்கின்றான். சித்திரக்காரன் சிந்தையிலே இந்த அழகுக் காட்சி செவ்வையாகப் பதிகிறது. பின்பு விந்தையாக உருவகமாகிறது சித்திரமாக வெளிவருகிறது. இங்கே, கலை உற்பத்தியாகிறது. ஆகவே, கலையும் அழகும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கின்றன.

அழகு நிறைந்த அந்தி சூரியனின் அதி மனோஹரக் காட்சி வாழ்வுக்கு வகை தேடுவதாகும். உதய சூரியன் வான வீதியில் தோன்றி சஞ்சாரம் செய்து தனது கடமையைத் திறமையாகச் செய்கிறான். உச்சி வானிலே வந்த சூரியன் அப்படியே ஆடாமல், அசையாமல் எப்போதும் ஒரே நிலையாக நின்று விடுவதானால் உலக வாழ்வு என்னவாகுமென்பதை சிந்தித்துப்பாருங்கள். சூரியாஸ்தமனம் இல்லாவிடில் உலக வாழ்விலும் அஸ்தமனம் ஏற்பட்டுவிடும். என்று சொல்லவா வேண்டும்? ஆகவே அழகுக் காட்சிகள் ஒருவிதத்தில் கலைக்கு உதவியாயிருப்பதுபோல் வாழ்வை வளப்படுத்தும் வகையிலும் பேருதவியாக அமைந்திருக்கிறது. இன்னும் வாழ்க்கையை வளம்செய்யும் மக்கள் மனப்பண்பை வளரச் செய்யும் பல்வேறு துறைகளிலும் கலைகள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. முக்கியமாகத் தொழிலுக்கும் கலைக்கும் தொன்றுதொட்டே நெருங்கிய தொடர்புண்டு.

சுடும் வெய்யிலில் கல்லுடைக்கும் தொழிலாளத் தோழன், கால வேகத்தில் கோபுரம் கட்டும் கலைஞனாகிறான். உளிகொண்டு வேலை செய்யும் ஒருவன், அம்மி கொத்தும் சாதாரணமான ஒருவன், நாளடைவில் தொழிலூக்கத்தினாலும் உயர் நோக்கத்தினாலும் கலையை விளக்கும் சிலையைச் செய்யும் சிற்பியாகின்றான். இதிலிருந்து கலைவளர்ச்சிக்கு, தொழில் பெருக்கம் எவ்வளவு தூரம் தேவையாகவும், உதவியாகவும் இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே கலையைப் போற்றுவது தொழிலைப் போற்றுவதாகும். இந்தக் கருத்தைக் கொண்டுதான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் கலைமகளின் இருப்பிடங்களைக் குறிப்பிடும் முறையில்,

"நாடிப் புலன்கள் உழுவார் கரமும்"

என்றார். ஏர்பிடித்து உழும் உழவனின் உழைப்புக் கரத்தில் கலைமகள் களிநடனம் புரிகின்றாளாம். தொழிலாளியின் உயர்வும் கலைக்கும் தொழிலுக்குமுள்ள பிணைப்பும் இதில் வெகு அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ந்தால்தான் கலை வளரும். தொழிலாளர்கள் பெருகிய தேசத்தில்தான் கலைஞர்கள் தோன்றுவார்கள். பாரதியார்,

"கலை வளர்ப்போம் கொல்லர்
உலை வளர்ப்போம்"

என்று பாடி வைத்ததின் கருத்தும் இதுவேதான். கலையை வளர்ப்பதும், தொழிலை வளர்ப்பதும் ஒன்றேதான், மக்கள்வாழ்வில் கலை, பின்னிப் பிணைந்து கிடக்கிறது. கலை யில்லையென்றால் வாழ்வில்லை. ஏன் வாழ்வில் ருசியில்லை; சுவையில்லை.

குழந்தை நன்றாகத் தூங்குவதற்கு இசையின் ஒரு பகுதியான தாலாட்டுப் பாட்டு உதவுகிறது. சின்னஞ்சிறு குழந்தை நன்றாகத்தூங்கினால்தான் வளர்ச்சியடையும், வாழ்வு பெறும். நோய் நொடிகள் அகலும். ஆகவே குழந்தைகளின் நல்வாழ்வுக்கு இசைக்கலை மிகத் தேவையாயிருக்கிறது; இருந்து வருகிறது.

அடுத்தபடி பிள்ளைப் பருவம். இந்தப் பருவத்திலேதான் விளையாட்டுகள்-வேடிக்கைகள் எல்லாம். வாழ்வின் இன்பமானபகுதி நம்மை யறியாமலே, நம்மிடையே வந்து நடமாடிப்போகும் வாழ்வின் இன்பப் பகுதி. விளையாட்டாக பிள்ளைப்பிராய வாழ்வில் கலை பிணைக்கப்பட்டிருக்கிறது—இல்லை—பிணைந்தே யிருக்கிறது. பல விளையாட்டுகள் உண்டு. உதாரணமாக கிளித்தட்டு என்ற விளையாட்டை எடுத்துக்

கொள்ளுங்கள். கோட்டையைத் தாண்டி தந்திரமாக—ஆனால் தைரியமாக முன்னேறிச் செல்லும் முயற்சியில் விளைந்த குதூகல விளையாட்டு இது. வாழ்க்கையிலும் பல கோட்டைகளைத் தாவிச் செல்ல வேண்டிய நாம் பிள்ளைப் பிராயத்திலும் இதைச் செய்கிறோம். கிளித் தட்டில் மறிப்பவனை ஏமாற்றி அங்கும் இங்கும் ஓடி துணிச்சலாக முன்னே போகவேண்டும். நடுவே பறந்தடிக்கும் கிளி சுற்றிக்கொண்டே யிருக்கும் இதன் கையிலும் அகப்படக்கூடாது. வெகு சாமர்த்தியமான விளையாட்டு.

பெண்களுக்கு, கும்மியடித்தல், கோலாட்டம், போன்ற விளையாட்டுக் கலைகள். இவை வெறும் வேடிக்கைக் கூத்து மட்டுமல்ல, உறுப்புக்களுக்கு ஊக்கமும், உறுதியும் வளர்ச்சியும் தரும் உயர்ந்த அமைப்பு முறையைக் கொண்ட உன்னத விளையாட்டுக் கலை. கன்னிப்பெண்கள் ஆடும் கலை விளையாட்டு.

இனிப் பாட்டாளி மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபடும் போது, பாடிக் கொண்டு வேலை செய்து வருவதை நாம் பார்க்கிறோம். கல்லுடைக்கும்போதும் பெரிய பெரிய பாரங்களைப் புரட்டும்போதும் பாடுகிறார்கள் பாட்டாளிமக்கள். இந்த முறையில் ஏற்பட்டவைகளே ஏற்றப்பாட்டு, முதலியன.

நான் ஒரு நடிகன் என்பது தெரிந்தது தானே! ஆனாலும் சொல்லி வைக்கிறேன். ஏனென்றால் நாடகக் கலையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லுவேன் என்று நீங்களும் எதிர்பார்ப்பீர்கள். நானும் சொல்லித்தான் ஆகவேண்டும். மக்கள் வாழ்வைச் சீர்படுத்தும் வகையிலே, செப்பனிடும் முறையிலே, பண்படுத்தும் பாதையிலே சீர்திருத்த நெறிகளை நாடக ரூபமாக நடிப்புக் கலையின் மூலமாக எடுத்துக்காட்டி வெகு வேகமாக அரிய பெரிய நன்மைகளைத தேசததில் செய்து விடலாம். நாடகசபைகள் இந்தத் தொண்டைநாட்டுக்குச் செய்து வருகின்றன.

நாடகக்கலைக்கு ஏனையக்கலைகளைக் காட்டிலும் அபூர்வ சக்தியொன்றுண்டு. மக்களை உடனடியாகச் செயலில் (action) இறங்கச் செய்வது நாடகக்கலைதான். இதனால்தான் நாகரீக நாடுகள் தங்கள் சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கு நாடகங்களைக் கருவியாக உபயோகித்து வந்தார்கள்; வருகிறார்கள். வெற்றியும் கண்டார்கள்.

"ஆயிரம் பிரசங்கங்களைவிட ஒரு நல்ல நாடகம் எவ்வளவோ மேலானது" என்று ஒரு பேரறிஞர் சொல்லியிருப்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

நாடகக் கலை மிக்க சக்தி வாய்ந்ததென்பது மறுக்க முடியாத உண்மை. பொதுவாக எல்லாக் கலைகளும், குறிப்பாக நாடகக் கலை ஒளி தரும் விளக்கைப்போன்றது. திருவிளக்கின் ஒளியால் திருக்குறளும் படிக்கலாம்; திருட்டுக் கையெழுத்தும் போடலாம். பந்தத்தின் உதவியால் பாதை தெரிந்தும் நடக்கலாம். பக்கத்து வீட்டையும் கொளுத்தலாம். விளக்கை உபயோகப்படுத்தும் முறையிலிருக்கிறது விளையும் பயன். பயன்படுத்தும் மனிதனின் மனப் பண்பைப் பொறுத்திருக்கிறது. இதை நாம் நன்றாக-குறிப்பாக நாடகக் கலைஞர்கள் நாடகப் புலவர்கள், புரவலர்கள் முதலியோர் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

கலையை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அது வாழ்க்கையோடு பிணைந்து கிடப்பதைக் கண்டு கொள்ளலாம். தொழிலோடு ஒன்றியிருப்பதை உணரலாம். தொழிலில் முதிர்ச்சியும் தேர்ச்சியும் ஏற்படும்போது கலை தோற்றமளிக்கிறது, ஆனால் தொழிலில் தேர்ச்சி பொருளையும் தருகிறது. இங்கேதான் கலைக்கும் காசுக்கும் ஒரு சிக்கல்; போராட்டம்; மோதுதல்; முட்டுதல் எல்லாம்.

தொழிலின் தேர்ச்சியும் முதிர்ச்சியும் பொருளைக் கொண்டுவந்து குவிக்கவேண்டும் என்று கருதும் தருவாயில் அங்கே கலை மறைகிறது. இங்கே பொன்னுண்டு; பொருளுண்டு; பணியாட்கள் பல உண்டு. ஆனால் புகழ் ஓடி ஒளிந்து கொள்கிறது, ஆனால் தொழிலின் நல்லாக்கத்தில், ஆற்றலில் கலை மிளிரும்போது கலைஒளி கதிர் விட்டுப் பிரகாசிக்கும் போது காசு பணம் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரியாமல் மறைகிறது. கலைக்கும் காசுபணத்துக்குமிடையே இப்படி மிகப் பெரிய பள்ளமுண்டு என்பதை இங்கேதான் நாம் நன்றாக அறிகிறோம்.

மனித வாழ்வில் எஞ்சி நிற்பதும், நிலைபெறுவதும் புகழ் ஒன்றேயாம். வாழ்க்கையில் சுவை மிக்க பாகம் புகழ் மணம் வீசும் புனிதப் பகுதி தான். இதை கலைஞன், தன்சிந்தனை சக்தியாலும் கலையாக்கத்தாலும் எட்டிப் பிடிக்கிறான், அவன் காசைப் பெரிதாகக்கருதமாட்டான். பொன்னைப் பெரிதாகக் கருதமாட்டான். அவன் எவருக்கும் எந்தமுறையிலும் கட்டுப்படமாட்டான். நாட்டின் நற்றொண்டே கலைஞனின் லட்சியம். எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அவனுக்கு இன்பம்.

இப்போது சொல்லுங்கள். கலைஞர்கள் நாட்டுக்கும் நல்வாழ்வுக்கும் எவ்வளவு தேவையானவர்களென்று......!

நாடகத்திலே மலர்ந்த அன்பு

[வெ. சாமிநாத சர்மா]

முந்தியெல்லாம் சென்னை சுகுண விலாச சபையார் பிரதி வருஷமும் கிறிஸ்துமஸ் விழாவின்போது தினந்தோறும் நாடகங்கள் நடத்துவது வழக்கம். அநேகமாக ஒவ்வொரு நாடகத்திற்கும் நான் செல்வதுண்டு. அமெச்சூர் நாடக சபைகளுக்குள் சுகுண விலாச சபை முதல் இடம் வகித்திருந்த காலம் அது. அதே பிரகாரம் ஸ்ரீ பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் நடிப்புத் திறனும் உச்ச நிலையை யடைந்திருந்தது. அவருடைய நடிப்புத் திறனைக்கண்டு களிப்பதிலே எனக்கிருந்த ஆர்வமும் உச்ச நிலையை யடைந்திருந்தது. அவரைப்போல் நாடகங்கள் எழுதவேண்டுமென்றும் நடிக்கவேண்டுமென்றும் எனக்கு அப்பொழுதிருந்த ஆசை சொல்லி முடியாது. ஆனால் என்னோடு பிறந்துள்ள கூச்சமானது அவருடன் நேர்முகமான தொடர்பு கொள்ள முடியாதபடி தடுத்துவிட்டது. இன்னும் அந்தக் கூச்சம் என்னை விட்டுப் போகவில்லை. ஸ்ரீ சம்பந்த முதலியார் அவர்களை நான் நேரில் அறியேன். அமெச்சூர் நடிகர்களில் பலர் அவரைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டதுபோல் நானும் கொண்டிருந்தால், இன்னும் அதிகமான நாடகங்கள் எழுதியிருப்பேனோ என்னவோ? இன்னும் அதிகமான சந்தர்ப்பங்களில் நடித்திருப்பேனோ என்னவோ? ஆனால் நாம் நினைக்கிறபடி நடக்கிறதா? நமது ஆசையெல்லாம் நிறைவேறுகின்றனவா? அஃதிருக்கட்டும்.

1914-ம் வருஷம் டிசம்பர் மாதம் கடைசி வாரம் நாள் ஞாபகமில்லை. விக்டோரியா பப்ளிக் ஹாலில் சுகுண விலாச சபையாரின் 'சாரங்கதரன்' நாடகம் நடக்கிறது. ஸ்ரீ 'சம்பந்த முதலியார் 'சாரங்கதரன்' ஸ்ரீ சி. ரங்கவடிவேலு முதலியார் 'சித்ராங்கி', ஸ்ரீ டி. சி. வடிவேலு நாயக்கர் 'ரத்னாங்கி'. ஒவ்வொருவருடைய நடிப்பிலும் உணர்ச்சி பொங்குகிறது. சாரங்கதரன் கொலைக் களத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அவனது நடையிலும் பார்வையிலும் அவன் நிரபராதி என்பது புலப்படுகிறது. ஐயோ, ரத்னாங்கி புலம்புகிறாள். புலம்பலைக் கேட்கிறவர்களும் புலம்புகிறார்கள். 'காலரி'யில் எனது உறவினர் ஒருவருடன் உட்கார்ந்திருந்த நான் அப்படியே மூர்ச்சையாகிவிட்டேன். பிறகு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. சாரங்கதரன் கொலைக் களத்திற்குச் சென்றானா? அங்கே அவன் கதி என்னவாயிற்று? ஒன்றையும் நான் அறியேன். இதற்காக, நாடக முடிவு வரை இருந்து பார்த்துவிட வேண்டுமென்பதற்காக, என் உணர்ச்சிகளை ஒரு நிதானத்திற்குட்படுத்தி வைத்துக்கொண்டு மற்றொரு முறை சாரங்கதரன் நாடகத்தைச் சென்று பார்த்து வந்தேன். இப்பொழுது எனக்கு ஞாபகம் இருக்கிற வரை, சுகுண விலாச சபையின் 'சாரங்கதரன்' நாடகத்தை ஐந்தாறு தடவை பார்த்திருப்பேன்.

சிறிது நேரங் கழித்து மூர்ச்சை தெளிந்தது. கண் விழித்துப் பார்த்தேன். 'காலரி'க்குப் பின்புறம் சமமாயுள்ள ஓரிடத்தில் படுத்துக்கொண்டிருந்தேன். என் பக்கத்தில் ஓர் உருவம் மண்டியிட்ட வண்ணம் அமர்ந்திருந்தது. கருத்த உருவந்தான். ஆனால் அதன் முகத்திலேதான் என்ன வசீகரமான புன்சிரிப்பு! நான் கண் விழித்ததைக் கண்டதும், மலர்ந்த முகத்துடன் அந்த உருவம் என்னைக் கேட்டது:- "எப்படி யிருக்கிறது?" நான் பதில் கூறினேன்:-'பரவாயில்லை, அசதியாயிருக்கிறது' அவ்வளவுதான். "சிறிது நேரத்தில் எல்லாம் சரியாகிவிடும், இதைச் சாப்பிடுங்கள்" என்று சொல்லி, அந்தக் காரணைய மேனி ஒரு சோடாவை உடைத்து என்னிடம் கொடுத்தது. நானும் சிறிது குடித்துக் களை தீர்ந்தேன். உடனே அந்த உருவம் என்னை மெதுவாக எழுப்பித், தன் மார்பிலே சார்த்திக்கொண்டு, தன் கைக்குட்டையால் என் முகத்தில் படிந்திருந்த ஈரத்தைத் துடைத்தது. "ஏன் இப்படி முகமெல்லாம் ஈரமாகிவிட்டிருக்கிறது?" என்று கேட்டேன்.

'சோடா தண்ணீர் பட்டிருக்கிறது. மூர்ச்சை தெளிய சோடாவை உடைத்து ஜலத்தை முகத்தில் தெளித்தேன். அதனுல்தான் ஈரம்!'' என்று பதில் வந்தது.

"இந்தப் பேருபகாரத்தைச் செய்த தாங்கள் யாரென்பதை நான் அறிந்துகொள்ளலாமா?''

"நான் யாராயிருந்தாலென்ன? நாடகம் எப்படி யிருந்தது? சாரங்கதரனின் பரிதாப கோலத்தைக்கண்டு மூர்ச்சையானீர்களா? அல்லது ரத்னங்கியின் புலம்பலைக்கேட்டு மூர்ச்சையானீர்களா?'' இதைச் சொல்லிவிட்டு லேசாகச் சிரித்தது அந்த உருவம். அந்தச் சிரிப்பு, இப்படியும் தன்வசமிழந்து விடலாமா?' என்று கேட்பதுபோலிருந்தது.

"ஒன்றைக் கண்டேன்; அதே சமயத்தில் மற்றொன்றைக் கேட்டேன். கண்களில் விருந்து நீர் பெருகியது. அவ்வளவு தான் எனக்கு தெரியும்.''

"இனி, தங்களுக்கு உடம்பு ஒன்றுமில்லை. நாடகமும் முடிந்துவிட்டது. "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே'' பாடுகிறார்கள். தாங்கள், சுகமே வீடுபோய்ச் சேருங்கள், தங்கள் உறவினருடன்.''

"அப்படியே போகிறேன். ஆனல் அதற்கு முன்னர், தங்களை நான் அறிந்து கொள்ளவேண்டும்."

"ஏன்?"

'என் நன்றியைத்தெரிவித்துக்கொள்ள!'

"எப்படித் தெரிவித்துக் கொள்ளப் போகிறீர்கள்?'' மறுபடியும் பழையமாதிரி சிரிப்புதான்.

"தங்கள் வீட்டிற்கு நேரில் வந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வேன். தங்கள் விலாசத்தைச் சொல்லுங்கள்.''

"நான் இருப்பது சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள உலகப்ப மேஸ்திரி தெருவில்! சதாவதானம் தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் என்று கேட்டால் அங்கு யாரும் சொல்வார்கள்.''

என் ஆச்சரியத்திற்கு அளவேது? இரண்டொரு நாள் கழித்து மேற்படி விலாசத்திற்குச் சென்றேன். பாவலரைக் கண்டேன். என்னை அப்பொழுது ஆங்கில மொழி மோகம் பற்றிக்கொண்டிருந்ததாயினும் அதற்கடியில் தமிழ்ப்பற்று இருப்பதை அவர் தம் நுண்ணறிவால் கண்டார். அவரது தமிழ்ப்புலமையைக் கண்டு நான் வியந்தேன். அது முதற்கொண்டு நாங்கள் நெருங்கிய நண்பர்களானேம். வாரத்தில் இரண்டு மூன்று தடவையாவது நாங்கள் சந்திக்காமலிருந்ததில்லை.

ஸ்ரீ பாவலர், நாடகக் கலையில் பெரிதும் ஈடுபட்டவர்; அந்தக்கலை செழிக்க வேண்டுமென்பதற்காக அதிகம் பாடுபட்டவர். சுகுண விலாச சபையாரும் ஸ்ரீ சம்பந்த முதலியார் அவர்களும் அவருடைய ஆலோசனைகளை அடிக்கடி கேட்டு அனுகூலமடைந்தார்கள்.

சிறு பிள்ளைகளடங்கிய நாடகக் கம்பெனியொன்றை ஆரம்பித்துத் திறம்பட நடத்தி வந்தார் பாவலர். லண்டன்மா நகருக்கருகிலுள்ள வெம்ப்ளி என்ற இடத்தில் 1924–25-ம் வருஷங்களில் நடைபெற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பொருட் காட்சிக்குத் தமது 'பாய்ஸ் கம்பெனி' யுடன் சென்று அநேக நாடகங்கள் நடத்திக் காட்டினர். டி. கே. எஸ். சகோதரர்களும் இன்னும் பலரும், இளமைப் பருவத்தில் இவருடைய 'பாய்ஸ் கம்பெனி' யில் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களே நடிப்புத்திறனுள்ள சிறுவர்களைப் பொறுக்கி யெடுப்பதிலும், அவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிப்பதிலும் இவருக்கிருந்த திறமை வியக்கத் தக்கது. இவரே சில நல்ல நாடகங்களையும் எழுதியிருக்கிருர்.

அமெச்சூர் நாடக உலகில் ஸ்ரீ சம்பந்த முதலியார் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற புகழ் பாவலருக்கு ஏற்படவில்லையென்பது உண்மை. ஆனல் அந்த உலகில் இவருக்கு நிரந்தரமான ஒரு ஸ்தானம் உண்டு என்பது நிச்சயம்.

ஸ்ரீ சம்பந்த முதலியார் அவர்கள் பலமொழிப் புலவர்; ஆராய்ச்சித்துறையில் ஆர்வமுடையவர்; நெறிதவருத நியாயவாதி; நீதிபதியாகவும் சில ஆண்டுகள் அலுவல் பார்த்தார்; ஆனலும், நாடகக் கலைக்கு நல்வாழ்வு நல்கவேண்டுமென்பதற்காகவே வாழ்ந்துவருகிருர். இப்படித்தான் அவருடைய வாழ்க்கையைத் தொகுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. அவரது எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்ற நாம், அவரது நூறும் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடத் தயாராயிருப்போமாக!

தெருக் கூத்து

[பெ. தூரன்]

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னலே எங்கள் கிராமத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒரு பெரியவர் என்னைப் பார்த்து "கூத்துப் பார்க்க வருகிறாயா?" என்று கேட்டார். இன்றைக்குக் கேட்டதுபோல அது எனக்கு அப்படியே நினைவில் இருக்கிறது. "தம்பி இன்னைக்கு ராத்திரி அர்ச்சுனன் தபசு நாடகம் ரொம்ப நல்லா இருக்கும் நாங்கள் எல்லாம் போகிறோம். நீயும் வாரையா?" என்று இப்படி அவர் கேட்டார். கூத்துப் பார்க்கிறதென்றால் அந்தக் காலத்திலே கிராமத்திலே அது ஒரு முக்கியமான சம்பவம். எல்லோரும் அதை ஆவலோடு வரவேற்பார்கள். நானும் உடனே அவர்களோடு செல்லச் சம்மதித்தேன். நாங்கள் எல்லோருமாக இரவு 8½ மணி சுமாருக்குப் புறப்பட்டுப் போனோம். ஐந்து மைல் நடக்கவேண்டும். அதைப்பற்றி யாருக்குமே கவலையில்லை. துவரை மாறுகளைச் சேர்த்து ஒன்ருகக் கட்டி நீள நீளமான சூந்துகள் தயார் செய்துகொள்வோம். தீப்பந்தங்களாக அவைதான் பயன்படும். மற்றப்படி லாந்தரோ, டார்ச் விளக்கோ கிடையாது. துவரை மாறு தீப்பந்தத்தைப் பிடித்துக்கொண்டு நடந்து விடுவோம். நிலா வெளிச்சமாக இருந்தால் அது கூடத் தேவையில்லை. நிலங்களின் வழியாகக் குறுகலான இடவெளியாக இருந்தால்தான் தீப்பந்தங்களையும் தேடுவார்கள். பெரிய பாதையாக இருந்தால் இருட்டாக இருந்தாலும் கால் நிதானத்திலேயே போய் விடலாம். கிராமத்து மக்களுக்கு அப்படியெல்லாம் நடந்து நல்ல பழக்கமுண்டு.

இந்தக் காலத்திலே தெருக் கூத்துக்கள் வரவரக் குறைந்து போய் விட்டன. பல கிராமங்களிலே நடைபெறுகிறதே இல்லையென்று சொல்லலாம். அண்மையிலே நான் எங்கள் கிராமத்திற்குப் போயிருந்தேன். "தெருக் கூத்து இப்பொழுது நடக்கிறதுண்டா?" என்று கேட்டுப் பார்த்தேன். "இப்போ யார் கூத்தாடரா? நம்ம பண்ணையாள் எனும்பன் இருக்கிற வரையில் அப்படியே நடந்தது. இன்னைக்கு யார் அதை நினைக்கிறு? இப்பத்தான் சினிமா எங்க பார்த்தாலும் வந்து விட்டதே" என்று பதில் சொன்னர்கள். அவர்கள் கூறியது மெய்தான். இன்றைக்குத் தெருக் கூத்து வேகமாக மறைந்து வரும் கலையாகி விட்டது. கூத்துப் பார்க்கிறதை விட்டு விட்டு இன்று கிராம மக்கள் சினிமாப் பார்க்கத் தொடங்கியிருக்கிருர்கள்.

இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு முன்னல் அதன் நிலைமை இவ்வாறு கேவலமாக இருக்கவில்லை. அந்தக் காலத்திலே கூத்து என்றால் கிராமங்களிலே அது முக்கியமான பொழுதுபோக்கு. தெருக்கூத்து என்றும் கம்புக் கூத்து என்றும் அதைக் கூறுவார்கள். கிராமங்களிலே எத்தனையோ பேருக்கு நடிப்புத் திறமையும், பாட்டுப் பாடும் திறமையும் இயல்பாக இருக்குமல்லவா? அவர்கள் எல்லாம் சேர்ந்த ஒரு கூட்டம்தான் இந்தக் கூத்திற்குக் காரணமாக இருக்கும். பெரும்பாலும் அவர்கள் ஏழை மக்கள்தான். ஹரிஜனங்களாகவே கூடி ஆடுகின்ற கோஷ்டிகளும் உண்டு. மக்களுக்கு அது ஒரு நல்ல பொழுதுபோக்கு: நாடகம் நடிக்கிறவர்களுக்கு ஒரு நல்ல வரும்படி.

தெருக் கூத்திற்கு நாடக மேடை ஒன்றும் தேவையில்லை. ஒரு பரந்த மைதானம் இருந்தால் போதும். நடிகர்களெல்லாம் ஒரு பக்கத்திலே நின்று கொள்வார்கள். பின்பாட்டுக்காரர்கள் அவர்களுக்குப் பக்கத்திலே நிற்பார்கள். எதிரிலே மக்களெல்லாம் தரையில் உட்கார்ந்திருப்பார்கள். மத்தியிலே கொஞ்சம் காலியிடம் இருக்கும் அதுதான் நாடக மேடை. அதிலே திரைக் காட்சிகளோ மேடை அலங்காரங்களோ ஒன்றும் கிடையாது.

கூத்துத் தொடங்கும் வரையில் நடிகர்களை அங்கு வந்து கூடியிருக்கிற மக்களிடமிருந்து ஒரு திரைச் சீலை மறைத்துக் கொண்டிருக்கும். அந்தத் திரையை இரண்டு பேர் கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பார்கள். வேஷம் எல்லாம் தயாரானதும் முதலில் கோமாளி அந்தத் திரைக்குப் பின்னால் வந்து நிற்பான்.

"வந்தேனைய்யா கோமாளி !
வந்தேனைய்யா கோமாளி !!"

என்று அவன் திரைக்குப் பின்னாலிருந்து ஆர்ப்பாட்டமாகப் பாடிக் கொண்டிருப்பான். அவனுடைய முக தரிசனத்தையும் வேஷ அலங்காரத்தையும் பார்ப்பதற்காக மக்கள் துடித்துக்கொண்டிருப்பார்கள். பாட்டு முடியும் தருணத்திலே திரையைச் சடாலென்று கீழே அழுத்திக்கொண்டு கோமாளி தரிசனம் தருவான். மறுபடியும் உடனே திரையை மேலே தூக்கிவிட்டு முகத்தை மறைத்துக்கொள்வான். இப்படியெல்லாம் மக்களின் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் அதிகரிக்கும்படி செய்து கடைசியிலே அவன் திரையை அறவே நீக்கிவிட்டு மேடையிலே அதாவது முன்னாலிருக்கும் இடைவெளியிலே பிரசன்னமாகி விடுவான். அவனுடைய கோமாளங்கள், கேலி, தமாஷ்கள் கொஞ்ச நேரம் தனிக் கச்சேரியாக நடக்கும். பிறகு ராஜா வேஷக்காரன், ராணி வேஷக்காரன் என்றிப்படி ஒவ்வொருவராகத் தோன்றுவார்கள்.

ஒவ்வொருவர் பிரசன்னமாகும்போதும் அந்தத் திரைச் சீலைக்குப் பின்புறம் நின்று கொண்டு தனது வருகையைப்பற்றி அறிமுகப் பாட்டுப் பாடியாக வேண்டும். தேசாதி தேசமெல்லாம் புகழும் அரிச்சந்திர மகாராஜன் வந்தேனே என்று அரிச்சந்திர மகாராஜா பாடியாகவேண்டும். அது மட்டுமல்ல. நடிக்கும் வெளியிலே தோன்றியவுடன் தனது புகழைப்பற்றிப் பாடிக் கொண்டே ஒரு முகூர்த்தம் ஆடியாக வேண்டும். இல்லாவிட்டால் மக்களுக்குத் திருப்தி ஏற்படாது. "ராஜா வேஷக்காரன் பாட்டுப் பரவாயில்லை; ஆட்டம் சாரமில்லை" என்று தீர்ப்புக் கூறி விடுவார்கள்.

கொங்கு நாட்டில் பார்த்த தெருக்கூத்துக்களை மனதில் வைத்துக்கொண்டுதான் நான் பேசுகிறேன். பொதுவாக எங்கும் இந்த நாடகங்கள் அடிப்படையில் ஒன்றாகத்தான் இருக்கும். கதைகள் எல்லாம் நமது புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றிலிருந்தே எடுத்தவைகள்தான். கட்டபொம்மு நாடகம், நல்லதங்காள் கதை, அல்லி அரசாணி கதை இப்படி நாடகங்களும் உண்டு. திருநெல்வேலிப் பக்கத்திலிருந்து ஒரு கோஷ்டியார் எங்கள் ஊரில் வந்து கட்டபொம்மு ஊமைத்துரை நாடகம் போட்டார்கள். அந்த நாடகம் ஒரு புது மாதிரியாக இருந்தது. ஒரே ஆள் ஒரு பட்டாளமாகப் பாவனை செய்து கொண்டு நடிக்க ஆரம்பித்து விடுவான். ஒருவனே வேறு வேறு பாத்திரங்களாகவும் நடிப்பான்.

ஆனால் சாதாரணமாகத் தெருக் கூத்துக்களிலே ஒவ்வொரு பாத்திரமும் தனித் தனியான நடிகர்களாலேயே நடிக்கப்படும். பெண்கள் வேஷம்போட்டு நடித்ததாக நான் தெருக் கூத்துப் பார்த்ததும் இல்லை; கேள்விப்பட்டதும் இல்லை. ஆண்களே பெண்வேஷம் போட்டுத்தான் நடிப்பார்கள். திரை மறைவிலிருந்து பாடுவதும், ஆண்கள் பெண் வேஷம் தரிப்பதும் இப்படிப் பல அம்சங்களையெல்லாம் நமது தற்கால நாடக மேடை அதன் ஆரம்ப காலத்திலே தெருக் கூத்துக்களிலிருந்து தான் எடுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. பிறகு அது வேறு வேறு விதமாக முன்னேற்றமடைந்திருக்கிறது.

தற்கால நாடக மேடையிலிருந்து அரை குறையாகத் தெருக் கூத்துக்கள் பின்பற்றிய அம்சங்களும் உண்டு. அதாவது தெருக் கூத்துக்கு ஆதரவு குறைந்துபோய் அது அநேகமாக மறையும் தருவாயிலிருந்த போது அதற்கு உயிர் கொடுக்க ஒரு தவறான வழி கண்டு பிடித்தார்கள். சினிமாவும், நாடக மேடையும் தானே தெருக்கூத்திற்கு மதிப்பில்லாமல் செய்துவிட்டன? ஆதலால் அவற்றிலிருந்து சில அம்சங்களைப் பின்பற்றினால் தெருக்கூத்திற்குப் பழையபடி ஆதரவு வந்துவிடும் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள். அதனால் திரைச் சீலைகளில் பல காட்சிகளை எழுதித்

தொங்கவிட்டார்கள். நவீன நாகரிகத்தோடு நடிகர்கள் காட்சியளிக்கலானார்கள். நான் பார்த்த ஒரு கூத்திலே கதா நாயகனாகிய ஸ்ரீராமன் காலுடை அணிந்திருந்தான். மூக்குக் கண்ணாடி அவன் செந்தாமரை முகத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது. நான் சொல்வது கற்பனையல்ல; ஒரு கிராமத்திலே நான் பார்த்த தெருக்கூத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

தெருக்கூத்திற்குத் தனியாக ஒரு பாணியிருக்கிறது; அதை அடிப்படையாகக் கொண்டு கூத்தில் சுவை ஏற்படச் செய்ய வேண்டுமே ஒழிய சினிமாவையோ, இக்கால நாடக வழியையோ இதில் புகுத்தினால் அந்த மூக்குக் கண்ணாடி விபரீதம்தான் ஏற்படும்.

நடிப்புக் கலை உணர்ச்சியென்பது பொதுவாக எல்லா மக்களிடத்திலும் ஓரளவிற்கு இருக்கின்றது. இதில் கிராமமென்றும் பட்டணமென்றும், படித்தவரென்றும் படிக்காதவரென்றும் வேறுபாடு கிடையாது. பெரிய நகரங்களில் உள்ள உத்தியோகஸ்தர்கள் குமாஸ்தாக்கள் முதலியவர்கள் நாடகச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு தங்கள் ஓய்வு நேரங்களிலே பயிற்சிசெய்து நாடகங்களை நடிக்கிறார்கள். இது அவர்களுடைய நடிப்புஉணர்ச்சியைப் பெருக்குவதோடு நல்ல பொழுது போக்காகவும் அமைகின்றது. அதேபோல கிராம மக்களும் நகரங்களில் வாழும் ஏழை எளியவர்களும் செய்யலாம். அவர்களுக்குத் தெருக்கூத்து பெரிதும் உகந்தது. அதற்கெனப் பெரிய நாடகக் கொட்டகை தேவையில்லை; ஆடை அணிகளும் தேவையில்லை. வங்காளத்திலே ஜாத்ரா என்ற ஒருவகை நாடகம் மேடை முதலியன இல்லாமலேயே நடிக்கப்படுகிறது. அது போலவே தெருக்கூத்துக்களும் நடைபெறலாம்.

கிராமங்களிலே மக்களுக்கு இன்பமும் அறிவும் ஊட்டி வந்த பல பொழுது போக்குக்கள் இன்று மறைந்துகொண்டு வருகின்றன. கிராம மக்களே அவற்றை அநாகரிகமானவை என்று கருத ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் கிராமத்திலிருந்து வந்து ஆங்கிலக் கல்வி பயின்றவர்களே ஆவார்கள். அவர்கள் புதுவிதமான நடையுடை பாவனைகளையும், எண்ணங்களையும் கிராமங்களிலே புகுத்தலானார்கள். படிப்பிலேயே தங்கள் இளமையைக் கழித்த அவர்களுக்குச் கிராம மக்களின் பழைமையான பண்பாடும் உள்ளப்போக்கும் நன்றாகத் தெரியவில்லை. அவர்கள் கிராமப் போக்கையும் அதன் கேளிக்கைகளையும் அநாகரிகமென்று கருதினார்கள். அதன் எதிரொலி கிராம மக்களையும் தாக்கியது. அதன் விளைவாக கிராமியப் பாடல்கள், கூத்துக்கள், வேடிக்கை விளையாட்டுக்கள் எல்லாம் மங்கலாயின.

ஆனால் நல்ல வேளையாக இன்று ஒரு புது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. கிராமியக் கோலா கலங்கள் இவற்றிலே எழுத்தாளர் சிலரும், நகரத்துப் பத்திரிகைகளும் மக்களும் கவனம் செலுத்தத் தலைப்பட்டிருக்கிறார்கள். வில்லுப் பாட்டு, ஒயில் கும்மி போன்ற கிராமத்து இசைகள், கூத்துக்கள் மறுபடியும் தலைதூக்கத் தொடங்கியிருக்கின்றன. கிராமியப் பாடல்கள் இன்று வானில் எழுந்து முழங்குகின்றன. தெருக் கூத்துக்களுக்கும் இப்படிப் புதிய உயிர் கிடைக்கவேண்டும். அது ஒரு நல்ல கலை. அதில் எத்தனையோ சிறந்த அம்சங்கள் இருக்கின்றன. நாட்டு மக்களின் உள்ளத்தையும், அவர்களுடைய எளிய நகைச் சுவையையும், ஆர்வத்தையும் அவற்றில் காணலாம்.

ஆமாம், இவ்வளவும் சொல்லிவிட்டு நான் இதுவரை அந்த அர்ச்சுனன் தபசு நாடகத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லவில்லையே? ஒரு முழுப் பனைமரத்தை அப்படியே நாடகம் நடக்குமிடத்தில் நட்டிருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? யாரோ ஒருவர் வீடு கட்டுவதற்காகப் பனைமரம் ஒன்றை வெட்டிப் போட்டிருந்தாராம். அதை எடுத்து நட்டுவைத்து அர்ச்சுனன் தபசு செய்யும் கம்பமாகச் செய்துவிட்டார்கள். அதன் மேலே இருந்து கொண்டு அர்ச்சுனன் தனது உச்ச ஸ்தாயியில் பாடிய பக்திப் பாடல்களும், அவன் சிவபெருமானோடு அங்கிருந்து கொண்டே வாதாடியதும் இன்று கேட்டவை போலிருக்கின்றன. நாடகம் என்னவோ சிறியதுதான். ஆனால் இடை

யிடையே கோமாளியின் வேடிக்கைகளும், பரிசு கொடுத்தவர்களை வாழ்த்திக் கூறும் சாதுரிய வார்த்தைகளும் பாட்டுகளுமாகச் சேர்ந்து அநேகமாக இரவு நான்கு மணி வரை நாடகம் நடந்தது. நாடகம் முடிந்ததும் அதைப் பார்க்க வந்தவர்களில் பலர் அங்கேயே படுத்துத் தூங்க ஆரம்பித்தார்கள். மைல் கணக்காக நடந்து போய் வீடு சேர்வதற்குள் விடிந்துபோகும். அங்கேயே தூங்கிவிட்டுக் காலையில் வீடு போனால் நல்லது தானே!

பனை மரத்தின் மேலிருந்து கொண்டு அர்ச்சுனன் காட்டுப் பன்றியின்மேல் அம்பெய்த சாதுரியத்தையும், சிவபெருமானோடு அவன் போர்புரிந்த திறமையையும், கோமாளி இடையிடையே செய்து வந்து வேடிக்கைகளையும் கிராம மக்கள் வெகு நாள்வரை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அந்த மாதிரித் தெருக் கூத்துக் கோஷ்டிகள் இப்பொழுது மறைந்துவிட்டன. அவற்றை மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டியது அவசியம். அது கிராமியக் கலைக்கு ஒரு பெரிய தொண்டாகும்.

கிராம மக்கள் தங்கள் பொழுது போக்கிற்காக ஒரு நகரத்தைத் தேடி வரும்படியாக நிலைமை இருக்கக் கூடாது. அப்படி ஒரு சிலர் வந்தாலும் அது செல்வம் படைத்தவர்களுக்குத் தான் இயலும்; மற்ற எளிய மக்கள் தங்கள் வாழ்க்கையிலே இன்பமடைவதற்கு வேண்டிய வசதிகள் அவர்கள் வாழும் இடத்திலேயே இருக்கவேண்டும். கிராமத்தில் செல்வத்தை எல்லா வகைகளிலும் பட்டணங்கள் கவர்ந்து கொள்ளும்படி நிலைமை நிலைத்திருந்தால், கிராமங்கள் ஓங்க முடியாது. தெருக்கூத்து ஒரு நல்ல நாட்டுக் கலை என்பதையும், அதைப் போற்றி வளர்க்க வேண்டும் என்பதையும், கிராமங்கள் நிறைந்த பாரத மக்களுக்கு அதன் மூலம் நல்ல அறிவையும், பொழுது போக்கையும் மகிழ்ச்சியையும் அளிக்க முடியும் என்பதையும் மனதில் கொண்டு அதை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

(சென்னை வானொலி நிலையத்தின் அனுமதியோடு வெளியிடப்பெறுகிறது.)

பண்பும் பயனும்

["சுகி"]

இங்கிலாந்தின் மாதாகோவில்களைப் போன்று, நாடக அரங்கங்கள் மிக மிக முக்கியமானவை.— இதைச் சொன்னவர் யார்? நாடகாசிரியர் பெர்னட் ஷா.

நமக்கும் நாடக அரங்கங்களின் மேன்மை, முக்கியம் தெரியும்; எத்தனை எத்தனை காரணங்களுக்காகத் திரள் திரளாகப்போகிறோம். இன்பம் நாடியும், கருத்தைக் காணவும், பொழுது போக்கைப் போற்றவும், கதையின் சிறப்பை நாடியும், உணர்ச்சிப் பெருக்கை உத்தேசித்தும், வர்ணவிஸ்தாரமான மின்விளக்கின் ஜாலக்கைக் காணவும் இப்படி எத்தனையோ காரணங்களை முன்னிட்டுப்போகிறோம். நாடக சாலையை ஆயுளில் ஒருமுறையாவது எட்டிப்பாராதவர்கள் தமிழ் நாட்டில் கிடையாது.

நாடகம், சங்கீதம் ஆகிய கலைகளில் நமக்கு அத்தனை உயிர். கிராமத்து ஆட்ட பாட்டக்கூத்துக்களை நடத்துவோரிலிருந்து, பட்டணங்களில் சினிமாவைத் தோற்கடிக்கச் செய்யும் முறையில் துரிதமும் ஜாலக்கும் பொருத்த நடத்தும் நாடக விற்பன்னர்கள் வரை, இன்றும் இருக்கிறார்கள். நாடகக் கலையின் செழிப்புக்கும், வளர்ச்சிக்கும் கண்ணீர் ஊற்றி வளர்த்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, ஷாவின் வார்த்தை எவ்வளவு பொருத்தமானது என்று எண்ணுகிறோம்.

நாடக அரங்கங்கள் இன்னும் மேன்மையுறவேண்டும்; தக்கமுறையில் அது வேரூன்றினல்தான் மக்களின் பொழுது போக்கை உயரிய முறையில் திருப்தி செய்வதின் மூலம், வாழ்விற்குவேண்டிய கருத்துக்கள், அரசியல் சமுதாயத்திற்கு வேண்டிய கொள்கைகள், உடலுக்கும் உள்ளத்திற்கும் வேண்டிய விருந்துகள் பெறமுடியும்.

நாடகத்திடம் இயல்பாகவே மக்களுக்கு விருப்பம் ஏற்படக் காரணம் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த வரம் நல்லதோ கெட்டதோ பிற ஜீவனக மாறியிருந்தோமில்லையே என்ற கற்பனைப் பெருக்கெடுக்கும். ராஜராஜ சோழனக, ஔவையாராக, அசோக சக்கரவர்த்தியாக மக்கள் மனத்தில் ஆட்சி செய்திருந்தால்? தெனலிராமனக, முகமூடி போட்டுக்கொண்டும் வர முடிந்தால்? ஒவ்வொருவரும் பிற ஜீவனக மாறிவிட ஆசைப்படுகிறோம். முடியுமென்றும் சாதிக்கிறோம். "நான் மட்டும் இந்த நாட்டு மந்திரியாக இருந்தால்?" என்று நம்மில் எத்தனை பேர் எண்ணுகிறோம்.

இந்தக் கற்பனைகள் மனத்துக்கண் நிகழ்வதால் யாருக்கும் எவ்விதக் கெடுதலும் இடைஞ்சலும் ஏற்படுவதில்லை. நம்மைப் பிறனக மாற்றிக்கொள்ள நினைப்பதினல், பிறருக்குச், சந்தோஷம் ஏற்படுகிறது. பிற ஜீவனக மாறுவதற்காக, கற்பனையான சூழ்நிலையை சிருஷ்டித்து, அதற்குள்ளாக கஷ்ட நஷ்டங்களைச் சார்ந்த கட்டங்களில் எவ்வாறு இன்ப துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்பதைக் காணத்தானே நாடக அரங்கத்திற்கு வருகிறோம்.

நாடக அரங்கம் உலகத்தில் இன்ப துன்பங்கள்-அரண்மனை சுகவாசம் முதல் ஆண்டி மடத்து வாழ்க்கை வரை, ஏழை முதல் கோடீஸ்வரனின் அபிலாக்ஷைகளைப் பிரதிபலித்துக்காட்டும் சிறு உலகம்; கற்பனை உலகம்; பொய் உலகம்; ஆனல் பயங்கரமானதும் பயனுள்ளதுமான அதியற்புத உலகம்.

உலகமாகிய நாடக அரங்கத்தைவிட்டு, கற்பனை உலகமான வாழ்க்கையைக் காண்பதுவே நாடகத்தின் நோக்கம்.

முக்காலத்தையும் வென்ற இன்ப வெளியான நாடக அரங்கத்தில், என்றுமே வாழ்வைப் பிரதிபலித்துக் காட்டுவது நாடகக் கலை. இந்த உயரிய காரியத்தைக் கதையி

லும், நாவல்களிலும், ஒரு சிலரால் கவிதைகளிலும் அனுபவிக்க முடியும். நாடகமாக எழுதிவிட்டால் எல்லோரும் அனுபவிக்க முடியாது; நாடகத்தை நடத்தும்போது தான் நாடகத்திற்கு உயிர் வருகிறது. பாத்திரங்களையும் உணர்ச்சிகளையும் கற்பனைத் திறன் செய்ய முடியாத பாமரருக்கும் எவ்வாறு அந்த உணர்ச்சிகளைக் காணவேண்டுமென்று சொல்லிக் காட்டுவது நாடகம். நாடகப் பாத்திரங்கள் தங்களைமட்டும் நடிகர்கள் என்று சொல்லிக்கொள்வதோடு பார்க்கின்ற சபையும் நடிகர்கள் என எண்ணுகிறார்கள். தன்னைக் குத்திய வாள் ஆனால் வடுவும் ரத்தமும் கொடுக்காது போயினும் வெட்டுண்டதாக நடிக்கும் காலத்து, அதை நம்புவதாக சபையோர் நடிக்கிறார்கள். நடிப்பவர்களள், பார்க்கிறவர்கள் இருசாராரும் நம்பிக்கையான ஒரு கனவு உலகில் வாழும் சொர்க்கலோகம் நாடக அரங்கம்.

ஷா சொன்னார்: மாதா கோவில்களுக்கு உள்ள முக்கியம் நாடக அரங்கத்திற்கும் வேண்டும்.

ஏன்? மதத்தினால் மனசுத்தியும் ஆத்ம திருப்தியும் அடைகிறோம். வெகுளி, அகந்தை, பொய்ச்சான்று அகல்கிறது. கோவிலில் எல்லோரும் ஒன்றே யென்ற உணர்ச்சி யேற்படுகிறது. பந்தங்கள், பாசங்சள் போகங்கள் எல்லாம் ஓடி மறைகின்றன. இதே வேற்றுமைகள் மறைகின்றன – மறைக்கின்றன நாடக அரங்கத்திலும். நாடகக்கலையை ஷா சொல்லுக்கு ஒரு படி மேலாகச் சொல்லவேண்டும். "நாடக அரங்கத்தைக் கோவிலில் வைத்துக் கும்பிடவேண்டும்." நாடக அரங்கங்கள் கோவிலின் சாந்நித்தியத்தைவிட மதிப்புக்கும் சக்திக்கும் உரியவை.

மனித சுபாவத்தை இன்றென்ன, பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் இதே திருகல் முருகல் உணர்ச்சிகளில் இருந்ததாகத் தான் அனுபவசாலிகள் சொல்லுகிறார்கள். உணர்ச்சிகளுக்கு இலக்காகும் பொருள்களைச் சொல்லக் காலத்திற்குக் காலம் சொற்கள் மாறுபடலாம். சங்க காலத்து நாடகத் தமிழ், ஒருவன் கோபத்தைக் காட்டவோ தாபத்தைக் காட்டவோ உதவிய மாதிரியே இன்றைய நாடகத் தமிழும் கோபத்தையும் தாபத்தையும் காட்டப் பயன்படுகின்றது. சிந்தனையின் வாகனம் பாஷை; அதில் மாற்றங்கள் யந்திரம் போன்று ஏற்படும். மாற்றங்கள் வருகின்றனவே தவிரப் பயன் ஒன்றேதான். உணர்ச்சிகள் என்றுமே மனிதனைவிட்டு மாறவில்லை; சந்தர்ப்பங்களும் வார்த்தைகளுமே மாறிவருகின்றன.

நாடக அரங்கத்திலே சிரிப்பையே காணாதவன் சிரிக்கிறான்; வாழ்விலே அழமுடியாதவன் அழுகிறான்; மாறுபட்ட கருத்துக்களோடு வந்தவன் அந்த அரங்கத்திலே ஒன்றிவிடுகிறான்; திகிலுக்கும் திகைப்பிற்கும், பயத்திற்கும் பயனுக்கும் ஊசலாடுகிறான். நாடகத் திரை சுருண்டதும், நம் உள்ளத்து நவரஸ உணர்ச்சிகளும் மனத்திரையில் நடனமாடுகின்றன. கண்ணீரைச் சோர விடவோ, கன்னங் குழியக் குழியச் சிரிக்கவோ மயிர்க்கூச் செறியவோ புல்லரித்துப் புளகாங்கிதம் அடையவோ தயாராக இருக்கிறோம்.

நாடக அரங்கத்தை இன்ப சாதனமாக நம்மில் பெரும்பாலோரும் எண்ணிப் போகிறோம்; கல்வி யபிவிருத்திக்காகப் போகிறவர்களைவிட முன்னாளில் பொழுது போக்குக்காகவும் தமாஷுக்காகவும் இருந்த அரங்கம் வர வர நாடு அடிமைப்பட்ட காலத்தே பாரதியின் கவிதை போன்று, விடுதலை தாகத்தைப் புகட்டியது. சுதந்திர நாட்டில் நாடக அரங்கம் தற்காலத்திய நாகரீகத்தின், பிரசார இலாகாவாக, வாழ்வின் எதிரொலியாக வளர முடியும்.

சில ஆண்டுகளுக்கு முன்வரை நாடகத்தில் பொழுதுபோக்கையே புகுத்திய ஆசிரியர்கள், இன்று சிந்திக்கவும் வேலை கொடுக்கிறார்கள். சமூக நிலை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, குடும்ப சூழ்நிலை போன்ற ஏதோ ஒரு பிரச்னையைப் புகுத்திவிடுவதால் சிந்தனைக்கு வேலை ஏற்படும். கலை கலைக்காக மட்டும் அல்ல. கலைக்குப் பயனும் உண்டு, என்னும் கருத்துக்களை வாரிக் கொடுப்பார்கள். சிறந்த நாடகங்களில் கருத்துக்கு வேலை, உயரிய எண்ணங்களின் மோதல், பல பிரச்னைகளின் சுழிப்புகள் வந்து சங்கமம் ஆகும். எண்ணங்களைமட்டும்

வைத்துக்கொண்டு சிலம்பம் ஆடிவிட முடியாது. உணர்ச்சிகள் கொப்புளித்துக் கொண்டுபோனால்தான் நாடகம் உச்ச நிலையை அடையும்.

இத்தனை ரகசியங்களையும், வான வில்லை, பனித்துளியில் அடக்கிய மாதிரி, அடக்கிக் காட்டும் ஆசிரியர் அதை நடித்துக்காட்டும் நடிகர்கள், இருளுக்கும் ஒளிக்குமாக உணர்ச்சிகளை மாற்றித்தரும் மின்சாரத்து ஒளியிணைப்பு, சங்கீதம், பின்னணிவாத்ய கோஷ்டி இப்படி எத்தனையெத்தனையோ உபகரணங்கள், ஆட்கள் தேவை. இத்தனை நபர்களின் ஒத்துழைப்பால் உருவாகும் நாடகம் சிலசமயம் கலையின் சிகரத்திலும். சிலவேளை வியாபார ரகசியத்திலும், பலசமயம் நஷ்ட இனங்களிலும், ஒருசில சமயம் பணக்கோட்டைக்கு வாசலாகவும் அமையும். சினிமாவின் ஆதிக்கம் வந்த பிறகு, நாடக அரங்கங்களின் நிலைமை படுமோசமாகி நல்ல நாடகங்கள் குதிரைக் கொம்பாகிவிட்டன. ஆயினும் கட்சிகளின் பெயரால் புரட்சிக் கருத்துக்கள் புகுத்தப் பெற்று நடந்து வருகின்றன. ஜர்மானிய பொன்மொழிப்படி, "உயரிய நாடகங்கள் வசூல் ஆவதில்லை; வசூல்தரும் வெற்றி நாடகங்கள் உயரிய நாடகங்களாக இருப்பதில்லை" என்ற உண்மையைத் தமிழ் நாட்டில் பொய்யாக்க வேண்டும்.

தமிழர்கள், மற்றத் துறைகளில் வியாபார லாபத்தை உத்தேசித்துக் கலையையும் வளர்ப்பதுபோல், நாடகத் துறையை லாபகரமாக வளர்த்தால் வரவர பலஹீனமாகிவரும் நாடக அரங்குகள் -ஆனால் சாகாவரம் பெற்றவை இந்த அரங்குகள்—புத்துயிர் பெற்றுத் தழைத்தால் பத்திரிகை, மதம், அரசியல் மூன்றும் செய்ய முடியாத வேலைகளை மிகச் சுலபமான கலா உணர்ச்சியோடு செய்து முடிக்கக் கூடும்.

நாடக அரங்கங்களின் சக்தியையும், நாடகம் மனித இனத்திற்குச் செய்யும் சேவையையும் உணர்ந்து, நாட்டு மக்கள் வயிரார உண்ட காலத்தே, சிறப்பான நாடகங்கள் பல எழுதிய பெருமை திரு சம்பந்த முதலியார் அவர்களையே சாரும். நாடகக் கம்பெனிகளுக்குப் பணவருவாயும், மக்களுக்குப் பொழுதுபோக்கும் தரத்தக்க நாடகங்களை எழுதியிருக்கிறார்கள். இதனால், "தமிழில் நாடகங்கள் இல்லை" யென்ற பெருங்குறை நீங்கிற்று.

நாடகாசிரியர் முதலியாரவர்களின் சேவையை, நாடக சங்கத்தின் வளர்ச்சிக் சாட்சிகளில் நாம் பார்த்து வந்தோமானால், சென்ற காலத்து நாடகங்களையும் வருங் காலத்து நாடகங்களையும் இணைக்கும் உறுதி வாய்ந்த சங்கிலியாக இருக்கிறது இவர்களது அரிய சேவை.

இன்ப இயல் துன்ப இயல் என்ற இரு மகத்தான பகுதிகளையும் இவர்களுடைய நாடகங்களில் காணுகிறோம்; இந்த இரு வேறு உணர்ச்சிகளையும் பல நாடகங்கள் மூலம் நன்கு அனுபவித்துத் தமிழகத்துக் கலையன்பர்கள் அனைவருடைய அன்பிற்கும் பாத்திரமாகும் பேறு, வேறு எந்த நாடக ஆசிரியருக்கும் இல்லையென்பதைச் சொல்லவேண்டும்.

கடவுளர்கள் நடமாடிய நாடகமேடையில் மனிதனையும் மட்டும் நடமாட வைத்தார்கள் முதலியாரவர்கள்; கடவுளாக மாறவிருந்த மனிதன் மனிதனாக உலாவி வந்தான்; இந்த ஆசிரியருக்குப் பின் எழுத ஆரம்பித்த நாடகாசிரியர்கள், மனிதனை அமரனாகவும், ஒரு சிலர் மிருகமாகவும் சித்தரித்தார்கள். மனிதன் அமரனா மிருகமா, என்ற பின் காலத்து நாடக ஆசிரியர்கள் சோதனைக்கு இடமும் தைரியமும் கொடுத்தவர்கள் முதலியார் அவர்கள். புதுமைக்கும் பழமைக்கும் நடுவிலே, ஒன்றின் ஆரம்பமாகவும், மற்றொன்றின் முடிவாகவும் இருக்கிறார்கள் முதலியாரவர்கள்.

புதுமையை ஆரம்பித்த பெருமைக்காகவும் பழைமையை முடித்த சந்தோஷத்திற்காகவும் நாம் பாராட்டவேண்டும்.

[திரை]

புதிய இலக்கிய முறை

[எஸ். வையாபுரிப் பிள்ளை]

இலக்கியம் என்பது யாது? கணித நூல் இலக்கியம் அல்ல. இதுபோன்றே, வானநூல் முதலியனவும் இலக்கியம் அல்ல. இவையெல்லாம் மக்களது அறிவை வளர்ப்ப தொன்றே நோக்கமாகக் கொண்டவை. இவை தனிப்பட்ட சிலர்சிலர்க்கன்றி, பொது மக்களுக்குப் பற்று விளைவிக்க மாட்டா. இவ்வாறுள்ளவை இலக்கியம் என்று அறிஞர் கொள்ளார். இவற்றிற்கு மாருக, அறிவை வளர்ப்பதோடு, பொது மக்களுக்குப் பற்று விளைத்து அவர்களை இன்புறுத்தும் நோக்கத்தோடு இயற்றியவை இலக்கியமாகும்; நேர்பட அறிவூட்டும் நோக்கம் இல்லாதிருக்கலாம். ஆனல், மக்களுக்குப் பொதுப்படப் பற்று விளைத்தலும் இன்பம் தருதலும் இலக்கியத்திற்கு இன்றியமையாத நோக்கங்களாம். சிலப்பதிகாரத்தை நோக்குவோம். இது பொதுவாகத் தமிழ் மக்கள் அனைவர்க்கும் பற்று விளைப்பது; அவர்களை அழகாலும் சுவையாலும் இன்புறுத்துவது. எனவே, இது ஓர் இலக்கியம் என்பதில் ஐயப்பாடில்லை.

இவ்வகையான இலக்கியங்களில் சில அரிய கூறுகள், அம்சங்கள், புலப்படும். இவை அறிவின் கூறு, உணர்ச்சிக் கூறு, பாவனைக் கூறு என்பன. அறிவின் கூறு (intellectual element) ஓர் இலக்கியத்தில்வரும் பொருள்பற்றி அதன் ஆசிரியன் கொண்டுள்ள கருத்துக்களைச் சுட்டுவது. உணர்ச்சிக் கூறு (feeling) அப்பொருள் ஆசிரியனிடம் தோற்றுவிக்கும் பல வேறு உணர்ச்சிகளைப் பற்றியது. இவ்வுணர்ச்சிகளைத தான் அவன் வாசகர்களிடத்தும் தோற்றுவிக்கிருன். பாவனைக் கூறு. (imagination) இலக்கியத்தில் வரும் விஷயங்களை மனக்கண் முன்னே தத்ரூபமாக நிறுத்துவது, இவ்வன்மையால் வாசகர்களது மனத்தினும் கண்ணினும் அவ்விஷயங்களைக் காட்சிப் படும்படி செய்து விடுகிருன். இம் மூன்றுவகை ஆற்றலும் ளிளங்குவதே 'இலக்கியம்' என்று சிறப்பித்துச் சொல்லத்தகுவது. வேருேர் இயல்பும் அதற்கு வேண்டும். அமைப்பு முறையில் விஷயங்களைக் காட்டிலும், அவற்றிற்கு வடிவம் கொடுப்பது அதி முக்கியமாக விளங்கும் இயல்பே இது.

இங்ஙனம் சிறப்புற்று விளங்கும் இலக்கியங்கள் பண்டைக் காலந்தொட்டே நமது மொழியில் உள்ளன ஆனல், புதிய அமைப்புக்களும் தோன்றிக் கொண்டே வந்தன. இப்புதுமைகளுள், சில அழிந்து போயின. தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி முதலியன மறைந்து பல நூற்ருண்டுகள் ஆகிவிட்டன. வேறுசில புதுமைகள் அழியாது நின்று நூதன இலக்கிய பரம்பரைக்கு முதன்மையாய் அமைந்து விட்டன. இப்புதிய அமைப்புக்களின் நெறி முறைகள் மேலெழுந்த வாரியாய் நோக்குவார்க்குப் புலப்பட மாட்டா; ஆழ்ந்து நோக்குவார்க்கே புலபபடும். வர்னமண்டலத்தில் எண்ணத் தொலையாத நட்சத்திரங்கள் யாதோர் ஒழுங்கு முறையும் இன்றிக் காணப்படுகின்றன எனப் பொது மக்கள் கருதுகிருர்கள். ஆனல், அவற்றின் தொகுதியமைப்பும், தரமும், ஒழுங்கு முறையும், கதியும் கூர்ந்து நோக்குவோர்க்குப் புலனும். இதைப் போன்றதே இலக்கிய மண்டலத்தில் இலக்கிய நெறியின் இயல்பு.

இந்நெறியிலே அவ்வக் காலத்தில் எழுந்த புதிய அமைப்புக்களை முறைப்படக் கவனிப்போம். புதுமுறை இலக்கியங்கள் பொருள் பற்றியும் வடிவு பற்றியும் காலந்தோறும் வேறுபட்டுள்ளன. இப்போதுள்ளவற்றில் மிகப் பழையவை அகம், புறம் என்று கூறும் பொருள்கள் பற்றியன. அகம், காதற் பொருளை உணர்த்துவது. புறம் அகத்திற்குப் புறமான வீரம், போர், ஈகை முதலியவற்றை உணர்த்தும். இருவகைப் பொளகளும் அகவல் என்ற செய்யுள் வடிவில் கூறப்பட்டன. அகநானூறு, புறநானூறு என்பவை உதாரணங்கள்.

இவற்றிற்குப் பின் புறப்பொருள் மறையலாயிற்று. அகப்பொருள் பற்றி ஓர் அரிய இலக்கியம் தோன்றியது. ஆனல், இதில் கலிப்பா என்ற இன்னிசை நிரம்பிய வடிவம் புதிதாக அமைந்தது. இது தான் கலித்தொகை என்ற அழகிய இலக்கியம். இதற்குச் சிறிது பிற்பட்டு, அகமே பொருளாகக் கொண்டு ஆனல், செய்யுள் வடிவில் பெரிதும் வேறுபட்டு ஓர் இலக்கியம் தோன்றியது. இதுதான் பரிபாடல். இதன் வடிவில், வெண்பா முதலிய

செய்யுட்களுக்குரிய அடிவகைகள் காணப் பெறுகின்றன. இவ்வடிவிற்கும் அழகிற்கும் வெகு தூரம். பண்-இசையும் இவ்வடிவிற்கு ஊட்டப் பட்ட தென்பர்.

வடிவு பற்றிய அளவில், கலித்தொகை, பரிபாடல், இவற்றின மரபில் யாத்தார் இலக்கியமும் தோன்ற வில்லை. இவை சந்ததியற்றுப் போயின. அகநானூறு புறநானூறு முதலிய மற்றையத் தொகை நூல்கள் சந்ததியற்றுப் போகவில்லை. ஆனல், இச்சந்ததி-இலக்கியங்களில் வடிவழகும் சுவையினிமையும் இல்லை. இத்தொகை நூல்களும் நல்ல சந்ததிகளைப் பிறப்பிக்கும் ஆற்றலற்றனவாய்ப் போயின.

இவற்றை அடுத்து, பொருளிலும் வடிவிலும் முற்றும் வேறுபட்ட இலக்கியங்கள் தோன்றின. பொதுநீதியும், அரசநீதியும் புதுப் பொருள்கள். வெண்பா, அதன் வகையாகிய குறட்பா முதலியன புதுவடிவங்கள். நாலடியார் திருக்குறள் என்பவை இப்புதிய தோற்றங்களுக்கு உதாரணங்கள். திருக்குறளின் இலக்கிய நயம் உலகறிந்தது. அந்நயம் சிறந்து விளங்குவது அதன் பொருளில் மாத்திரம் அன்று அப்பொருளிற் காட்டிலும் அதன் வடிவழகில் மேம்பட்டுள்ளது. இதன் வழியில் தோன்றிய இலக்கிய சந்ததி ஒன்றும் இல்லை. உலகில் ஒரு வள்ளுவர்தான் தோன்றுதல் கூடும்; ஒரு திருக்குறள்தான் தோன்றுதற்கு இடமுண்டு. பிறநீதி இலக்கியங்கள் அப்படியல்ல. பின் சந்ததிகள் பலவும் பெற்று குலந் தழைக்கச் செய்தன.

இவ் விலக்கியங்கள் பிறந்ததற்குச் சற்று முன் பின்னக, தமிழ் மக்களை ஒரு புதிய சக்தி இயக்கி வந்தது. பக்திப் பேராற்றல் என்று இதனைக் கூறலாம். இதன் பயனக, புதிய மரபில் இலக்கியங்கள் தோன்றின. இவைதாம், தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் முதலியன. தெய்வபக்தி என்ற புதுப்பொருளும், விருத்த வகைகளாகிய புதுவடிவங்களும் இவற்றில் அமைந்துள்ளன. மேலும், இவற்றிலே உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. இதனேடு பண்-இசையும் ஊட்டப்பெற்று இவற்றின் இனிமையை மிகுவிக்கிறது. திருவருட்பா முதலிய பல சந்ததிகளைப் பெற்றெடுத்து, நிலைத்த பெருமையோடு இன்றளவும் விளங்குகின்றன.

நிறைந்த சுவாநுபவம் இவ் இலக்கியங்களில் உள்ளது. ஆனல், அறிவுக்கூறும் பாவனைக் கூறும் விசேஷமாக இல்லை அன்றியும் பொது மக்களனைவர்க்கும் இவை பற்று விளைக்கக் கூடியன அல்ல. சமயப் பற்றுடைய இனத்தார்க்கே இவை உரியவை. இவற்றைத் தொடர்பு நயத்தால் சுவையூட்ட, வேறு புதிய இலக்கியங்கள் விரைவில் தோன்றின. காவியங்கள், இதிகாசங்கள் முதலியனவே இவை. இவற்றிலே, பொருளிலும் வடிவிலும் புதுமை உண்டு. தெய்வங்கள், அடியார்கள், அரசர்கள் முதலியோர்களின் சரிதமே புதுப்பொருள்கள். சுவை நிரம்பிய விருத்த வகைகளே இவற்றின் புது வடிவங்கள். தேவாரம் முதலியவற்றில் வரும் விருத்தங்கள் இசை ஊட்டப் பெற்றன. காவியம் முதலியவற்றில் வரும் விருத்த வகைகள் இவ்வடிவின் தன்மையிலே அமைந்து கிடந்த இன்னிசையைக் கொண்டு விளங்குகின்றன. இப்புதிய இலக்கியங்களில் மிகச் சிறந்தவை சிலப்பதிகாரம், இராமாயணம் என்பன. சிலப்பதிகாரம் கண்ணகி, கோவலன் சரிதமாகிய புதுப் பொருளைக் கொண்டது; வடிவில் அகவற்பாவினல் இயன்றது. ஆனல், இதன் இனிமையும் அழகும் முன்புள்ள எந்த இலக்கியத்திலும் கண்டறியாதவை. பொருளை வகுத்தமைக்கும் திறமும் இத்தன்மையதே. இதில் பலவகைப் பட்ட வரிப்பாட்டுக்களும் உரைநடைப் பகுதியும் உள்ளன. வரிப்பாட்டுக்களின் இனிமை தனிப்பட்டது. உணர்ச்சி நயமும் இதில் சிறந்து புலப்படுகிறது. இக்காவியம் ஓர் அரிய இலக்கியச் செல்வமாகும். இதன் பொருளிலும் சிறந்தது இராமசரிதம். இச்சரிதத்தைப் பொருளாகக் கொண்டது இராமாயணம். இப்பொருளைப் புதுப்பொருளென்று கூறமுடியாது. ஆனல், கம்பனது பலதிறப்பட்ட பேராற்றல்கள் விளங்குவதற்கு வேறு எப்பொருளும் போதியதல்ல. பொருட் கூற்றை அமைக்குந் திறம் வியக்கத் தக்கது. இதிற்காணும் நாடக நயம் எவரையும் பரவசமாக்க வல்லது. இதிற் கிளர்ந்தெழும் பலவகை உணர்ச்சி வேகம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இதிற் புலப்படும் பாவனையாற்றல் மிக மிக அருகியே காணக்கூடியது. இதன்கணுள்ள விருத்தங்கள் உணர்ச்சிவேறுபாட்டிற்குத் தக்கபடி புதிதுபுதிதாய் அமைந்துள்ளன. இவ் விருத்தங்களின் இனிமையும், நடையும் தெளிவும், தொடர்ச்சி நயமும் மனத்தைக் கனிவிக்கும் இன்பூட்டுகின்றன. இப்பெருங் காவியம் பொருள், வடிவு, அறிவாற்றல், உணர்ச்சி வேகம், பாவனைச் சிறப்பு என்ற கூறுபாட்டுள் வில் நில்லாது, அவற்றிலெல்லாம் சிறந்து இலக்கியம் மேம்பட வேண்டும் என்ற புதியதோர் மரபிற்கு லட்சியமாய் முதல் மூலமாய் ஒளிகின்றது. இவ் விரு காவியங்களும், திருக்குறள் போலவே, சந்ததி யற்றுத் தனிச்சிறப்புடைய வாய்ப் போயின.

இவற்றிற்குச் சற்று முன்பின்னாக, பிரபந்த வகைகள் தோன்றின. இவைகள் தெய்வங்களைப் பற்றியும், அரசர்கள் முதலியோரைப் பற்றியும் அமைந்தன. உதாரணமாக, கோவை, உலா, பரணி, பிள்ளைத் தமிழ் என்பன வற்றைக் கூறலாம். இவற்றில் பொருட் புதுமை இல்லை. ஆனால், வடிவத்திலும் அமைப்பிலும் நெறியிலும் புதுமை உண்டு. இவைபோன்ற பிரபந்தங்கள் பல தோன்றின. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என வரையறை செய்துள்ளார்கள். இவை மிகப் புதிய ஆதலால். 'விருந்து' என்றும் நூல்வகையில் அடக்குவர். இச்சொல் 'புதுமை' என்று பொருள்படும்.

இப்பிரபந்தங்களில் சிறப்பாகத் தனிப்படக் கூறத்தக்கன குறவஞ்சி. பள்ளு என்பன. இரண்டும் பெயரளவில்தான் தெய்வங்களைப் பற்றியன. உண்மையில் இவைகள் தாழ்ந்த மரபினர் என்று கருதும் குறவர், பள்ளர்களுடைய காதல் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. எப்பொழுதும் தெய்வங்களையும் குறுநில மன்னரையும் பரபுக்களையும் பற்றிப் பாடிவந்த நம்மவர்க்கு இது ஓர் புதுமையல்லவா? மேலும், நாடக வடிவில் அமைந்து, இசைப் பாட்டுக்களையும் உட்கொண்டு நடிக்கப்பட்டு வந்தமையால், பொது மக்கள் இவற்றைப் பெரிதும் விரும்பினர். இவைகளும் பல சந்ததிகளை ஈன்றன.

இலக்கணக் கட்டுப்பாடுகளில் இப்பிரபந்தங்கள் அடங்கி விட்டன. அவ்வாறு அடங்காதனவாய்ப் பல சிற்றிலக்கியங்களும் பிற்காலத்தில் தோன்றின. இவற்றுள், கீர்த்தனங்கள், தாது, கும்மி, சிந்து முதலியன தவிர, பெரும்பாலான சமய சந்தர்ப்பத்தையும் தற்காலிக வாழ்க்கை நெறியும் பற்றி அப்போதைக் கப்போது தோன்றியவை; நிலைபெற்றவை. ஆங்கிலத் தொடர்பு ஏற்பட்டதன் பின்தான் நிலைபேறான புதிய இலக்கிய முறைகள் பிறந்தன.

இவற்றுள் முதலாவது கூறத்தக்கது நாடகமாகும். இது சென்ற நூற்றாண்டில்தான் ஒருவாறு கௌரவ ஸ்தானத்தைப் பெற்று, இப்போது மிகப் போற்றப்படும் நிலைமையை எய்தியுள்ளது. மனோன்மணீயம் ஒரு சிறந்த உதாரணமாம். சூரிய நாராயண சாஸ்திரியார், சம்பந்த முதலியார் இயற்றியவை முறையே பண்டிதர்களையும் பொதுமக்களையும் குறித்து எழுதப்பட்டன. பொது மக்கள் முன் நடிக்கப்பெற்று அவர்களை இன்புறுத்துவதையே நோக்கமாகக் கொள்ளும் நாடகமே நிலைத்து நிறகவல்லது. நாடகத்திற்கு வருங்காலத்தில் பெரும் பிரசாரம் இருக்குமென்று தோன்றுகிறது. ஆங்கில மரபை மேற்கொண்டு, களம், அங்கம் எனப் பாகுபட்டு, இவ்விலக்கியம் அமைந்து வருகிறது.

ஆங்கிலத் தொடர்பால் வசன நடை எல்லாராலும் போற்றப்பட்டது. அந்நடையில் பல இலக்கியங்களும் தோன்றலாயின. உதாரணமாக, பலவகைக் கட்டுரைகளைக் கூறலாம்.

அடுத்தபடியாக வசன நடையில் அமைந்த கதைகளைக் கூறவேண்டும். கலையுணர்ச்சியோடு, வாழ்க்கையையும் சித்திரிக்கும் இப்புதிய அமைப்புப் பெருஞ் சிறப்பு எய்தக் கூடியதே.

தேசியக் கிளர்ச்சி ஒரு புதிய சக்தி. கவிஞர்கள் அந்த சக்தியைப் பெரிதும் பயன்படுத்தி வந்துள்ளார்கள். தேசிய கவி பாரதி ஆற்றல் நிரம்பிய புதிய நெறியை வகுத்து விட்டனர். பூர்வ மரபைப் போற்றி பல புதிய அம்சங்களும் தோன்ற, தமிழ்ப் பண்பு நிரம்ப, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மற்றொரு புதிய நெறியை வகுத்துள்ளார். இவர்களைப் பெரும்பாலும் பின்பற்றி, கவிதை இலக்கியங்கள் தோன்றி வருகின்றன.

இப்போது சிறுகதை யுகம் நிகழ்கிறது. இச்சிறு கதை மரபும் மேன்மேலும் சிறந்து, அழகுக்கலை யுணர்ச்சியோடு விளங்கி, நிலைபேறுடைய புதிய இலக்கிய வகையாக அமையுமென்று கருதலாம்.

இங்ஙனமாக, பல நூற்றாண்டுகளுக்குரிய புதிய இலக்கிய முறைகளின் சரித்திரம் புலப்படுகின்றது. இலக்கியத்தின் இயல்பை நன்குணர்ந்து மேன்மேலும் சிறந்த புதிய இலக்கியங்களை ஆசிரியர்கள் இயற்றல் இன்றியமையாதது. அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பெருங் கடமையுமாகும்.

போற்றத் தகுந்த பெரியார்

[கி. சந்திரசேகரன்]

ஒரு காலத்தில் தமிழ் நாடகங்கள் பார்ப்பதென்பது படித்தவர்களுக்கு மிக்கப் பிரயாசையாகவே இருந்தது. காரணம் தமிழில் நாடகங்களைச் சரியான முறையில் ஒருவரும் எழுதாத குற்றமே எனத் தீர்மானமாய்ச் சொல்லலாம். சில வேளைகளில் நாடகங்களை ஆபாசமாயும் நாடகத் தொழில் செய்பவர்கள் நடித்துக் காட்டுவார்கள். போதாததற்குப் பாட்டுமயமாயும் நாடகங்கள் இருந்துவிடும். ரஸத்தை நன்கு போஷித்து ரசிகர்களைக் கவரும் வழியில் நடிப்புத் திறமையைக் காட்டியவர்கள் வெகு சிலரே யாவர்.

இம்மாதிரி நிலையில் தான் படித்தவர்களில் சிலர் ஒன்றுகூடி சுகுண விலாஸ சபை என்ற ஒரு ஸ்தாபனத்தைத் தொடங்கி அதன் ஒரு முக்கிய அம்சமாக நாடகங்கள் தயாரிப்பதை மேற்கொண்டார்கள். இந்த நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்னமேயே இவ்வேலையை சுகுண விலாஸ சபையார் ஆரம்பித்த பெருமை அவர்களுக்கே உரியது. அச்சமயம் தமிழில் நாடகங்களை இயற்றி, சபையாருக்கு ஒழுக்கமான முறையில் இரண்டு மூன்று மணி நேரம் சந்தோஷமாய் காலங்கழிக்க வகை செய்தவர் **பம்மல் சம்பந்த முதலியார்.**

இன்று அவர் வெளியிட்ட தமிழ் நாடகங்களைப் பற்றிய விவரம் அவ்வளவாக எல்லோருக்கும் தெரியாது. தமிழபிமானம் தலை தூக்காத ஒரு காலத்தில் அவருடைய வாழ் நாள் தோழரான ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களின் தூண்டுதலினாலும், சுயமாய் ஏற்பட்ட இலக்கிய ஆர்வத்தினாலும், நடிக்கையில் படித்தவர் மனம் அலுத்துக்கொள்ளாத முறையில் நாடகங்களை தமிழில் உண்டாக்கிய தனிக் கௌரவம் சம்பந்த முதலியாரையே சேர்ந்தது எனத் தைரியமாய்க் கூறலாம்.

அவருடைய நாடகங்கள் உருவானதற்கு அவ்வப்பொழுது ஏற்பட்ட சில சூழ்நிலை விவரங்களைப் பழையகால மனிதர்களைக்கேட்டால் சொல்லுவார்கள். சம்பந்த முதலியார் அவர்களே தமது எழுபத்திஏழு நாடகங்களில் ஒவ்வொரு நாடகத்தையும் தாம் இயற்றியதற்கான சந்தர்ப்பத்தையும் காரணத்தையும் மறக்காமல் கூறுவார். ஆயினும் இன்று நமக்கு அவைகளல்ல வேண்டியவை. சம்பந்த முதலியாரைப் பற்றிக்கொண்ட தமிழ் ஆர்வமே கவனிக்கத்தக்கது. அடுத்ததாக அவருடைய நடிப்புத் திறமையும் ஒரு சிறந்த தூண்டுகோலாய் அமைந்ததை நினைக்க வேண்டும். ஆங்கிலமும், ஸம்ஸ்கிருதமும் நாடக இலக்கியங்களை நிறைய வைத்திருக்கையில், தமிழ் மொழி மட்டும் தேடினாலும் ஒரு நாடகத்தையும் வைத்திராததை நினைந்து மனமொடிந்து போகாமல் தாமே நாடகங்களை தக்க இலக்கணங்களுடன் நிருமாணம் செய்ய முன்வந்ததையும் இன்று பார்க்கையில் பிரமிக்கத்தான் வைக்கின்றது. பெரியபுராணம் போன்ற தமிழ்ப் பண்டை நூல்களிலிருந்து பக்திப் பெருக்கைச் செழிக்கச்செய்யும் விஷயங்களையும் ஒதுக்காது நாடகங்களில் சில வற்றை அவர்கள் சம்பந்தமாய்ச் செய்திருப்பதும் மெச்சத் தக்கது. மேலும், வீரம், சோகம், ஹாஸ்யம் போன்ற ரசங்களை நன்கு வெளிக்காட்டக்கூடிய நாடகங்களை சிருஷ்டித்ததுமல்லாமல், மேலைநாட்டு இலக்கியங்களின் சாரமான குணசித்திர முறையையும் பூர்ணமாய் தமதாக்கிக் கொண்டு உயர்தரப் பாத்திரங்களில் சிலவற்றையும் உலகினிற்குத் தந்திருப்பதும் அதிசயிக்கத்தது. இதனுடன் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துக், கூடியவரையில் அவைகளைத் தமது நடிப்புத் திறமையினால் ஞாபகத்திலிருக்கச்செய்திருக்கும் உயர்வும் அவருக்கு உரித்தானதுதான்.

அமலாதித்தியனாய் அவர் நம்மை சோகத்தில் ஆழ்த்துவார். மனோஹரனாய் ஒவ்வொருவரையும் வீரம் செறிந்த தமிழனாக்குவார். சாரங்கதரனாய்ப் பார்ப்பவருள்ளங்களைக் கசக்கிப்பிழிவார். சிறுத்தொண்டராய் எல்லோரையும் சைவதீக்ஷையை மேற்கொள்ள வைப்பார். இராஜசிம்மனாக தத்தனுடன் சிறுபிள்ளையாய் நடித்து நம்மையும் விநோதப் படுத்துவார். இன்னும் ஒவ்வொரு வேஷத்திலும் அதற்கிணங்க நடிப்பதுடன், நாடகம் முழுவதுமே ஒரு ஒழுங்கும் கௌரவமும் கொண்ட வழியில் விளையும்படி அவரது சிருஷ்டிகள் விளங்கும்.

ஆம்; சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசியவரல்ல. சீர்திருத்தமென்றதும் நாடகமெழுதியதுடன் நில்லாமல் நடிப்பு, வேஷம், பாத்திரம், எல்லாம் ரசிகருள்ளங்களை மேன்மையாக்கும் விதங்களிலேயே அமைவதைக் கண்காணித்த பணியும் அவருடையதே. ஹாஸ்யம் அவரிடம் நன்கு சோபிக்கும். இடத்தினாலும், பேச்சினாலும், தோற்றத்தினாலும், இன்னும் பற்பல சந்திவேகங்களினாலும் உற்பத்தியாகும் ஹாஸ்ய வகையைப் பரிசீலனை செய்து, தக்கபடி தமது நாடக பாத்திரங்களினிடம் விரஸமாக்கப்படாது நகைச்சுவையை வைத்துப் போஷித்துமிருக்கிறார்.

நாடகமேடையைச் சீர்திருத்தம் செய்யும் ஆற்றல், அவரது செய்கையில் முழு வேகத்துடன் விளங்கியதற்கு ஓர் முக்கிய காரணம், அவர் அடைந்திருந்த பண்பாடே. அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வமாகவே அவர் கருதிப்பணிந்தவர். தூய வாழ்க்கை நடத்தி, நாடக மாடுவதிலும் உயர்ந்த லட்சியங்களையே சதாபேணி, தமிழின் வளத்தைப் பெருக்கும் உயர்ந்த சேவையையும் இடையறாது செய்து இன்று எண்பதாண்டுகள் கடந்து பழுத்த பழமாய்க் காண்கிறார் அவர். இன்றும், நாடக மேடையில் பிறர் நடிப்பதை சிறிதும் குற்றங்காணும் மனத்தோடு பாராமல், சிறந்த உற்சாகத்தோடும் பிறர் பால் பரிவுடனும் தம்மை வைத்துக்கொண்டிருப்பது ஒன்றே அவருள்ளம் பெற்றிருக்கும் பக்குவம் உண்மை என ருஜுப்படுத்துகின்றது.

தமிழகம், போற்றத்தகுந்த பெரியார்களில் தாமும் ஒருவராய் இருப்பதைக்காட்டிலும் அவருக்கு வேறு என்ன திருப்தி இருக்கக் கூடும்?

கலியாணகாலமும் : :

: : ஆரம்பமாகிவிட்டது !

ராதா ஸில்க் எம்போரியத்திலும்
கொள்ளேகாலர் கூரைச் சேலைகளும்
வந்து குவியத் தொடங்கிவிட்டன !
உங்கள் வீட்டுக் கலியாணத்திற்குத்
தேவையானவற்றை இன்றே
ஒரு முறை வந்து பாருங்கள் !

ராதா ஸில்க் எம்போரியம்

ஸன்னதி தெரு —:— மயிலாப்பூர்

[போன் : 84188]

எங்கள பிராஞ்சு : ருக்மணி சில்க் எம்போரியம், பெரிய தெரு, கும்பகோணம். Phone 58.

முத்தமிழ்

['புலவரேறு' அ. வரதநஞ்சைய பிள்ளை]

தென் மொழியாகிய நம தமிழ் 'முத்தமிழ்' என்னும் வித்தகப் பெயர் சூடி விளங்குகின்றது இதைப்போன்று வேறு எம்மொழிகளும், மூடுதெலுகு, மூறு கன்னட, த்ரிஸ்ம்ஸ்க்ருத: என்பன வாதியாக மூன்றோடு இணைந்து வழங்கக்கண்டிலோம். ஈதொருவியப்பே! காரணம் ஆராய்ச்சிக்குரியது.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பேருறுப்புக்களையும் கொண்டு நிறைவுறும் 'ஒரு பிண்டம்' என்பதனை உணர்த்தும் குறியீடே 'முத்தமிழ்' எனப் பெற்றது. ஏனைய பல மொழிகளும் இம் முப்பகுதிகளையும் வெவ்வேறு கலைகளாகக்கொள்ள, நமது மொழி, மூன்றையும் ஒன்றென அமைத்த காரணம்பற்றிக் கருதுவோமானால், மிகச் சிறந்த அரிய தத்துவக் கருத்துக்கள் வெளிப்படுதல் காண்போம்.

அகத்தியனாரால் இயற்றப்பெற்ற முதனூலாகிய அகத்தியத்தில், இயல், இசை நாடகப பகுதிகள் தனித்தனி கூறப்படாமல் கலந்து சூத்திரங்களாக இயற்றப்பட்டிருத்தலையும் ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும். உயிரையும், அதன் பண்புகளையும் மிக நுணுகி ஆராய்ந்துணர்ந்த பண்டைத்தமிழ் ஞானச் செல்வர்கள். உயிராவது:- (1) அறிவு, (2) இச்சை அல்லது விருப்பம், (3) செயல் அல்லது தொழில் என்னும் இம் முக்குணங்களையும் ஒருங்கே உடையதோர் குணிப் பொருளென நிறுவினர். இத் தத்துவக் கருத்துக்கள் தம தாய்மொழிக்கும் பொருந்தும் முறையை நாடி, இயற்றமிழை அறிவுக்கும், இசைத் தமிழை இச்சைக்கும், நாடகத் தமிழைச் செய்கைக்கும் ஒபபெனக்கொண்டு, நன்கு அமைத்து முத்தமிழ் எனப் பெயர் சூட்டி நம் முன்னோர் பொன்னேபோற் போற்றி இம் மொழியை வளர்ப்பராயினர்.

உயிர்களுடன் இறைவன் ஒன்றிக் கலந்து அவைகளின் அறிவை வித்தியா தத்துவத்தினாலும், இச்சையை இராக தத்துவ மூலமாகவும், செய்கையைக் கலா தத்துவங்கொண்டும் (கடிகாரத்திற்குச் சாவி கொடுத்து நடத்துவிப்பதுபோல) இயக்குவிக்கின்றான், என்று சைவநூல்கள் சாற்றுகின்றன.

உயிர்ப் பண்புகளாம் இம் மூன்றில், அறிவு பிறர்க்குப் புலப்படாமையால் அருவநிலையது. அவ்வாறே இலக்கியப்பகுதிகளும், செய்யுள் உரை வடிவங்களில்தோன்றி இலக்கண இலக்கிய நயச்சுவை நுண்பொருட் கருத்துக்கள் பலவும கற்றோர்க்கு இனிது விளங்குமாறு பிறர்க்கு விளக்காமையின் அருவ நிலையின.

இரண்டாவதாகிய இச்சை, உள்ளிருக்கும் எண்ணங்களைப் பிறர்க்குணர்த்தும் விருப்பத்தோடு வாக்கின் வழியே வெளிப்பட்டுக் கேட்போரை மகிழ்வித்து ஒலிவடிவாய் அடங்குதலின், அருவுருவநிலையுடையது. ஆங்கே, இசைத் தொகுதிகளும், சட்சமுதலாக எழுவகை நிலத்தும் தோன்றிப் பண்களும் அவற்றின் திறங்களுமாகப் பல பிரிவுகாட்டி, குழல், யாழ், மிடறு என்னும் மூனறின் வழியாக வெளிப்பட்டுக் கேட்போர் செவிவழிச் சென்று களிப்பூட்டிக் கழிதலால், அருவுருவ நிலை கொள்வன.

மூன்றாவதாக உள்ள தத்துவமாகிய செயல் மனத்தால் எண்ணி வாக்கால் இசைத்த பொருளை உடல் உறுப்புக்களைக் கொண்டு காரியப்படுத்தி யாவர்க்கும் கண்கூடாகக்காட்டி முடிக்கும் தன்மையால், உருவ நிலைமைத்து. அஃதே போன்று, நாடகத் தமிழும், இயல், இசைகளால் குறிக்கப்படும் கருத்துக்களை அவிநய ஆடல்களால் கண்ணுறக்காட்டி உணர்த்திக் கருதியதை முடிவுறுத்தலின், உருவநிலைபெற்று முடிந்த முடியாக உயர்நிலைமையில் ஒளிர்வதாயிற்று. ஆகவே, எண்ணமும் சொல்லும் காரியப்படாதவழிப் பயனில்லை போலவே இயல், இசைகளின் நாட்டம் அனைத்தும், நாடகமில்வழி பயனில்லையென்பது தெளிவு.

நாடகத் தமிழின் முன்னிலையும் இன்றைய நிலைமையும்

பண்டைக் காலத்தில் (சுமார் இருபது நூற்றுண்டுகட்குமுன்) நம் தமிழில் இலக்கியப் பகுதிகள்போலவே இசைநூல், நாடக நூற்பகுதிகளும் வரம்பற்றுப் பெருகி வளர்ந்திருந்தன. கால வெள்ளத்தாலோ, கவனக் குறைவாலோ, வேற்றரசர் புகுந்தாண்ட மாற்றத்தாலோ, வேறெக் காரணங்களாலோ இசைக்கும் நாடகத்துக்கும் இறப்பு நேர்ந்து தமிழ்மொழியின் அங்கத்தைக் குறை செய்தது. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் கூறப்படும் பொருட்கள் பலவும், அடியார்க்கு நல்லாரும், அரும்பத உரைகாரரும் காட்டும் சிறு கைவிளக்குக்ளைக்கொண்டு ஒரு சிறிது காண்பதன்றி முற்றும் விளங்கக் காணமுடியாமலிருக்கின்றன, அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன்பே இசை நூலும் கூத்துநூலும் பெரும்பாலும் உயிர் நீத்தனவென்றறிய மிகவும் இரங்குகின்றோம். அக்காலத்திருந்தவைகள் எனக் கூறப்பெறும் இசை, நாடகநூல்களின் பெயர்களை அடியார்க்கு நல்லார் கூறுவதிலிருந்துதான் அறிகின்றோம் வேறு எங்கும் கேட்கப் பெற்றிலோம். பெருநாரை, பெருங்குருகு, நாரதனார் இயற்றிய பஞ்சபாரதீயம், பரதம் அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், முதலியனவே, அவர் எடுத்துக் காட்டி அழிந்தனவென்று கூறுவன. அடியார்க்கு நல்லார் காலத்து எஞ்சியிருந்தவை. அகத்திய முனிவர் மாணக்கர் பன்னிருவருள் ஒருவராகிய சிகண்டியார் இயற்றிய இசை நுணுக்கம். யாமளேந்திரர் செய்த இந்திர காளியம், அரிவனூர் உரைத்த பஞ்சமரபு, ஆதிவாயிலார் அறைந்த பரத சேனபதியம். மதிவாணர் நாடகத் தமிழ்நூல், ஆகிய இவைகள், பழங்காலத் தமிழ்நாடகக் கருத்துக்களை நன்கு அறிந்தன அல்ல என அவரே உரைக்கின்றார். இக்காலத்து இவையும் காணப்படவில்லை, எங்கே அக்ஞாதவாசம் செய்கின்றனவோ? உருமாறி ஒழிந்தனவோ? வைத்துச் சேமித்த இடத்தில் கரையான்களுக்கு விருந்தாயினவோ? அறிகிலோம் சில ஆண்டுகட்கு முன்பு பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்) முயன்றுழைத்து முடிந்த அளவு திரட்டி அளித்த நாடக இயல் ஒன்றும், காலஞ்சென்ற தமிழ் அடிகள் விபுலாநந்தர் சிலப்பதிகார அடிப்படையைக்கொண்டு பெரிதும் முயன்று உதவிய யாழ்நூலும் இவை போன்ற சிற்சில நூற்களுமே தமிழில் வழங்கும் இசைத் தமிழ் நாடகத் தமிழ்களின் உருத் தோன்றும் குறிகளாகவுள்ளன. இன்று வழங்கும் இசைக்கூத்து மரபுகள் தொன்று தொட்டு தொடர்ந்த வழக்க முறையும் வேற்று மொழிகளிடம் இரவல் பெற்றுக்கொண்ட புதுமையும் திரண்டவைகளே.

(3) மக்கள் கருதாமல் கையாளும் அவிநயங்கள்.

நாடகநூற்களை நாம் தேட முயலாதொழியினும், அன்றுடமும் மக்களைவிட்டு அவிநயம் நீங்கவில்லை.

ஒருவனை வருகஎன அழைத்துக் கொண்டே கைகுவித்து வளைத்து அசைத்துக் காட்டுகின்றோம். வேண்டாம் அல்லது போதும் என்று வார்த்தை கூறுமுன் விரல்களைப் பொருந்த நிமிர்த்தி வலமும் இடமும் அசைக்கின்றோம். அவன் என்று கூறுமுன்பே சுட்டு விரல்தானே நீண்டு அவனை நோக்கிக் குறிக்கின்றது. இசைப் பாடல்களையோ வேறு காட்சிகளையோ கண்டுகேட்டுக் களிக்கும்போது தலை தானுக அசைகின்றது இவ்வாறு நாடோறும் மக்கள் கருத்து வாய்வழிப்புறப்படுமுன் உடலுறுப்புக்களும் அதற்குதவத் தாமே வலிந்து பணி செய்கின்றன. இவ்வாற்றால், நாடகக்கலை உயிருள்ள வரையும் நம்மை விடாப்பிடியாகப்பற்றி நம்மை எதிர்பாராமலே ஒற்றுமை நட்பைக்காட்டி வருகின்றது

(4) நாடகத்தின் தெய்வீகத் தன்மை.
நாடகம் அனைத்தும் உயிரின் தாண்டவமே.

நமது வாழ்க்கைக்கு மூன்று சாதனங்கள் மிகவேண்டற்பாலன: அவை இன்றேல் ஒரு கணமும் நாம் வாழ்தல் இயலாது.

அவை (1) மனப்-நினைப்பது, இது சுகக் கரணங்களுள் முதன்மையானது (2) கண்கள்-நோக்குவன, இவை ஞானேந்திரியம் (அறி கருவிகள்) ஐந்தில், சிறந்தவை. (3) கை-தொழில் புரிவது. இது ஐந்தில் (தொழிற் கருவிகள்) உயர்ந்தது, இம் மூன்றும் அவிநயத்திற்கும் இன்றியமையாதவைகள் மனத்திற்குறித்த குறிப்பை வாய்க்கு வேலைகொடாமல் கை செய்கையால் குறிப்பிக்கின்ற அவிநயத்தில், கை பல அடையாளக் குறிப்புகளைக் காட்டும்போது அவ்வழியே கண்கூடச் செல்கின்றது. அதனைப் பின்பற்றி மனமும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆகவே மேற்குறித்த சிறப்

புள்ள மூன்றுவகைக் கருவிகளும் அவிநயத்திற்கு முக்காரணங்களாய் உயிர் நாடிகளாய் விளங்குவதாகின்றதென்றறிக.

“கைவழி நயனஞ்செல்லக்
கண்வழி மனமுஞ்செல்ல
ஐய நுண்ணிடையாடும்
ஆடல்”...என்பர் (கம்பர்).

நாடகத்தில் ஆட்டம், அவிநயம் என்றிரண்டு பகுதிகள்உள. ஆடும்போது அவிநயம் வேண்டா. அவிநயத்தில் ஆட்டம் மிகை என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. உயிர் உள்ளிருந்து எல்லாக் கருவிகளையும் இயக்குவித்து ஆடிக்கொண்டிருந்தலால் அதற்கு கூத்தன் என்றும் ஒரு பெயர் உண்டு.

“தோற்பை யுள்நின்று
தொழிலுறச் செய்தாட்டும்
கூத்தன் புறப்பட்டக்கால்” (நாலடி)

ஊன்றிக் கருதினால் ஆடி அசைந்து இயங்காத உயிர்ப்பொருள்களும் எங்கும் என்றும் இல்லையென்பது புலனும்.

சிவபெருமான், பல அண்டங்களும் அவற்றிலுள்ள சராசரங்களும் நிலைபெற்று நன்மையடைதற் பொருட்டு தன் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமையம்மை கண்டு களிகூர ஓயாது ஆதியும் முடிவுமில்லா அற்புதத் திருக்கூத்தாடி நடனசபாபதி, கூத்தன் என்றும் பட்டப்பெயர் புனைவராயினர். திருமாலும் காளியங்கன் என்னும் பெரும் பணியின் தலைமேல் நின்று மகிழ்ச்சி பொங்கிக் குதித்தாடுகின்றார். என்றும் இளையாராகிய முருகவேள் இயற்கையாகவே நடனம் செய்யும் மயிலைத் தேர்ந்துகொண்டு அதன் மேல் ஏறி விளையாடுகின்றார். எல்லா அண்டங்களும் இரவி, மதி நாண்மீன் கோண்மீன்களும் இடையீடின்றிச் சுழன்று ஆடிவருகின்றன. ஆகவே, ஆட்டம், சகல பொருட்களிலும் கலந்து நிறைந்து கடவுள் தன்மையை நிகர்ப்ப நிலவுகின்றதன்றோ?

இறைவன் தானே ஆடாவிடில் எவையும் இடம் பெயராவாகி நிலைகெடும், என்பதை உணர்ந்த தமிழ்ஞானப் பெரியோர்கள், ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே... என்றும், “யானெனதென்றவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்றாய்” என்றும், அகில மீது என்னையாட்டி ஆடுகின்றவனும் நீ ஆடல் காண்பவனும் நீ...என்றும், “அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே-அவர். ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே...” என்றும் இங்ஙனம் பலவகையாக இத் திருக்கூத்தைப் புகழ்ந்து பகர்வாராயினர்.

(4) புறநாடகம் ஆடிய பதினொரு தேவர்கள்.

மனிதர்க்கேயன்றிக் கூத்தும் பாணியும் பற்பல தேவர்கட்கும் உரிமையாம் என்பதனைச் சிலப்பதிகார அரங்கேற்றுகாதை விரித்து விளம்புகின்றது.

இங்ஙனம் தேவர்களும் வியந்து கைக்கொள்ளத்தக்க நாடகத்தின் பெருமை நவிதற்கரியதாய என்க.

(5) நாடகம் என்ற பெயர்க் காரணம்.

நாடகம் என்பது:-நாடு + அகம் எனப் பகுக்கப் பெற்று. (விரும்பிக் காண்பவர்கள்) ஆராய்ந்துணர்கின்ற உள்ளக் குறிப்புக்களைக்கொண்டது என வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைப் பொருள் தருவதோர் தொடர்மொழியாம்.

(6) நாடகம் இன்பக் கடலின் கொந்தளிப்பே.

காமமும் வென்றியும் பொருளாகக் கூத்துத் தோன்றுதலால் அது நம் உள்ளத்தில் பொங்கி எழும் ஆனந்த சாகரத்தில் கொந்தளித்தெழும்பும் பேரலைத்திறங்களே எனக் கூறுவோம். தேக சுகாதார விஷயங்களைப் பற்றியும விவசாயப் புதுமுறைகளைக் குறித்தும் சாதாரண மக்கட்குச் சொற்பொழிவு மூலமாக எடுத்துரைப்பதைக் காட்டிலும் படக்காட்சி—நாடக வாயிலாகக் காட்டின் நல்லபயன் விளையும் என்பதை யாரே மறுப்பவர்?

“மேனாடுகளிலே நகர சபைகள் நாடகக் கலைக்காக உதவி செய்கின்றன. அங்கே காணப்படும் பெரிய தியேட்டர்கள் நகர சபைகளுக்குச் சொந்தமானவைகளே. பாரிஸ் பட்டணத்தில் உள்ள பெரிய அருமையான நாடகக் கொட்டகை அந்த ஊர் நகர சபையின் சொந்தக் கட்டிடம். அதுபோலவே மேல் நாடுகளிலே மற்ற இடங்களிலும் விலை உயர்ந்த நாடகக் கொட்டகைகள். நாட்டிய சாலைகள் எல்லாம் நகர சபைகளுக்குச் சொந்தம். இனி இங்கும் நகர சபைகள் நாடகக் கலைக்கு ஆதரவு தருமென்று நம்புகிறேன்.”

—டாக்டர் ஆர். கே. ஷண்முகம்.

தமிழில் நாடகங்கள்

[கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை]

நாடகம் ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர், படித்தவர், படியாதவர் யாவருக்கும் நல்லறிவையூட்டு மென்பதில் யாதும் ஐயமில்லை. ஒருசமயம் ஸ்ரீமதி சரோஜனி தேவியார் "நாடக சாலை சாதாரண மக்களின் சர்வகலாசாலை" என்று கூறியிருக்கின்றனர். இது முற்றிலும் உண்மையே. கண்ணால் பார்க்கும் பொழுது ஏற்படக்கூடிய ஒரு உணர்ச்சி காதால் கேட்கும் பொழுது உண்டாக மாட்டாது. இதனாலேயே ஆங்கிலத்தில் 'One eye is worth two ears' என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

நாடகத்தமிழ், நாடகத்தமிழ் என்று கூறித் தமிழ் மக்கள் அனைவரும் பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆனால் தமிழ் மொழியில் குறவஞ்சி, பள்ளு முதலியவைகளைத் தவிர பாத்திரங்களும் பிறவும் வகுத்து வழங்கும் 'சாகுந்தலம்' 'ஹாம்லெட்' முதலிய நாடகங்களைப் போன்ற நாடகங்கள் ஆதிகாலத்தில் இருந்தனவோ என்பது சந்தேகமே. பண்டிதர்களைக் கேட்டால் நம் இலக்கியச் செல்வங்களெல்லாம் கபாட புரத்தைக் கடல் கொண்டு போனதோடு போய்விட்டன என்று கூறி வாயடைத்து விடுகின்றனர். கடல் கொண்டு போனநாடக நூல்கள் இனிகரையேறிவரப் போவதில்லை. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதைக்கு அடியார்க்கு நல்லார் எழுதியிருக்கும் உரையை அப்படியே திருப்பித் திருப்பிச் சொல்லிப் பழம் பெருமை பாராட்டிக் கொள்வதினாலும் பயன் பெறமாட்டோம். இன்று தமிழில் நல்ல நாடகங்கள் இல்லாத குறை, குறையாகவே இருக்கின்றது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுவது தமிழறிஞர்களின் கடமையாகும். இதற்காக ராவ்பகதூர் சம்பந்த முதலியார் அவர்கள், நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள், முத்தமிழ்க் கலா வித்வரத்தின டி. கே. எஸ் சகோதரர்கள் முதலியோர் செய்துவரும் தொண்டு மிகவும் போற்றற் குரியதாம்.

தற்காலம் தமிழில் வெளிவரும் நாடகங்கள் பெரும்பாலும் புராணக் கதைகளைத் தழுவி எழுதப்பட்டவைகளாகவே இருக்கின்றன. 'இப்ஸன்' (Ibsen) 'பர்னாட்ஷா' (Bernardshaw) முதலிய மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதிவரும் நாடகங்களைப் போன்ற **சமுதாய முன்னேற்ற நாடகங்களும் வெளிவர வேண்டுவது மிக்க அவசியமாம்.**

நாடகக்கலை அபிவிருத்தி அடைய வேண்டுமானால் நாடக ஆசிரியர்கள் மட்டுமல்ல. நடிகர்களும் நல்ல தேர்ச்சியுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு நடிகன் ஒரு பார்வையினால் அல்லது ஸ்வர பேதத்தினால் விளக்கும் உண்மையை ஒரு ஆசிரியர் பத்துப் பக்கங்கள் எழுதினாலும்கூட விளக்கிக் கொள்ளமாட்டார். மேனாட்டு நாடகாசிரியர் ஒருவர் நாடகம் பார்க்கச் சென்றிருந்தார். அன்று அவரால் எழுதப்பட்ட கதையொன்று தேர்ச்சியுள்ள நடிகர்களால் அங்கு நடிக்கப்பட்டது. நடிப்பைப் பார்த்ததும் அவர் பிரமித்து விட்டார். ஆஹா! நான் நினைத்திராத எவ்வளவோ விஷயங்கள் இந்த நடிப்பிலிருந்து விளங்குகின்றனவே! என்று ஆச்சரியப்பட்டாராம். ஆதலால்நடிகர்களும் நாடகக்கலையின் அபிவிருத்தியின் பொருட்டுக் கண்ணும்கருத்துமாக இருக்க வேண்டியது அவசியமாம்.

நாடகம் பார்க்கும் ரஸிகர்களும் குண குற்றங்களை எல்லாம் பட்சபாதமின்றி எடுத்துக்கூற வேண்டும். **நாடகக் கலையால் ஜனங்களும், ஜனங்களுடைய ஆராய்ச்சி அறிவினால் நாடகக் கலையும் திருந்தி வருமென்பது உறுதி.**

ஆதிகாலத்தில் தமிழில் நாடகம் இருந்ததோ இல்லையோ என்ற ஆராய்ச்சி அவசியமேயில்லை; இப்பொழுது தரித்திரனாயிருக்கிற ஒருவன் அவனுடைய முப்பாட்டன் கப்பலோடி வியாபாரியாயிருந்தான் என்ற கதையைக் கூறிக்கொண்டிருப்பதினால் யாதும் பயனுண்டா? தரித்திரன் முயற்சி செய்து குபேரன் ஆவதில் ஆட்சேபமில்லை.

(ஈரோடு நாடகக்கலை மாநாட்டுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டவை.)

கிரேக்க காமெடி அரிஸ்தோ பேனஸ்

[பி. கோதண்டராமன்]

மக்களுக்குப் பொழுதுபோக்கு அளிப்பதே நாடகத்தின் பிரதான வேலையாகும். ஆனால், அது வெறும் பொழுது போக்குக் கானதொரு சாதனமாக நின்று விடமுடியாது. அது மக்களின் உள்ளம் நெகிழ்ந்து தூய்மையும் விழுப்பமும் அடையச் செய்ய வேண்டும். சமூகத்திலோ, சிலரகமான மனிதர்களிடமோ காணப்படும் குறைபாடுகளை விளையாட்டாகச் சித்திரிப்பதன் மூலம் போதனையும் செய்ய வேண்டும். சர்வகலைகளிலும் சிறப்புற விளங்கினவரும், நாடகக் கலையை மிக உன்னத நிலைக்கு உயர்த்தினவருமான பழங் கிரேக்கர்களிடையே நாடகம் இப்பிரதான லட்சணங்களுடனேயே விளங்கியது. அவர்களுடைய அவலச் சுவை நாடகங்கள் இயற்கையின் கோரத்தாண்டவத்தையும் தெய்வங்கள் மக்களின்மீது விதித்த இரக்கமற்ற விதியையும் எதிர்த்துப் போராடின. மனிதனின் போராட்டங்களைச் சித்திரித்து உணர்ச்சிகளைத் தூய்மையடையச் செய்தன. அவர்களுடைய நகைச்சுவை நாடகங்கள் சமூகத்தில் சிலரிடம் காணப்பட்ட பழுதுகள், பிழைகள், ஊனங்கள், கோணல்கள், அவிவேசங்கள், பிரமைகள், கபடங்கள் இவற்றையெல்லாம் கேலி செய்தன. நாடகங்களைக் காலதேசவர்த்தமானங்களை ஒட்டிய ஒரு பொழுது போக்காகவும் ஆற்றல் வாய்ந்த சீர்திருத்த சாதனமாகவும் ஆக்க முயன்று வரும் நாம் இவற்றிலிருந்து பல பாடங்கள் கற்கலாம். இங்கே, பழைய கிரேக்கக் காமெடிக்கு உயிரூட்டிச் சிறந்து விளங்கிய அரிஸ்தோபேனஸின் நாடகங்கள் சிலவற்றின் பிரதான இயல்புகளைச் சுருக்கமாக ஆராய்வோம்.

"உண்மையான காமெடி, ஒரு சமுதாயத்தின் மதியீனங்கள், விசித்திரமான மனப்போக்குகள், குறைபாடுகள் இவற்றின் பேசும் படமேயாம்" என்றார் பிரெஞ்சுப் பேரறிஞர் வோல்தேர். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில், ஆதன்ஸ் நகர ராஜ்யம் பெரிக்ளஸ்ஸின் தலைமையில் சீர்பெற விளங்கிய காலத்தில் பழைய காமெடி இருந்து வந்த லட்சணத்தை இதைவிட விவரமாகக் கூறியிருக்க முடியாது. அரிஸ்தோபேனஸ் எழுதிய நாடகங்களைப் படிப்பதானது ஆதன்ஸ் நகர விகடப் பத்திரிகை யொன்றை படிப்பது போலவே இருக்கும். அவற்றில் அன்னிய மக்களின் வாழ்க்கை யாவும் காணலாம். அக்காலத்திய அரசியல் நிலையையும் ராஜீயவாதிகளையும் நேரில் பார்க்கலாம் யுத்தக் கட்சி, யுத்த எதிர்ப்புக் கட்சி, சமாதான வாதம், பெண்களுக்கு வாக்குரிமை தடையில்லா வர்த்தகம், வரிவிதிப்புச் சீர்திருத்தம், வரிசெலுத்துவோரின் முணுமுணுப்பு, கல்வி முறை பற்றிய கொள்கைகள் நடைமுறை சமய, இலக்கிய சம்பந்தமான உரையாடல்கள்—சுருங்கக் கூறின். சாமானிய குடிமக்கள் அக்கரை கொள்ளும் விஷயங்கள் யாவும் காட்சியளிக்கும் நாடகாசிரியனின் பரிகசிப்புக்கு யாவும் இலக்காயின. அரிஸ்தோபேனஸ் தம் காலத்திய குறைபாடுகளை, மக்கள் தவறாகப் பெருமையடித்துக் கொண்ட இயல்புகளையும் சித்திரித்தார்.

சோக்ரதர் பிளேட்டோ இவர்கள் சித்திரித்த அதினிய உலகம் வேறு, அரிஸ்தோபேனஸ் சித்திரித்த உலகம் வேறு, சோக்ரதர் காலத்தில் அதினிய கனவான்கள் மரியாதையும் இனிய நடத்தையும், நல்லுணர்ச்சிகளும் உடையவராக இருந்தனர். அரிஸ்தோபேனஸ்ஸின் நாடகங்களில் இத்தகைய லட்சணங்கள் உடையவர்களை நாம் காணமுடியாது. இவற்றில் அதினியரின் பாமரத் தன்மையையும், வினயமும் மரியாதையுமற்ற கரடு முரடான சுபாவங்களையும், தன்னடக்கமில்லாத குதூ

கலங்களையும், கலக இரைச்சல்களையுமே பிரத்யட்சமாகக் காண்கிறோம். அவர்களிடையே காலத்தின் உற்சாகமும், அபரிமிதமான ஆற்றலும், உயிர்ச்சக்தியும், பொங்கி வழியும் உணர்ச்சிகளும், அமளி செய்யும் உல்லாசக் களியாட்டமும் நன்கு பிரதிபலித்தன. ஒரு பக்கம் அவலச்சுவை நாடகம் செழித்தது; மற்றொரு பக்கம் ஆரவார நகைச்சுவை நாடகம் கொம்மாளமடித்தது.

'குளவிகள்' என்ற நாடகத்தில் பணியாட்கள் இருவர் தம் எஜமானரின் தகப்பனாரைப் பற்றி பேசிக் கொள்வதைப் பாருங்கள்.

முதல் பணியாள்; அவர் ஒரு விபரீத நோயால் வருந்துகிறார் என்ன நோய் சொல்லுடார்ப்போம். அமினியாஸ் சொல்கிறான். அது ஒரு சூதாட்ட நோய் என்று. இரண்டாவது பணியாள்: அவன் வருந்துவது அந்த நோயால் ஆகவே அப்படிச் சொல்கிறான்.

மூதல் பணியாள்: அது குடியால் வந்த நோயென்று சோஸியன் சொல்கிறான்.

இரண்டாவது பணியாள்: போடா போ! அதுதான் நேர்மையான கனவான்களின் நோயாயிற்றே.

"தவளை" என்ற நாடகத்தில் ஜனரஞ்சிதமாக எழுதும் எழுத்தாளர் நகைக்கப்படுகின்றனர். "மேகங்கள்" என்ற நாடகத்தில் சோக்ரதர் ஆகாயத்தைப் பார்த்து நடப்பவர் எனக் கேலி செய்யப்படுகிறார்.

பெண்களைப் பற்றிய மூன்று நாடங்களில் நாட்டின் முன்னேற்றம் கருதி பெண்களே இலக்கியம், யுத்தம் ராஜாங்கம் ஆகியவற்றின் பொறுப்புக்களை மேற்கொள்கின்றனர்.

நாடகம் பார்ப்போர் நாட்டு நடப்பையும் தம் காலத்திய இலக்கியத்தையும், சிந்தனைகளையும் நன்கறிந்தவர்கள். எஸ்கிலஸா யூரிபிதர் என்ற பிரபல நாடகாசிரியர்களும் 'தவளை' நாடகத்தில் கேலி செய்யப் படுகின்றனர். 'ப்ளூட்டஸ்' என்ற நாடகத்தில் ஒருவன் 'நல்லவர்களுக்கு இது காலமில்லை, திருடர் அரசியலில் ஈடுபட்டு செல்வம் குவிக்கின்றனர்' என்றான். "பட்சிகள்" என்ற நாடகத்தில் போலிக் வி ள் பரிகசிக்கப்படுகின்றனர். 'போர் வீரர்கள்' என்ற நாடகத்தில் தள்கர்த்தர் இருவர் கேலி செய்யப்படுகின்றனர், "தெஸ்மோகிபோரியாஜூஸ" என்ற நாடகத்தில் பெண் பாத்திரங்கள் நாடகம் பார்ப்போருக்கு ஒரு சொற்பொழிவே ஆற்றிவிடுகின்றனர்.

"ஆண்கள் எங்களைக் கண்டபடியெல்லாம் அவதூறாகப் பேசுகின்றனர். யுத்தம் சண்டை, கொலை, இத்தீமைகள் யாவும் எங்களாலேயே உண்டாகின்றனவாம், நாங்கள் சண்டைக் காரிகளாம், கலகக்காரிகளாம். விண்ணிலும் மண்ணிலும் குழப்பம் செய்பவர்களாம். சரி, உங்களை ஒன்று கேட்கிறோம் நாங்கள் உண்மையாக பிளேக்போல உங்களைத் தொந்தரவு செய்பவர்களாக இருப்பின் எங்களை மனைவிமார்களாக அடைய நீங்கள் அவ்வளவு அவாவுவதேன்? வீட்டில் புன்னகையுடன் எங்களை விளிப்பதேன்? உங்களை வீட்டில் வரவேற்க பெண் இராவிடின் நீங்கள் முகம் வாடி வருந்துவதேன்? நாங்கள் தொந்தரவுக் காரிகளாக இருப்பது உண்மையாயின் ஒருநாள் இரவு தோழியின் வீட்டுக்குச் சென்று விட்டால், பயித்தியம் பிடித்தவர்களைப் போல் எங்களைத் தேடியலைவதும், எங்களைச் சந்தேகிப்பதும் ஏனோ?"

இந்த மாதிரியாக அரிஸ்தோபேனஸ் நாடகங்களில் எத்தனையோ நிகழ்ச்சிகளைக் காட்டலாம் பரிகாசங்கள், தூஷணைகள் ஆரவாரங்கள் பல அவற்றுள் மலிந்துள்ளன. பதார்த்த வாழ்க்கையின் உண்மைக் கட்சிகள் அவை, பச்சையான, அப்பட்டமான வாழ்க்கைச் சித்திரங்கள் அவை. நன்மை, தீமை, இழிமை, யாவும் அவற்றில் சித்திரிக்கப்படுகின்றன. வெட்கமின்றி, கூச்சமின்றி அரிஸ்தோபேனஸ் யாவற்றையும் சித்திரிக்கிறார். வாழ்க்கையில் ஹாஸ்யச்சுவை எங்குள்ளதோ அதையெல்லாம் கண்டு அம்பலப்படுத்துகிறார். அக்காலத்தில் அதினியர்கள் வாழ்க்கையை சுவைத்தனர். வலிமையும் பிரியமும் வாய்ந்து அட்டகாசம் செய்த அவர்களின் வாழ்க்கையில் ஜீவசக்தி கரைபுரண்டோடியது. அரிஸ்தோபேனஸ் யாவற்றையும் அப்படியே சித்தரித்தார். காலத்தின் கோலங்களைத் தத்ரூபமாகக் கண்ணாடி போலக்காட்டினார். காலத்தின் கோலங்களாயினும், அவை மக்களினத்தின் நிரந்தர சுபாவங்களின் சித்திரங்களாகவே இருந்தன. அதனால் தான் அரிஸ்தோபேனஸ் இன்றும் நாடக உலகில் கலங்கரை விளக்கம் போல ஒளிவீசுகிறார்.

★

'மனோன்மணீயம்' என்னும்
அரிய நாடக காப்பியம் அருளிய பேராசிரியர்
திரு பி. சுந்தரம் பிள்ளை

★



★

'நாடக இயல்' வகுத்த
அறிஞர்
திரு "பரிதிமாற் கலைஞன்"

★

தமிழ் நாடகத் தலைமை யாசிரியர்

திரு தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகள்

நாடகப் பெருந்தகை

திரு எம். கந்தசாமி முதலியார்.

தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

['அவ்வை' டி. கே. ஷண்முகம்]

1918-ம் ஆண்டு முதல் 1922-ம் ஆண்டு வரை முதுபெரும்புலவர் சங்கரதாஸ் சுவாமிகளிடம் நான்காண்டுகள் நாடகக் கல்வி பயிலும் நற்பேற்றினைப் பெற்றேன். அவருடைய அறிவாற்றலைப் பற்றி அன்று நான் நன்கு அறிந்துகொள்ள முடியாத பருவம். இன்று உணருகிறேன் அந்தப் பேரறிஞரின் பெருமையை.

ஒரு பாடல் எழுதுவதற்காக ஒரு நாள் முழுதும் மண்டையை உடைத்துக்கொண்டு அவஸ்தைப்படும் இன்றைய சினிமாப் பாடலாசிரியர்களைப் பார்த்துவிட்டு, அடித்தல் திருத்தல் எதுவுமின்றி ஒரே இரவில் நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதிக் குவித்த அந்தப் பெருமானையும் நினைக்கும்போதுதான் அவருடைய பேரறிவும் பெருந் திறனும் நமக்குப் புலனாகின்றன.

சுவாமிகளின் ஆழ்ந்த தமிழறிவும், இசைப் புலமையும், நாடகத்திறனும் இன்றுதான் தமிழ் மக்கள் உள்ளத்தில் சுடர்விடத் தொடங்கியிருக்கின்றன,

நாடக உலகில் சுவாமிகள் என்றாலேபோதும்; அப்பெயர் சங்கரதாஸ் சுவாமிகள் ஒருவரைத்தான் குறிக்கும்;

நாடகத் தமிழை வளர்த்த தந்தை அவர்; இன்றையத் தமிழ் நாடகாசிரியர்கள் பலருக்கும் பேராசிரியர் அவர்.

சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கிடையே சுவாமிகளின் பாடல்களையோ, வசனங்களையோ மேடையில் உபயோகிக்காத தமிழ் நடிக நடிகையர் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

எளிமையும் இனிமையும் ததும்பும் பாடல்களாலும், தேன் சொட்டும் தீந்தமிழ் வசனங்களாலும் சுவாமிகள் இயற்றியருளிய நாடகங்கள்தான் தமிழ் நாடகக் கலைவளர்ச்சிக்கு அடிப்படைச் செல்வம் என்று கூறினால் அது மிகையாகாது.

ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்கு முன்பெல்லாம் நாடகமேடையில் முழுதும் பாடல்களேதான் பாடப்பட்டு வந்தன. அக்காலத்தில் நாடகங்கள் எழுதிய ஆசிரியர்கள் எல்லோரும் நாடகம் முழுவதையும் பாடல்களாகத்தான் எழுதினார்கள். அருணாசலக் கவிராயர் அவர்களின் 'இராம நாடகம்' இதற்குச் சான்று கூறும்.

சில ஆண்டுகளுக்குப் பின் இந்நிலை மாறி நடிகர்கள் தம் தம் திறமைக்கேற்றவாறு நாடகக் கதைக்கும் புறம்பாகப் போகாமல் கற்பனையாகவே பேசிக்கொள்ளும் முறை வழக்கத்தில் வந்தது.

இந்தச் சமயத்தில்தான் நமது சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடக உலகில் ஒழுங்கும் கட்டுப்பாடும் உண்டாக்க வழிகோலினார்.

அந்தக்காலத்திலே நடைபெற்றுவந்த புராண இதிகாச நாடகங்களுக்கெல்லாம் பாடல்களும் உரையாடல்களும் எழுதி, வரம்புக்குட்படுத்தியதோடு, புதிய நாடகங்கள் பலவற்றையும் இயற்றி உதவினார்.

சுவாமிகளால் இவ்வாறு எழுதப்பட்ட நாடகங்கள்தான் சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ் நாடக் மேடைக்கலை அழிந்து போகாமல் காப்பாற்றிவந்தன. இன்றும் ஸ்பெஷல் நாடக நடிகர்கள் பலருக்கு உயிர் கொடுத்து நிற்பது சுவாமிகளின் கோவலனும், வள்ளி திருமணமும், பவளக்கொடியும்தான்,

காலவேகத்தில் நடிகர்கள் சுவாமிகளின் பாடல்களை மட்டுமே உபயோகித்துக்கொண்டு உரையாடல்களைத் தம் தம் உளப்போக்கிற்கேற்றவாறு பேசிக்கொள்ளத் தொடங்கினர். நாடகமேடை விவாதமேடையாயிற்று. நாடகக் கலை நலியத் தொடங்கியது. ஸ்பெஷல் நாடகங்களிலே போட்டியும் பூசலும் தாண்டவமாடின.

பிற்காலத்திலே பெரிய நடிகர்கள் பலரிடம் ஏற்பட்ட இந்த கட்டுப்பாடின்மைதான் தமிழகத்தில் சிறுவர்களை நடிகர்களாகக் கொண்ட நாடகசபைகளின் வெற்றிக்குக் காரணமாயிருந்தன என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒரு நாடகம் சிறப்பாக இருக்கவேண்டுமானால் அந்நாடகத்தில் பங்குகொள்ளும் நடிகர்களி

டையே ஒழுங்கும் நியதியும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும். சுவாமிகள் தமது வாழ்நாள் முழுதும் இதைத்தான் வலியுறுத்திவந்தார்.

தமிழகத்திலே முன்பு நடைபெற்றுவந்த பல நாடகங்களை உங்களில் சிலர் பார்த்திருக்கலாம். ஆனால், அந்நாடகங்களை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பதை உங்களிற் பெரும்பாலோர் அறிந்திருக்க முடியாது.

இதோ சொல்லுகிறேன். கோவலன், வள்ளி திருமணம், பவளக்கொடி, அல்லி அர்ஜுனா. சீமந்தனி, சதி அநுசூயா, மணிமேகலை, லவகுசா சாவித்திரி, சதி சுலோசனா, பிரகலாதன், சிறுத்தொண்டர், பிரபுலிங்க லீலை, பார்வதி கல்யாணம், வீர அபிமன்யு முதலிய பல நாடகங்கள் சுவாமிகளால் இயற்றப்பெற்றவை.

இந்த நாடகங்களையெல்லாம் ஒழுங்காக நாடகங்களை நடத்திவந்த எந்த நாடகசபையாரிடம் நீங்கள் பார்த்திருந்தாலும் அவர்கள் சுவாமிகளின் பாடல்களையும் உரையாடல்களையும் தான் உபயோகப்படுத்தி யிருப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை.

இந்தப் புராண இதிகாச நாடகங்கள் அனைத்தும் இன்றைய இளைஞருலகிற்குப் பிடிக்காதிருக்கலாம். ஆனால், இந்த நாடகங்கள்தான் தமிழ் நாடகமேடையைப் பாதுகாத்துத் தந்தவை என்பதைத் தமிழர்கள் மறந்துவிடக்கூடாது.

புராண இதிகாசக் கதைகள் என்பதற்காக அந் நாடகங்களிலே பொதிந்து கிடக்கும் பேருண்மைகளையும், அந் நாடகங்களைப் பல ஆண்டுகளுக்குமுன் இயற்றியருளிய பேராசிரியரின் நாடகத்திறனையும் நல்லிசைப் புலமையையும் அலட்சியப்படுத்துதல் கூடாது.

ஆங்கில மோகத்தால் தாய்மொழியிற் பேசுவதுகூடக் கௌரவக் குறைவென்று கருதப்பட்ட காலத்திலே நாடக மேடையின் மூலம் தமிழை வளர்த்த பெரியார் நமது சங்கரதாஸ் சுவாமிகள்.

இசையரங்குகளிலே தெலுங்குமொழி ஆதிக்கம் பெற்றிருந்த காலத்திலே நாடகமேடையில் தீந்தமிழ்ப் பாடல்களால் தமிழர்களுக்கு மகிழ்வளித்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அவரை மறப்பது தமிழை மறப்பதாகும்.

சுமார் 40 ஆண்டுகட்கு முன் சுவாமிகளால் எழுதப்பட்டு தமிழ் நாடக மேடையில் பிரசித்தி பெற்ற நடிகர்கள் எல்லோராலும் நடிக்கப்பட்ட கோவலன் நாடகத்தைப் பண்டிதர்கள் சிலர் கண்டிக்கின்றனர், குறைகூறுகின்றனர்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் பெருமையறியாத எவனோ ஒருவன் 'கோவலன்' என்ற பெயரால் ஒரு நாடகத்தை கிறுக்கி வைத்துவிட்டான் என்பது பண்டிதர்களின் எண்ணம்.

சுவாமிகளின் அரும்பெரும் புலமைத் திறன் இவர்களுக்குத் தெரியாது. தமிழ் மொழியிலே உள்ள அடிப்படை நூல்கள் அத்தனையும் சுவாமிகளுக்கு மனப்பாடம்,

அவருடைய நாடக வசனங்களிலும் பாடல்களிலும் திருக்குறளும் நாலடியாரும் வாரி இறைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, குறுந்தொகை முதலிய சங்க நூல்களிலே புதைந்து கிடக்கும் சீரிய பேருண்மைகளெல்லாம் சுவாமிகளின் வசனங்களிலே எளிமையோடு வெளிவந்துலாவுவதைக் காணலாம்.

'மணிமேகலை'யைச் சிறிதும் மாற்றாமல் காப்பியப்படியே நாடகமாக்கித்தந்த சுவாமிகள் சிலப்பதிகாரக் கோவலனுக்கு ஏன் வேறு வடிவம் கொடுத்தார் என்பதைச் சிந்திக்காமல் குறைகூறுவது தவறு.

விலைமாதர் கூட்டுறவில் அல்லற்படும் இளைஞர்களுக்கு நீதிபுகட்ட ஒரு புதிய கதை எழுதுவதைவிட, யாவரும் நன்கறிந்த ஒரு காப்பியக் கதையைத் தழுவி எழுதுதல் நல்ல பயனைத் தரும் என்பதுதான் சுவாமிகளின் நோக்கமாயிருந்திருக்க வேண்டும்.

இவ்வாறு நாடகம் புனைவதற்கு தமிழ் நாடக இலக்கண விதிகள் அனுமதிக்கின்றன. மெய்யுரை, பொய்யுரை, புனைந்துரை என்பனவற்றுள் புனைந்துரை என்ற இலக்கண வரம்புக்குட்பட்டதே 'கோவலன்' நாடகம்.

சுவாமிகள் 'கோவலன்' நாடகத்தை எழுதிய காலத்தில் இன்றையப் புலவர்களைவிட மிகப் பெரும் பண்டிதர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்களில் எவரும் சுவாமிகள் தவறு செய்துவிட்டார் என்று கூற முன்வரவில்லை.

அக்காலத்தில் சுவாமிகள் இலங்கைக்குச் சென்றிருந்தபோது மாபெரும் புலவர்கள் நிறைந்த யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்திலே சுவாமிகளின் புலமையை ஆராயப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அக்கேள்விகளுக்கெல்லாம் மிக எளிதாகச் சுவாமிகள் விடையளிக்கவே சுவாமிகளின் முத்தமிழ்ப் புலமையை வியந்து சங்கத்தார் 'வலம்புரிச் சங்கம்' ஒன்றை சுவாமிகளுக்குப் பரிசாகத் தந்து பாராட்டினார்கள்.

இத்தகைய ஒரு பெரும்புலவரைப் பழித்துக் கூறுதல் அனுபவரீதியான உண்மைகளை அறியாததின் விளைவு என்றே கருதுகிறேன்.

இனி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றி நான் அறிந்தவற்றைக் கூறுகிறேன்.

தமிழர் வரலாற்றிலே அழியாத இடம் பெற்ற வ. உ. சிதம்பரனார், வீரபாண்டியக் கட்டபொம்மன், மகாகவி பாரதியார் ஆகியோரைத் தந்த திருநெல்வேலி மாவட்டம்தான் நாடகப் புலவராகிய சங்கரதாஸ் சுவாமிகளையும் நமக்குத் தந்தது.

திருநெல்வேலி மாவட்டத்திலே துறைமுக நகரங்களில் ஒன்றான தூத்துக்குடியிலே, வெள்ளையரை விரட்டியடித்த வெள்ளையத்தேவன் பரம்பரையிலே, போரில் புறமுதுகு காட்டாத வீர மறக்குடியிலே, 'தாமோதரக் கணக்கப்பிள்ளை' என்பாரின் செல்வத் திருமகனாகப் பிறந்தார் சங்கரதாஸ் சுவாமிகள்.

தந்தையார் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய தமிழ்ப்புலவர். நகர மக்கள் அவரை இராமாயணப் புலவர் என்ற சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர்.

"தந்தை மகற்காற்றும் நன்றி
அவையத்து முந்தியிருப்பச் செயல்"

என்ற தமிழ் மறையை நன்கறிந்த தாமோதரத் தேவர் தமது புதல்வனுக்குத் தாமே தமிழ்க்கல்வி புகட்டினர்.

அக்காலத்தில் புலவரேறு என்று அறிஞர்கள் போற்றிய பழனி தண்டபாணி சுவாமிகளிடம் நமது சுவாமிகள் பாடம் கேட்டுத் தமது தமிழறிவை வளர்த்துக்கொண்டார்.

அதன்பின் தூத்துக்குடி உப்புப் பண்டக சாலையிலே சுவாமிகள் சிலகாலம் கணக்கராக வேலை செய்தார். பதினறுவது வயதிலே சுவாமிகள் வெண்பா, கலித்துறை, இசைப்பாடல்கள் முதலியவற்றை எழுதத் தொடங்கினர்.

கவிதைப் புலமைக்கும் கணக்கு வேலைக்கும் போட்டி யேற்படவே சில ஆண்டுகளுக்குப்பின் தமது 24–வது வயதில் சுவாமிகள் நாடகத் துறையில் பிரவேசித்தார்.

முதன்முதலாக சுவாமிகள் புலமையை அறிந்து பயன்படுத்திக்கொண்டது ராமுடுஐயர் கல்யாணராமையர் ஆகிய பழம்பெரும் நடிகர்களின் நாடக சபையென்று சொல்லப்படுகிறது.

இச்சபையில் சுவாமிகள் சூத்ரதாரராகவும், இரண்யன், ராவணன், எமதருமன், நள தமயந்தியில் சனீஸ்வரன் முதலிய வேடங்களிலும் தோன்றி நடித்துவந்தார்.

ஒருநாள் சனீஸ்வரனாக நடித்துவிட்டு விடியஐந்துமணிக்கு வேடத்தோடு குளிக்கச் சென்றாராம். அந்தசமயம் இவரது தோற்றத்தைக் கண்டு பயந்து தண்ணீர்க்குடத்துடன் எதிரே வந்த ஒரு அம்மையார் மாரடைப்பினால் உயிர் துறந்தாராம்.

ஏற்கனவே மேடையிலும் இவ்வாறு சுவாமிகளின் வேடங்களையும் நடிப்பையும் பார்த்து பல பெண்மணிகள் பயந்ததின் காரணமாக அன்றுமுதல் சுவாமிகள் வேடம்புனைய மறுத்து ஆசிரியத் தொழிலை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

அதன் பின் சுவாமிகள் தமிழகத்திலே நடைபெற்று வந்த பல நாடக சபைகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறார்.

சமரச சன்மார்க்க நாடக சபை என்ற பெயரால் தாமே சொந்தத்தில் ஒரு நாடக சபையையும் சில ஆண்டுகள் நடத்தினர்.

இடையே சிலகாலம் வாழ்க்கையில் வெறுப்புற்று ஆண்டிக் கோலத்துடன் தீர்த்தயாத்திரை செய்தாராம். அதன் பிறகு தான் எல்லோரும் அவரைச் சுவாமிகள் என்று அழைக்கத் தொடங்கினர்.

தீர்த்த யாத்திரை முடிந்ததும் சில ஆண்டுகள் புதுக்கோட்டை மகாவித்வான் கஞ்சிரா மான் பூண்டியா பிள்ளை அவர்களுடன் சுவாமிகள் வசித்து வந்தார்.

புலவர்களால் மிகக் கடினமென்று கருதப்பட்ட 'வண்ணம்' 'சந்தம்' இவற்றைப் பாடுவதில் சுவாமிகள் வல்லவரா யிருந்தமையால் மான்பூண்டியாபிள்ளை அவர்களுக்கு சுவாமிகளிடம் பற்றுதல் ஏற்பட்டது. சுவாமிகளுடைய சந்தங்களிலே காணப்படும் தாள விந்நியாசங்களையும், சொற் சிலம்பங்களையும் பார்த்துப் பரவசமடைந்த பிள்ளையவர்கள் சுவாமிகளைத் தமது ஸ்வீகார புத்திரராக ஏற்றுக்கொண்டாராம்.

சுவாமிகளைச் சந்தங்கள் பாடச் சொல்லி விட்டு பிள்ளையவர்கள் கஞ்சிரா வாசித்துத் தானே மகிழ்ச்சியடைவாராம். இக்காலத்திலே தான் தமிழகத்தின் தலை சிறந்த மிருதங்க வித்வான்களான புதுக்கோட்டை தட்சணாமூர்த்திப் பிள்ளை அவர்களும், பழனி முத்தையாபிள்ளை அவர்களும் கஞ்சிரா, மான் பூண்டியா பிள்ளை அவர்களிடம் மாணவர்களாயிருந்து வந்தனர்.

சில ஆண்டுகளுக்குப்பின் சுவாமிகள் மீண்டும் நாடக ஆசிரியப்பொறுப்பை மேற்கொண்டார். பிள்ளையவர்களையும் அடிக்கடி சென்று பார்த்து வருவதுண்டு.

திரு பி. எஸ். வேலுநாயர் அவர்கள் நடத்தி வந்த நாடகசபையில் சுவாமிகள் சில ஆண்டுகள் ஆசிரியராயிருந்தார்.

நாயரவர்களும் எனது தந்தையார் திரு கண்ணுசாமிப்பிள்ளை அவர்களும் சுவாமிகளின் அன்புக்குரிய மாணவர்களாவார்கள்.

தமிழ் நடிகருலகில் திருவேல் நாயரவர்களின் பேச்சுத்திறனைப் புகழாதாரில்லை. இத்தகைய நாவன்மை அவருக்கேற்பட்டது சுவாமிகள் அளித்த தனிப்பட்ட பயிற்சியினாலும், சுவாமிகள் பால் நாயரவர்களுக்கிருந்த பக்தியினாலும் தான் என்று எனது தந்தையார் சொல்லிக்கேட்டிருக்கிறேன்.

திரு ஜெகனாதய்யர் அவர்களின் பாலமீன ரஞ்சனி சங்கீத சபைதான் சுவாமிகள் ஆசிரியராயிருந்த முதல் 'பாய்ஸ்' கம்பெனி.

பிற்காலத்தில் ஆசிரியப் பொறுப்பேற்று பல நடிகமணிகளைத் தோற்றுவித்த P. D. சம்பந்தம் T. P. பொன்னுசாமிப்பிள்ளை, காமெடியன் சாரங்கபாணி, M. S. முத்துகிருஷ்ணன், D. பாலசுப்ரமண்யம், M. V. மணி, S. V. வெங்கடராமன், நவாப் T. S. ராஜமாணிக்கம் முதலிய பல நடிகர்கள் இந்த பாய்ஸ் கம்பெனியில் இருந்தவர்களே.

இந்தச் சபையிலே இருந்தபோது நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்களின் 'மனோஹரன்' நாடகத்திற்கு சுவாமிகள் பாடல்கள் எழுதினார்.

சிலகாலம் அந்தச் சபையில் இருந்த பின் ஜெகனாதய்யர் அவர்களிடம் ஏற்பட்ட மனத்தாங்கலின் விளைவாக சுவாமிகள் மதுரை வந்து சில நண்பர்களின் கூட்டுறவில் 1918-ம் ஆண்டில் தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா என்ற பாய்ஸ் கம்பெனியைத் தோற்றுவித்தார்.

இந்தச் சபையிலேதான் டி. கே. எஸ். சகோதரர்களாகிய நாங்கள் சுவாமிகளிடம் பயிற்சி பெற்றோம்.

சுவாமிகளின் புலமைக்கு எடுத்துக் காட்டாக எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. அவை ஒரு நூல்வடிவில் வரவேண்டிய விஷயங்கள்,

அதிசயிக்கத் தக்க ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் கூறுகிறேன்.

நான் நடிக்கத் தொடங்கிய காலத்தில் அநேகமாக எல்லா நாடகங்களிலும் எனக்கு நாரதர் வேடம் கொடுக்கப்பட்டு வந்தது.

ஒருநாள் நாடகசபையின் உரிமையாளர்களில் ஒருவரான 'திரு. பழனியாபிள்ளை' அவர்கள் சுவாமிகளிடம் 'ஷண்முகம்' கதாநாயகனாக நடிப்பதற்குரியவாறு ஒரு நாடகம் எழுதுங்கள் என்று கூறினார். அப்போது எனக்கு வயது ஏழு. என்றாலும் நன்றாக நினைவிருக்கிறது.

அன்று மாலை சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்று அபிமன்யு சுந்தரி அம்மானைப் பாடல் பிரதி ஒன்று வாங்கி வந்தார். இரவு சாப்பாட்டுக்குப்பின் ஒரு அரிக்கன் விளக்கை அருகில் வைத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார்.

மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்தபோது சுவாமிகள் 'அபிமன்யு' நாடகத்தை எழுதிமுடித்துவிட்டு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். இது வெறும் கட்டுக் கதையல்ல; உயர்வு நவிற்சியுமல்ல; கண்கண்ட உண்மை. இதை உடனிருந்து பார்த்த நடிகர்களிற் சிலர் இன்னும் இருக்கின்றனர். திரு. பழனியா பிள்ளை அவர்கள் எல்லோரையும் அழைத்து ஒரு இரவுக்குள் எழுதி முடித்திருந்த 'அபிமன்யு' நாடகத்தைக்காட்டி ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

நூற்றுக்குமேற்பட்ட பாடல்கள்; அதற்கேற்ற வசனங்கள்; ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அடித்தல் திருத்தல் கிடையாது.

ஒரு புத்தகத்தைப் பார்த்து நகல் எடுக்கும் வேலைகூட இவ்வளவு விரைவாகச் செய்ய முடியாது. கற்பனையாக ஒரு நாடகத்தையே எழுதி முடித்துவிட்டார் ஒரே இரவில். சுவாமிகளின் புலமைத் திறனை என்னென்று கூறுவது?

இவ்வளவு விரைவில் எழுதிமுடித்த அந்த நாடகத்தின் பாடல்களில் உள்ள கருத்தாழம் சொல்நயம், வசனங்களிலே நிறைந்துள்ள கற்பனை ... அடடா! நேரமில்லையே சொல்வதற்கு.

"டே, ஷண்முகம்! இந்த நாடகம் உனக்காக எழுதப்பட்டது" என்று சுவாமிகள் அன்று கூறியபோது எனக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை. இன்று அதை எண்ணி எண்ணிப் பூரிப்படைகிறேன். பெருமிதங் கொள்கிறேன்."

சுவாமிகளைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். உடுமலை முத்துசாமிக் கவிராயர் அவர்களோடு சுவாமிகளுக்குள்ள அன்புத் தொடர்பும் அது பற்றிய செய்திகளும் அபூர்வமானவை.

புலவர்களை ஆதரித்து வந்த இராமனாதபுரம் சேதுபதி மன்னர் அவர்கள் கனகாபிஷேகம் செய்யச் சித்தமாயிருந்தும் சுவாமிகள் மனிதனைப் புகழ்ந்து பாடமாட்டேனென்ற தமது நோன்பை இறுதிவரைக் காப்பாற்றிய செய்திகள் சிறப்புக்குரியவை.

சுவாமிகளின் பாடல்களை நூல் வடிவில் வெளியிடச் சில அச்சகத்தார் விரும்பியபோது "தமிழை விற்கச் சம்மதியேன்" என்று மறுத்து விட்டது, இவைபோன்ற மற்றும் பல சம்பவங்கள் சுவாமிகளின் நற்பண்புகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

இவ்வாறு நாடகத் துறையில் நடிகராகவும், ஆசிரியராகவும் பல ஆண்டுகள் வாழ்ந்த சுவாமிகள் இறுதிவரை பிரம்மச்சாரியாகவே இருந்து கடைசியாகத் தமது ஐம்பத்தைந்தாவது வயதில் பிரஞ்சிந்தியாவைச் சேர்ந்த புதுச்சேரியிலே 1923-ல் பூதவுடல் நீத்தார்.

சுவாமிகள் மறைந்தார்; அவரது பாடல்கள் என்றும் மறையாது; அழியாது. சுவாமிகளின் பரம்பரையென்று நாம் சொல்லிக்கொள்ள மூன்றுபுலவர்கள் தமிழகத்திலே வாழ்கிறார்கள். ஒருவர் சுவாமிகளிடம் வெண்பா, கலித்துறை முதலியவற்றைப் பாடம் கேட்ட உடுமலை நாராயணக் கவிராயர், மற்றொருவர் மதுரை மாரியப்ப சுவாமிகள், மூன்றாமவர் மதுரை நடிகர் சங்கத் தலைவராயிருக்கும் இசக்கி முத்து வாத்தியார்.

சுவாமிகளின் திருப்பெயர் தமிழ் நாடக உலகம் உள்ளளவும் மங்காது நின்று ஒளி வீசுமாக வாழ்க சங்கரதாஸ் நாடகப் பணி!

o

"நாடகத்தினால் நடிகனுக்கு இன்பம் பெருகுகிறது என்பது கண்கூடு. அதிகம் சொல்வானேன்? இன்பவுணர்ச்சி இல்லையென்றால் நாமும் இரவில் கண் விழித்து முகத்தில் சாயம் பூசிக்கொள்ள மாட்டோம். அன்பர்களும் காசைக் கொடுத்துக் கண் விழித்திருக்க மாட்டார்கள்."

—நவாப் டி. எஸ். 'ராஜமாணிக்கம்'

o

தேக ஆரோக்கியத்தையும் ஜீரண சக்தியையும் ருசியையும் கொடுக்கக்கூடியது.

உணவிற்கு மணந் தருவது

சாஸ்திரீக முறைப்படி தயார் செய்யப்பட்டது

டி. டி.

மிஸ்கி பெருங்காயம்

ரஷீட் ஜேம்ஷேட் ஸன்ஸ் & கோ.,

205, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

தலைமை ஆபீஸ்: பம்பாய் o கிளை: மதுரை — கும்பகோணம்

உணர்ச்சி பொங்கட்டும்

கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ் மக்களுக்குத் தமிழ்நாட்டு உணர்ச்சியும் தமிழ்மொழி உணர்ச்சியும் பொங்கிப் பெருகவேண்டும். உணர்ச்சி பொங்குவதற்குச் சிந்திப்பது ஒன்றே சிறந்தவழி! அச்சிறந்த வழி திறந்தவெளியில்தான் அமைந்திருக்கிறது.

சிந்தனையை ஒரு செல்வமாகக் கருதி வாழ்ந்துவந்தார்கள் பழந்தமிழ் மக்கள். அதனைப் பெரும்பாலும் இழந்து வாழ்பவர்கள் இன்றைய தமிழ் மக்கள். சிந்தனைச் செல்வத்தை இழந்துவிட்ட ஒன்றினாலேயே தமிழ் மக்கள் உணர்ச்சியை இழந்துவிட்டனர். உணர்ச்சியை இழந்துவிட்டதனாலேயே தமிழ் மக்களின் வாழ்வை இருள் கவ்விக்கொண்டு விட்டது. உணர்ச்சி பொங்கிவிட்டால் வாழ்வும் பொங்கிப்போகும்; இன்றேல் அது மங்கி மடியும்.

இழந்த உரிமையை, இழந்த வாழ்வை, இழந்த நிலத்தை, இழந்த அரசைத் தமிழ் மக்கள் மீண்டும் பெறவேண்டும். அழிந்த பண்பை உயிர்ப்பிக்கவேண்டும் நிலைகுலைந்த மொழியைப் போற்றி வளர்க்கவேண்டும். இவற்றிற்கு வேண்டுவது உணர்ச்சி ஒன்றே. அதைப் பெறுதற்கு உங்கள் உள்ளத்தில் சிந்தனைச் செடியை வளர்த்தாகவேண்டும். அதற்குரிய விதைகள் இவை:—

பிறநாட்டினர் அனைவரும் தங்கள் தங்கள் நாட்டின் எல்லைகளைப் பெருக்கியும் பாதுகாத்தும் வரும்பொழுது தமிழ் மக்கள் மட்டும் தங்கள் நாட்டின் எல்லைகளை நான்கு புறத்திலும் இழந்து வருவது ஏன்?

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்குமுன் தோன்றிய மூத்த குடியினர்" எனப் பெயர்பெற்ற தமிழ் மக்கள், தங்களைத் தாங்களே ஆண்டுவந்த தமிழ் மன்னர்களின் மக்கள் இன்று அடிமைகளாக வாழ்வது எதன் பொருட்டு?

திசை எட்டும் திரிவதற்கு முன்னே, பின்னே தோன்றி, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இலக்கண வரம்பைப் பெற்று, இன்றும் எழில் குன்றாது இருக்கின்ற தமிழ் மொழியும், எழுத்தும் இன்று வந்தவன் போனவன் எல்லாம் குறைக்க, கூட்ட, கலக்க, சிதைக்க, மாற்ற, அழிக்க ஆளாகியிருப்பது எதனால்?

கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னமேயே ரோமாபுரி முதலிய நாடுகளுக்குப் பாய்க்கட்டிக் கப்பல்கள் மூலம் தமிழ் நாட்டு விளைபொருள்களை அனுப்பி, கடல் வாணிகம் செய்துவந்த தமிழ் மக்கள் இன்று ஏற்றுமதி இறக்குமதி உரிமைகளைக்கூட இழந்து வருவது ஏன்?

மிக உயர்ந்த ஆடைகளைப் பஞ்சிலும், பட்டிலும், எலி மயிரிலும் செய்து உலக முழுவதும் அனுப்பிப் பெயர்பெற்றுவந்த கட்டபொம்மன் ஆண்ட 1800-ம் ஆண்டில்கூட இங்கிலாந்துக்கு இங்கிருந்து ஆடை நெய்து வழங்கிய-தமிழ் மக்கள் இன்று தங்கள் கைத்தொழிலையும் இழந்து தவிப்பது எதன் பொருட்டு?

தமிழ் நிலத்தில் செடி முளைத்தபோதே தமிழ் மருத்துவமானது இன்றும் உலகில் சிறந்த ஒன்றாக இருந்தும் அது தமிழ் மக்கள் கண் முன்னாலேயே, அதுவும் தமிழ் நாட்டிலேயே படுகொலை செய்யப்பெற்றுக் குற்றுயிராகக் கிடந்து வருவது ஏன்?

வந்த விருந்தினர்க்கெல்லாம் வாரி வழங்கி, உண்டு வாழ்ந்துவந்த தமிழ்நாட்டில் இன்று பட்டினிச்சாவுகள் ஏற்படுவது எதன் பொருட்டு?

பிறநாட்டு மக்கள் எல்லாம் மொழிவாரி நாடு பிரிக்க முற்பட்டிருப்பதைக் கண்டும் தமிழ்நாட்டு மக்கள் அத்துறையில் ஊமையராய் செவிடர்களாய், குருடர்களாய் வாழ்ந்துவருவது எதன் பொருட்டு?

"எங்கள் நாட்டில் எங்கள் மொழியே அரசியல் மொழியாக இருக்கவேண்டும்" என்று

பிறநாட்டார் எல்லாம் போராடி வெற்றி பெற்று வருவதை அறிந்தும் தமிழ் மக்கள் மட்டும் சீராடிக்கொண்டிருப்பது ஏன்?

தமிழ்நாட்டிலுள்ள வானொலி நிலையம் தமிழ்மொழி, இசை, கலை, பண்பாடு முதலிய வைகளை வளர்க்க விரும்பாமல், தெலுங்குக்கும், ஆங்கிலத்திற்கும், இந்திக்கும், உழைத்துத் திருவள்ளுவர் விழா நடந்தாலும், செவிடாகவும், தமிழ்த் தலைவர்கள் இருந்தாலும் குருடாகவும், தபால் எழுதிக் கேட்டாலும் ஊமையாகவும் மாறி, இங்கிலாந்தில் நடக்கும் தமிழிசை தமிழ்ப் பேச்சுக்களைக்கூட ஒலி பரப்பாமல் இருட்டடிப்புச் செய்துகொண்டு **வானொலி நிலையம்**என்ற தன்பெயரைக்கூடத் தமிழில் சொல்ல வெட்கப்பட்டு, 'ஆகாச வாணி' எனப் பிறமொழியாலும், 'ஆல் இண்டியா ரேடியோ' என ஆங்கிலத்திலும் சொல்லிக்கொண்டு தமிழ்நாட்டின் மானத்தையும், மரியாதையையும் போக்கிக் கொண்டிருப்பதும எதன பொருட்டு?

இலங்கையில் தமிழ்மொழி அரசியல் மொழியாக ஆக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டும் கூட தமிழ் நாட்டில் தமிழ்மொழி அரசியல் மொழியாக இல்லாதது ஏன்?

இலங்கைத் தீவில் தமிழ்மொழியில் எழுதிய தந்திச் செய்திகள் ஏற்கப்பெற்றும், தமிழ் மொழியில் எழுதிய தந்திச் செய்திகள் மக்களுக்கு வழங்கப்பெற்றும் வருகிறது. தமிழ்நாட்டில்.........? ஏன்?

ஆந்திரர்களுக்கு ஆந்திரமகாசபையும், மலையாளிகளுக்குக் கேரள ஐக்கிய சங்கமும், கன்னடியர்களுக்கு கன்னட சம்யுக்த சம்மேளனமும் இருக்கும்பொழுது தமிழர்களுக்கு என ஒரு கழகம் தமிழ் நாட்டிலே இல்லாதது எதன் பொருட்டு?

ஒவ்வொரு நாட்டினர்க்கும் ஒவ்வொரு தலைவர் இருக்கும்பொழுது தமிழ் நாட்டிற்கு மட்டும் ஒரு தலைவர் இல்லாதிருப்பது எதனால்?

ஒவ்வொரு நாட்டிலும், அவரவர் மொழியை வளர்க்க பாதுகாக்க என்று ஒவ்வொரு அமைப்பு இருக்கும்பொழுது **தமிழ் மொழிக்கு** என ஒரு அமைப்புத் தமிழ் நாட்டில்கூட இல்லாதிருப்பது ஏன்?

முத்தமிழ் என்ற பெயர்பெற்று தமிழ் தோன்றும்போதே உடன் தோன்றியுள்ள தமிழ் இசையும் தமிழ் நாடகமும் தமது பண்ணையும், தமது **பண்பை**யும் வெளிநாடுகளில் பரப்ப முடியாவிட்டாலும் தமிழ் நாட்டில்கூட வளர்க்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது எதனால்?

$2\frac{1}{2}$-இலட்ச நாற்புற மைல் நிலப்பரப்பும், 3-கோடி தமிழ் மக்களும் உயர்ந்த மொழியும் சிறந்த பண்பும், நுண்ணிய அறிவும், வீர மரபும், ஓயாத உழைப்பும்,உலக வாணிகமும், இரும்பு, உருக்கு, தங்கம், பழுப்பு, நிலக்கரி முதலிய பலவிதக் கனிப் பொருள்களும், பரந்து விரிந்த கடற்கரையும் இன்றும் கொண்டுள்ள இத் தமிழ்நாடு இந்த இழிநிலையில் இருப்பது எதனால்?

ஒரே விடை—உணர்ச்சியில்லை

என்பதுதான்.

இந்நிலை இன்னும் நீண்டால், தமிழ்நாடு செழிக்குமா? தமிழ்மொழி வளருமா? தமிழ் மக்கள் வாழ்வார்களா? என ஒவ்வொரு தமிழ் மகனும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழையும், தமிழ் நாட்டையும் மறந்து பிறநாடுகளுக்குத் தொண்டு செய்யச் சென்ற தமிழர்கள் கட்டாயம் வழி திரும்புவார்கள். அதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. தமிழ் நாட்டிற்கு, தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு என ஒரு அமைப்பும், அமையும் அந்நாள் வெகுவிரைவில் மலர வேண்டும் எனவும், நாடும், மொழியும் செழித்து மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் எனவும், அதற்குரிய **உணர்ச்சி** உடனே பொங்கிப் பெருக வேண்டும் எனவும் இந்த நல்ல நாளிலே ஆசைப்படுவோமாக!

ஸ்பெஷல் நாடகங்கள்

['இசை நாடக ஒளி' எம். கே. தியாகராஜ பாகவதர்]

நாடகத்துறையில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் வெகு சொற்பமே. என் நாடக வாழ்க்கையில் எனக்குத் தெரிந்தவை நான்கு ஐந்து நாடகங்கள்தான். வள்ளி கல்யாணம், பவளக்கொடி, கோவலன், லலிதாங்கி, நந்தனார்..............இதைச் சொல்ல நான் வெட்கப்படவில்லை; ஏனென்றால் எனக்கு முன் எவ்வளவோ அனுபவமுடைய நடிகர்களும் கூட இந்த இரண்டு மூன்று நாடகங்களுடன் இன்னும் இரண்டொன்று சேர்ந்து ஆக நான்கைந்து நாடகங்கள் தான் நடத்திவந்திருக்கிறார்கள். தற்போதும் நடத்தி வருகிறார்கள். நாடகக்கலை வளர்ச்சியடைய வேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் கிடையாது. நாடக மகாநாடு கூட்டுவது ஸ்பெஷல் நாடகம் நடத்தும் நடிகர்களைக் குறை கூறுவது என்று மட்டும் போய்க்கொண்டிருந்தால் எவ்வாறு நாடகக்கலைவளர்ச்சியடைய முடியும்? இன்று ஆயிரக்கணக்கான தமிழ் நடிகர்கள் தென்னாட்டில் இருக்கிறார்கள். எல்லோருக்கும் சினிமாவில் பிழைப்புக்கு வழியிருக்கிறதா? ஸ்பெஷல் நாடகங்கள் நடக்கக்கூடாது என்ற திட்டம் வந்தால் இவ்வளவு நடிகர்களின் கதியென்ன? ஸ்பெஷல் நாடகங்கள் நடத்துவதை ஒருபோதும் நிறுத்த முடியாது! கம்பெனிகள் மூலமே நாடகம் நடைபெற வேண்டுமென்று விரும்பினால் நாடகக்கலை ஒருபோதும் வளர்ச்சியடைய முடியாது. நூற்றுக் கணக்கான நடிகர்களை வைத்துக் கம்பெனி நடத்துவதென்பது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல. ஆகவே, நாடகக்கலை உயர வேண்டுமானால் குறைந்த நடிகர்களைக் கொண்ட சிறந்த புதிய நாடகங்கள் தோன்ற வேண்டும். அவைகளைப் புத்தக ரூபமாக வெளியிடவேண்டும். நடிகர்கள் ஒவ்வொருவரும் அதைப்படித்து அதன்படி நடிக்கவேண்டும். தமிழ் நாட்டில் எந்த மூலையிலிருந்து வேண்டுமானாலும் நடிகர்களை அழைத்துவந்து ஸ்பெஷல் நாடகங்கள் போடலாம். பாடம் ஒன்று என்று வந்துவிட்டா நாடகம் நிச்சயமாய் நன்றாய்த்தானிருக்கும். ஸ்பெஷல் நடிகர்களுக்கு சிறந்த நாடகங்களைப் புதிதாய் நடிக்க வேண்டுமென்ற ஆர்வமுண்டு. அவர்கள் நடிப்பதற்கொத்த முறையில் நாடகங்கள்தானில்லை.

பால்ய நாடகக் கம்பெனிகளைப்போல் சிறந்த சீன் உடைகளுடன் ஸ்பெஷல் நாடகங்கள் நடத்த ஒருபோதும் முடியாது. கதை புதிதாய் ரசனையாயிருந்து விட்டால் இப்பொது ஸ்பெஷல் நாடகங்களில் நடைபெறும், அநேக குறைபாடுகள் ஒழிந்து, முறையே நாடகக்கலை வளர்ச்சி அடைய வழியுண்டு.

இன்னொன்று பாட்டைப்பற்றியது.

நம் தமிழ் நாடகத்தில் எடுத்ததற்கெல்லாம் பாட்டாகவே பாடி விடுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இது ஓரளவு குறைய வேண்டியதுதான் என்றாலும் ஓரேயடியாய்ப் பாட்டுகளைக் குறைத்து விட்டால் பொதுமக்களின் ஆதரவு கிடைக்குமென்று நான் நம்பவில்லை. ஏனென்றால் நாடக மேடையில் பாட்டு அதிகமாக ஏற்பட்டது இன்று நேற்றல்ல, முற்காலத்தில் நம் நாடகம் முழுவதுமே பாட்டாகத்தான் இருந்தது என்பதற்கு ஆதாரங்களிருக்கின்றன. வர வர அது குறைந்துதான் வந்து கொண்டிருக்கிறது. ஓரேயடியாய்ப் பாட்டை தள்ளி விடக்கூடாது இயலையும், இசையையும் தன்னுள் கொண்டதாகவேயிருக்க வேண்டும் நாடகம். கதைக்குத்தகுந்த முறையில் வேண்டிய பாடல்கள் அமைக்க வேண்டும்.

கதை மூன்று பிரிவாக வகுக்கவேண்டும்.

அறிவை வளர்க்கும் கதைகள்; அறத்தை நிலை நிறுத்தும் கதைகள்; பக்தியை உண்டாக்கும் கதைகள் என்று மூன்றாய் கதைகளைப் பிரித்து; பக்தி, அறம், முதலியவைகளைப் போதிக்கும் கதைகளில் பாடல்கள் அதிகமிருக்கலாம். அவைகள் கதைகளுக்குச் சுவை ஊட்டுவனவாகவேயிருக்கும். ஆனால் அறிவை வளர்க்கும் கதைகளில்தான் இடம் பார்த்து பாடல்கள் அமைக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகத்திலுள்ள கலைகளிலேயே சிறந்தது நான்கு. ஒன்று இசை, இரண்டு நடகம், மூன்று சித்திரம், நான்கு சிற்பம்.

இது உலகுக்கே பொதுவான கலையாயிருந்தாலும் அவரவர் நாட்டில் பண்பட்டு வந்த கலைதான் அவரவர்களுக்குப் பிடிக்கும். தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் நாடகம் மிகப்பழமையான கலை. அது படிப்படியாய் வளர்ச்சியடைந்து தான் வந்திருக்கிறது. நாடகத்தின் நிழல்தான் சினிமா. நாடகத்தை விட்டு -து வேறல்ல. நம் நாடகம் சகல கலைகளுக்கும் உறைவிடமாயிருக்கிறது. அது அவ்வாறு தான் இருக்கவேண்டும்.

★

"கலையென்று ஆரம்பித்து வெறும் வியாபாரத்தில் முடிந்து, அதில் மோசமும் துர் நடத்தையும் புகுந்து விடுவது இந்த யுகத்தின் நிகழ்ச்சி முறை. அதற்கு இடங்கொடுக்கக் கூடாது."

—ராஜாஜி

நாடகக் கலை வளர...

[பு. ரா. மதிவாணன்]

தமிழன் பண்டுதொட்டே நாகரீகச் சிறப் படைந்தவன். உலக மொழிகளில் பல தோன்றுதிருந்த காலத்திலேயே 'தமிழ்' இலக்கண இலக்கியச் சிறப்புடன் வழங்கி வந்தது. தமிழ் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் இயல்-இசை-நாடகம் என்ற முத்தமிழ் வளர்த்தார்களென வரலாறு கூறுகிறது. தமிழன் நாடகக் கலையை நன்கு பேணி வளர்த்த தாகவே பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். நாடகக் கலையின் பண்டைச் சிறப்பு இருக்கட்டும். தமிழன் பண்டைச் சிறப்பு பற்றிப் பக்கம்பக்கமாக வேண்டுமானாலும் எழுதலாம் தமிழன் பழம் பெருமை மட்டும்பேசிப்பேசித்தான் தன்நிலையிழந்தான், கலையிழந்தான், பண்பாடிழந்தான், மொழிப் பற்றிழந்தான், ஏன்...தான் தமிழன் என்று சொல்லிக்கொள்ளும் நிலையைக்கூட இழந் தான். இன்றுதான் இங்குமங்கும், தமிழ், தமிழன், தமிழ்ப்பண்பாடு, என்ற இனித்த சொற்கள் சிதறுகின்றன. இன்றையத் தமிழகத்தில் நாடகத்தின் நிலை என்ன? நாடகக்கலை வளர என்ன தேவை என்பதுபற்றி ஆராய்வோம்.

தமிழ்நாட்டில் இன்று ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, ஆளுக்குஆள், கட்சிக்குக்கட்சி, நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. நடத்த வேண்டுமென்ற ஆர்வமும் அதிகப்பட்டிருக்கிறது. இந்த ஆர்வம் பாராட்டப்பட வேண்டியதுதான் ஆனால் இந்த ஆர்வம் நாடகங்களின் தரத்தை, பண்பை, குறிக்கோளைக் கெடுக்கிறது-கெடுத்து வருகின்றது என்பது மட்டும் நடைமுறையில் காணும் உண்மை. இதை மறுக்கமுடியாது; இந்தநிலையை நீடிக்க விடுவது அறிவுடைமையுமாகாது ஒரு நாடகத்தைப் பொருத்த வரையில் அதில் கதைச் சிறப்பு இருக்கவேண்டும்: கதையில் நல்ல கருத்துச் சிறப்பு இருக்கவேண்டும்; அத்துடன் நாடகத்தின் நல்ல பல அம்சங்களான நடிப்பு, இசை, போல கலைச்சிறப்பும் மிளிர வேண்டும். 'கலை' என்பது மக்களின் வாழ்வைப்படம் பிடித்துக் காட்டுவதாயும், சமுதாயத்தின் கோளாறுகளையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுவதுடன் அதை நிறை செய்வதாயும் அமையவேண்டும். எத்தகைய குறைபாடுகளும் மக்களைத் திருத்தும் வழியில் சித்தரிக்கப்பட அல்லது கண்டனம் செய்யப்பட வேண்டும் (Constructive way of Criticism) அத்துடன் அது ஒரு நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கவேண்டும். இந்தப் பொது 'விதிகள்' அல்லது 'முறை' இன்று நமது நாடகங்களிலே—பெரும்பான்மையான நாடகங்களிலே கையாளப்படுவதில்லை—கையாளப்படுவதை நாடகங்கள் நடத்துபவர்களில் பெரும்பாலோர் விரும்புவதும் இல்லை இது வருந்தத்தக்கது மட்டுமல்ல;-நாடகக்கலை வளர்ச்சிக்கே முட்டுக்கட்டையுமாகும்.

மிகவும் மட்டரகமானதும், மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதாயுமுள்ள கற்பனைகளைக் கதையாக அமைப்பதும், கதை அமைப்பே இல்லாமல் வெறும் பிரச்சார நோக்கத்தில் "மட்டமான நடையில் ஒருவரையொருவர் தாக்குவதாயுமுள்ள நாடகங்களின் தொகை பெருகிவருகிறது. இந்தப் பெருக்கம் நாடகக்கலை வளர்ச்சியின் சுருக்கம்தான். நாடகக்கலையை பிரசாரத்திற்காகப் பயன் படுத்துவதை நான் கண்டிக்கவில்லை-அதற்கு மாறாக நான் அதை ஆதரிக்கிறேன்; ஆனால் பிரச்சார வேகத்திலே கதையமைப்பு, கலை அம்சங்களை மறப்பதும், வெறுப்புணர்ச்சிகளை வளரவிடுவதும், தமிழ்ப்பண்பாட்டிற்கு மாறாக 'மட்டமான நடையைக்' கையாள்வதும் கூடாது, முறையாகாது என்றுதான் கூறுகிறேன்.

★

"பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்.
நாட்டுக்கு நல்ல பயன்".

—சுத்தானந்த பாரதியார்.

அங்கு இங்கு என்னுதபடி எங்கும்
கிடைப்பதும் நிறைந்த புகழ்
உள்ளதும் எல்லே யற்ற
இன்பம் ஊட்டுவதும்

எது?

பீடிச் சக்கரவர்த்தி

த. பி. சொக்கலால்
ராம்சேட் பீடியே

அன்றும் இன்றும் ஆதரிப்பதுபோல்
என்றும் ஆதரவு தர வேண்டுகிறோம்.

T. P. S. ஹரிராம் சேட்,

உரிமையாளர் :

த. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலே,

முக்கூடல், திருநெல்வேலி.

நமது காணிக்கை

[எஸ். டி., சுந்தரம்]

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிக் காலம்—நம் நாட்டின் சரிதம் மறக்கமுடியாத ஒரு புரட்சிக்காலம். அது பழமையிருளின் அஸ்தமன காலம். புதுமலர்ச்சியின் உதய காலம். அந்நியரின் ஆட்சிக்கு அடிவருடுவது கேவலம் என்பதை நமது நாடு உணர்ந்த காலம். உறக்கத்தை நீத்துச் செயல்புரிய எழுந்த காலம். அடிமையிருளை அகற்றிச் சுதந்திர ஒலியைக்காண புரட்சி வீரர்கள் போர்முரசார்த்து தியாகத்தின் பலிபீடத்துக்குத் திரண்டுவந்த பொற்காலமும் அதுதான்.

அரசியல் எழுச்சிமட்டுமல்ல. கலைத்துறையின் மறுமலர்ச்சிக்காலமும் அதுதான். நாடெங்கும் இலக்கிய கர்த்தாக்கள் மொழிவளத்தில் புதுமை நடையைத்துவக்கிய புனிதகாலம். நாட்டின் வசன நடை இலக்கியப் புதுமையோடு தன்சேவையை ஆரம்பித்த காலம்.

அக்காலத்தில்தான் நமது நாடகப்பேராசிரியரின் நாடகத்தொண்டும் துவங்கியது. தமிழ் நாட்டில் அப்போது நாடகக்கலையின் நிலையென்ன? நாடகக்கலையைப்பற்றி மக்கள் அக்கரை கொள்ளாத காலம். இலக்கிய கர்த்தாக்கள் எல்லாம் காவியத்துக்கு முக்கியத்துவமளித்து கவிதைக்கு மட்டும் தங்கள் தமிழ்ப் புலமையைப்பயன்படுத்திய காலம். நாடகநற்கலை படித்தவர்களாலும், மற்றவர்களாலும் புறக்கணிக்கப்பட்டகாலம். புறக்கணிக்கப்பட்டது மாத்திரமல்ல, நாடகம் என்ருலே ஏதோ ஒரு கேவலமானதொழில் என்று கருதப்பட்ட நாட்கள்; நடிகர் என்ருல் அவர்களை ஒருமாதிரி சமூகம் பார்த்த காலம்.

அத்தகைய நெருக்கடியான காலத்தில் இந்தக்கலைக்குத் தொண்டுசெய்ய முன் வந்தார் வீரக்கலைஞர் பேராசிரியர். நாடு மறந்ததால் நலிந்திருந்த நாடகக்கலைக்கு நல்வாழ்வு தர எண்ணங்கொண்டார். சமுதாயத்தின் அலட்சியத்திஞலும் சிலரது அநீதியாலும் சிறைவாசம் அநுபவித்துக்கொண்டிருந்த இக்கலைக்கு விடுதலை செய்ய தீரமாக முன் வந்தார் இப்பெரும் நீதிபதியவர்கள்.

பற்பல உயிரோவியங்களை ஆக்கினுர். அதற்குக்கலை மெருகும் கருத்தழகும் கொடுத்தார். எழுதிய நாடகங்களில் பலவற்றை அவரே அரங்கேற்றினுர். அவரே வேடந்தாங்கி நடித்தார். அதன் மூலம் நாடகக்கலையை படித்தவர்களும் வளர்க்கத்தான் வேண்டும் என்பதைச்சொல்லாமல் சொல்லிச்செயலால் விளங்கவைத்தார்.

அவருடைய நேரத்தையெல்லாம் இக்கலைக்கே அர்ப்பணித்தார். அவர் நண்பர்களும் இம்மாபெரும் பணிக்கு ஒத்துழைத்தனர். இக்கலைச்சிற்பியின் முதற்கோயிலாக உருவானது தான் போலும் சென்னை சுகுண விலாச சபை.

அவர் எழுதிய அமர ஓவியமான "மனோஹரா"வை நடிக்காத நடிகரில்லை. ரஸிக்காத கலைஞரில்லை. உலகில் தாயன்பு உள்ளவரை தர்மநெறி உள்ளவரை உயிர்கொண்டிலங்கும் இந்நாடகம். உலகில் வீரம் உள்ளளவும் காதல் உணர்ச்சி உள்ளளவும் நின்றுநிலவும் நிகரற்ற நாடகநூல் இது. இதேபோல் அவர் எழுதியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட நாடக நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தனித்தன்மையைக்காணலாம்.

ஐம்பது அறுபது ஆண்டுகட்குமுன் அவர் அன்று துவக்கிய இப்பெருஞ் சேவையை இன்றுவரை தொடர்ந்து செய்யும் அவரது தணிப்பண்பு இன்றைய இளங்கலைஞர்கட்கு ஒரு அறிவுரைபோல் அமைந்துள்ளது.

நாடகம் எழுதுவதுமட்டுமல்ல. அதை எழுதியவனே நடித்துக்காட்டும் ஆற்றல் பெறல் வேண்டும் என்ற பேருண்மையை செய்து காட்டி நமக்கெல்லாம் உற்சாகம் கொடுத்தவர் பேராசிரியர்.

பேராசிரியரும் அவர் வழியில் பிற்கால ஆசிரியர்களும் செய்த சேவையின் பலஞக இன்று நாடகத்துக்கு ஒருநல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையை மேலும் வளர்த்து இக்கலையை சிகரஜோதியாக்கும் பொறுப்பு இளைஞர்களாகிய நம்மைச் சார்ந்திருக்கிறது.

நாம் என்ன செய்யவேண்டும் என்பதை சிந்திக்கவேண்டிய காலம் இது.

தனித்தனியே நாம் இக்கலையை என்னதான் வளர்த்தாலும் இதற்கென ஒரு பொதுநெறி வேண்டும். இயல் தமிழுக்கும், இசைத்தமிழுக்கும் வேண்டிய ஆதரவு கிடைத்துவிட்டதென்று நாம் எண்ணுமளவுக்கு அத்துறையில் உள்ள பெருந்தகைகள் சேவை செய்திருக்கிறார்கள்.

அதேபோல் நாடகக்கலை வளர்ச்சிக்கு இத்துறையைச்சேர்ந்த நாம் ஒருங்கே சேர்ந்து இக்கலைக்குரிய நியாயமான பெருமையை நிலைநாட்டப் பாடுபட உறுதிகொண்டே ஆக வேண்டும். அந்த உறுதியின் எடுத்துக்காட்டாக விளங்குகிறது பேராசிரியிருக்கும் பொன்னுடைபோத்தும் இந்த நல்விழா. இதைத்தொடர்ந்து இக்கலைக்கு நமது காணிக்கைகளைத்தந்து கொண்டே இருக்கவேண்டும்.

அரசியலார் நமக்குத்துணை செய்யும் கடமையை அவர்கட்கு நாம் எடுத்துக்கூறவேண்டும். இசைக்கலைக்கும், சித்திரச்சிற்பக்கலைக்கும் தனித்தனிக் கல்லூரிகள் இருப்பனபோல் நாடகக்கலைக்கும் ஒரு தனிக்கல்லூரி இருக்க வேண்டும். அப்போதுதான் வருங்கால நாடகக் கலையில் நமது பிற்கால சந்ததிகள் பெருமையடைத்தக்க அம்சங்கள் மேலும் சேரமுடியும். அப்போதுதான் கலை காட்டாறுபோல் பெருகி ஓடிவிடாமல் அதை நாட்டின் கருத்து வளத்துக்குப் பயன் படுத்திக்கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் நாடக இலக்கியத்தின் மூன்றுவது தலைமுறை ஆரம்பம் என்று சொல்லலாம். கடந்த இரண்டு தலைமுறைகட்கு இல்லாத தனிச்சிறப்பும், பெரும் பொறுப்பும் இந்த மூன்றுவது தலைமுறைக்கே உரியதாகி விட்டது. காரணம் இந்தத் தலைமுறையில் உலகமும் விஞ்ஞானமும் சமுதாய அமைப்பும் என்றுமில்லாத வேகத்தில் மிக மிக முன்னேறி விட்டது. ஆகவே இக்கலையும் மின்சார வேகத்துடனும் தவருத இலட்சியத்துடனும் முன்னேறினுல் தான் உலக வேகத்தோடு இதுவும் முன்னேற முடியும்.

இக்கலையின் உயர்வே நமது இலட்சியத்தின் உயர்வு என்று சொல்லும்படி நாமும் கலையும் ஒன்றுபட்டிருப்பதால், இதற்கான வற்றை எல்லாம் விரைந்து செயல் வேண்டும்.

பேராசிரியர் போன்ற பெரியோர்கள் போற்றி வளர்த்த நாடகக்கலையை நாம் வளப்படுத்திக் காப்பாற்றுவதைப் பொறுத்துத் தான் இருக்கிறது நாட்டின் வருங்காலக்கலையுணர்ச்சி.

நாம் ஒன்றுபட்டு இப்பெரும் காரியத்தைச் செய்யாவிடில் மீண்டும் இக்கலை பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிக்கு நம்மை அழைத்துச்சென்று விடும்.

நாடகக்கலைக்கு ஆக்கமளித்த பேராசிரியரே நாடகக்கலைக்கல்லூரியின் முதலாசிரியராக அமர்ந்து நம்மை ஆசியளிக்கும் அப்பெருங் காரியத்தை நிறைவேற்றவேண்டும். இதுவே எண்பதாண்டு தொண்டுசெய்த அவருக்கு நாம் அளிக்கும் கைமாறு. உலகுள்ளளவும் அழகு மலை விளக்காக ஒளிவீசப்போகும் இந்த அருங்கலைக்கு நாமளிக்கும் காணிக்கை.

★

Phone: 55166 Grams: PAPERMALL

GENERAL PAPERS LIMITED.

Largest Stockists of : **Papers, Boards & Newsprint.**

Sales & Show Room :

16, ARMENIAN ST., MADRAS-1.

Branches:

BANGALORE CITY,	COIMBATORE	TIRUCHIRAPALLI,	MADURAI
17, Malavalla Rama Rao Road.	21/121, Thomas Street.	Big Bazaar	92, Vakil New Street.

[Managing Agents: GANY & CO.]

புதிய சகாப்தத்துக்கு - - அடிகோலியவர் - -

(நாரண - துரைக்கண்ணன்)

"ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே நம் தமிழ் நாட்டில் நாடகக் கலை வளம் பெற்றிருக்கிறது. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரும் பிரான்ஸில் மோலியரும் நாடகங்கள் எழுதுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழ்க்கலைஞர்கள் நாடகங்கள் இயற்றி நடித்தனர். காளிதாசனும் பவபூதியும் சமஸ்கிருதத்தில் நாடகங்கள் எழுதும் முன்பே, தமிழில் நாடகங்கள் இருந்தன'' என்று தமிழறிஞர்கள் பலரால் பொதுவாகக் கூறப்பட்டு வருகிறது. 'உலகத்தில் பழைமையான நாடுகளில் தமிழ் நாடு ஒன்றே நாடகக்கலையைத் தோற்றுவித்த நாடாகும். நாடகக்கலை தோன்றிய காலத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை,' என்று சிலரும்,' நாடகக்கலை என்பது நமது தமிழ் நாட்டிலே பழைமையானது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது' என்று சிலரும், 'தமிழ் நாடகக்கலையானது கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே உயர்நிலையுற்றிருந்தது' என்று சிலரும் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால், தமிழ் நாடகக்கலை இவ்வளவு சிறப்புற்றிருந்தது என்பதற்கு அறிகுறியாக இரண்டொரு நாடக நூல்கள் கூடத் தற்சமயம் காணப் படவில்லை. உண்மையில், காளிதாச மகாகவி இயற்றியுள்ள 'சாகுந்தலம்', ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள 'ஹாம்லெட்' போன்று பாத்திரங்களும் பிறவும் வகுத்து வழங்கும் நாடகங்கள் போல, முற்காலத்தில் தமிழில் இருந்தனவா என்பதற்குப் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. பள்ளு, குறவஞ்சி என்ற பாட்டியல் கூத்துக்கள் தான் காணப்படுகின்றன. ஆனால், ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது தற்காலக்கருத்துப்படி அமைந்த நாடக நூல்கள் பல இருந்திருக்க வேண்டும். இல்லையானால், மிகப் பழைமையான நூலான "தொல்காப்பியத்தில் "நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்'' என்ற சூத்திரம் பாடப்பட்டிருக்க முடியாது. நாடக நூல்கள் ஏராளமாக வந்து அவற்றிலுள்ள வழக்கு நன்கு உணரப்பட்ட பின்னரே இச்சூத்திரம் இயற்றப் பட்டிருக்கவேண்டும். மேலும், நாடகம் இன்னவிதமாக இருக்கவேண்டும் என விளக்கும் இலக்கண நூல்கள் பல இருந்ததாக, 'சிலப்பதிகாரம்' என்ற காவியத்தின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுக் காதைக்கு எழுதியுள்ள உரைக் குறிப்பு முதலியவைகளிலிருந்தும் தெரிகிறது. இதிலிருந்து, தமிழ் நாடக நூல்கள் கபாடபுரத்தைக் கடல் கொண்டுபோனபோது மறைந்த நூல்களோடு போயிருக்கலாம் என்ற ஆராய்ச்சியாளர் சிலரின் குறிப்பு உண்மையாயிருக்கலாமோ என்று யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. இதைச் சிலர் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். அவர்கள், 'இப்போதுள்ள நாடக அமைப்புப் படியுள்ள நாடகம் பத்தாம் நூற்றாண்டிற்குச் சிறிது முன்பாகத் தோன்றியிருக்கலாம்'' என்று ஊகிக்கின்றனர். எது எப்படியிருப்பினும், காளிதாசனும், ஷேக்ஸ்பியரும் இயற்றியுள்ளது போன்ற நாடகங்கள் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டுவரை தமிழில் ஏற்பட்டிருந்ததாக ஒரு சிறிதும் தெரியவில்லை.

* * *

பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் மேனாட்டு இலக்கியத் தொடர்பைக் கொண்டும் சமஸ்கிருத நாடக முறைகளைத் தழுவியும் தமிழில் நாடகங்கள் எழுதி நடிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். அரிச்சந்திரன், இராமாயணம், பாரதம், கிருஷ்ண லீலா, பாரிஜாத புஷ்பஹரணம், அல்லி, பவழக் கொடி, வள்ளிதிருமணம், கோவலன், நல்லதங்காள், சாவித்திரி முதலியநாடகங்கள் பெரும்பாலும் தமிழ் மேடைகளில் நடித்துக் காட்டப்பட்டு வந்திருக்கின்றன. இடைக்காலத்தில் பார்ஸி நாடகக் கம்பெனிகள் தமிழ் நாட்டில் வந்து நடிக்கத் தொடங்கியதாலும் தமிழ் நாடக உலகில் ஒரு மாறுதல் உண்டானதாகத் தெரிகிறது. பார்ஸி இந்திர சபா, சதாரம், குலேபகாவலி போன்ற நாடகங்கள் ஏராளமாகத் தமிழ் நாடகக் கொட்டகைகளில் சிலகாலம் நடத்தப்பட்டு வந்தன. இத்துடன், கண்டிராஜா, லலிதாங்கி, ஞானசௌந்தரி, சாரங்கதாரா, தாராசசாங்கம் போன்ற நாடகங்களும் நடந்து வந்திருக்கின்றன. இவைகளுக்குப்பின் புராண, இதிகாசக்கதைகள் நாடகங்களாக நடித்துக் காட்டப் படலாயின.

இவ்விதம், தமிழ் நாடக மேடைகளில் அரிச்சந்திரன், நல்லதங்காள், சம்பூரண ராமாயணம், மகாபாரதம், சதாரம், தாராசசாங்கம் வள்ளிதிருமணம், நந்தனார், பாமா பரிணயம், கிருஷ்ணலீலா, தசாவதாரம் போன்ற ஒரு சில நாடகங்கள் திருப்பித் திருப்பி நடித்துக்காட்டப்பட்டு வந்த ஒருநிலை நாடகம் பார்க்கும் மக்களிடையே சலிப்பையுண்டு பண்ணியது. இந்நிலையில்தான், சென்னை சுகுண

விலாச சபை போன்ற அமெச்சூர் நாடக சபைகளில் நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார் போன்ற அறிஞர்கள் இயற்றி நடித்து வந்த மனோஹரா, ராஜபக்தி முதலிய நாடகங்கள் சிலவற்றை நாடக மேடைகளில் நடிப்பதைத் தொழிலாகவுடைய நடிகர்கள் தாங்கள் நடிப்பதற்குரிய நாடகங்களாக ஏற்று நடித்து வரலாயினர்.

இவைகளில் பெரும்பாலானவை மேனாட்டு நாடகங்களைத் தழுவியனவாகவும், மேனாட்டுப் பாதையைப் பின்பற்றியனவாகவும் மிருச்சகடி, காதம்பரி, சாகுந்தலம் போன்ற பழைய சம்பிரதாய நாடக முறையை அனுசரித்தும் ஒரு விதமாக இருந்ததால், தமிழ் நாடக உலகம் புதுமையை அவாவி நின்றது.

* * *

இந்நிலையில்தான் பேரறிஞர் சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப்பாவலர் தமிழ் நாடக உலகில் பிரவேசித்து அரும்பெரும் காரியங்கள் பல செய்து ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினர். சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர்கள் நடத்திவந்த நாடகக் கம்பெனிகளில் நாடகாசிரியராயிருந்தது மட்டுமல்லாமல், தாமே பாவலர் பாய்ஸ் கம்பெனி போன்ற இரண்டு மூன்று நாடகக் கம்பெனிகளை ஏற்படுத்தினர். அது மட்டுமன்றி, தம்மால் பயிற்றுவிக்கப்படும் நடிகர்கள் நடிப்பதற்கெனப் பல புதிய நாடகங்களை அவர் இயற்றித் தந்துதவினர்.

திரு. டி. கே. பாவலர் அவர்களின் உண்மைநிலை. கல்வி தகுதி முதலியவைகளை அறிந்தால்தான், அவர் நாடக உலகுக்குச் செய்துள்ள மகத்தான சேவையின் சிறப்பு நன்கு விளங்கும். பாவலரவர்கள் நற்குடியில் தோன்றிய செல்வந்தர்; சிறந்த அறிவாளி; தேசபக்தர்; பத்திரிகாசிரியர்; வேதாந்தி. பன்மொழிப் புலவரும், தன்னலம் சிறிதும் கருதாமல் பொது நலத்தொண்டு புரிந்து வரும் தேசபக்தருமான தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மூத்த சகோதரர் இவர் அத்தகைய ஒருவர் நாடக உலகில் பிரவேசித்தாரென்றால், நாடகக்கலை வளர்ச்சியில் அவருக்குள்ள பேரார்வமே காரணமாகும். மற்றக்கலைகளை விட, நாடகக்கலை வாயிலாக, தேசபக்தியையும் சுதந்திர ஆர்வத்தையும் சன்மார்க்கத்தையும் மிக எளிதாக மக்களிடையே பரப்பலாம் என்ற உண்மையை அவர் கண்டு உணர்ந்தே, தமது லட்சியத்தை நிறைவேற்றுவதற்குரிய சாதனமாக அவர் நாடக மேடையை உபயோகித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் அவர் தம் தலைவராகக் கொண்டிருந்த காந்தியடிகள் காங்கிரஸ் மகாசபைக்கு வகுத்துக் கொடுத்திருந்த நிர்மாண வேலைத்திட்டங்களின் சிறப்பைப் பாமர மக்களும் அறிந்து கடைப்பிடிக்கும்படி, பாவலரவர்கள் பல நாடகங்களை இயற்றித் தமிழ் நாடக உலகுக்கு வழங்கியிருப்பதிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம். நாடகமேடை வாயிலாக, மதுவிலக்குப் பிரசாரத்தைச் செய்வதற் காகவே, குடியின் கேட்டை விளக்கும் ''பதிபக்தி'' நாடகத்தையும் காந்தியடிகளின் கதர்த்திட்டத்தை வலியுறுத்துவதற்காக, ''கதரின் வெற்றி'' நாடகத்தையும் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தின் கெடுதலை விளக்க, ''கவர்னர்ஸ்கப்'' நாடகத்தையும் கிராமப்புனருத்தாரணம் முதலியவேலைகளில் இளைஞர் உள்ளங்களை ஈடுபடுத்த, 'பம்பாய் மெயில்', 'பஞ்சாப் கேசரி' நாடகங்களையும் அவர் இயற்றியிருக்கிறர். ஆனல் 'பம்பாய் மெயில்', 'பஞ்சாப் கேசரி' போன்ற பெயர்களைத்தாம் எழுதிய நாடகங்களுக்கு வைக்காமல், துப்பாக்கிப் பிரயோகம், கொலை, துப்பறிதல் போன்ற சம்பவங்களைச் சேர்க்காமலும் இருந்திருந்தால் அவர் எழுதியுள்ள நாடகங்கள் அனைத்தும் உயர்தரமானவைகளாகவும் இப்போது மதிக்கப்படுவதைவிடப் பெருமதிப்பு வாய்ந்தனவாகவும் விளங்கும் என்பது என் கருத்து. ஆனல், அவர் வாழ்ந்த காலநிலை, மக்கள் மனோபாவம் முதலியன அவரை அவ்விதம் எழுதச் செய்திருக்கின்றன.

* * *

கிருஷ்ணசாமிப் பாவலரவர்கள் பழைய பாதையில் ஒரு தினுசாகப் போய்க்கொண்டிருந்த தமிழ் நாடக நடிகர்களைப் புதிய பாதையில் செலுத்தினர்; தமிழ் நாடக உலகில் புதியதொரு மலர்ச்சியை உண்டுபண்ணினர் என்றால் அது மிகையாகாது. இன்று பல நாடகசபைகள் சமூக நாடகங்களை நல்ல முறையில் நடத்திவருகின்றனவென்றால் அதற்கு முதலில் வழிவகுத்துக் கொடுத்தவர் பாவலரவர்கள்தாம், இன்று நாடக உலகிலும் படஉலகிலும் பிரசித்திபெற்று விளங்கும் பெரும்பாலான நடிகர்கள் பாவலரவர்களால் பயிற்றுவிக்கப் பட்டவர்களும் அவர் எழுதிய நாடகங்களில் நடித்துப் பேரும் புகழும் பெற்றவர்களுமேயாவர். நான் கேள்விப்பட்டமட்டில் நடிகர்களுக்குத் தாங்கள் மேற்கொண்ட பாத்திர தின் தன்மையுணர்ந்து சந்தர்ப்பத்துக் கேற்ப நடிக்கவும் இதய பாவத்துடன் பேசவும் தக்க பயிற்சியளிப்பதில் பாவலர் மிக வல்லவர் என்று கூறப்படுகிறது. அவர் ஒத்திகைக்காகக் குறிப்பிட்ட காலத்தின்போது மட்டுமல்லாமல், மற்றும் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் நடிகர்களுக்குக் கண்கூடாகச் சில காட்சிகளைக் காட்டியும் தாமே நடித்துக் காட்டியும் கற்றுக் கொடுப்பாராம். அமெச்சூர் நடிகர் சபையான சுகுண விலாச சபையில் சேர்ந்து நாடகக் கலையை வளர்த்து வந்ததோடு, தொழில் முறையில் நாடகங்களை நடத்தி வருபவர்களிடையிலும் சில ஆண்டுகள் இருந்து சேவை புரிந்து, இடைக்காலத்தில் தாழ்வுற்றிருந்த தமிழ் நாடகக் கலையை உன்னத நிலை அடையச்செய்த பாவலர் அவர்களுக்கு நாடக உலகில் தக்கதொரு ஞாபகச் சின்னம் ஏற்படாதது பெருங்குறையாகும். பாவலரவர்களால் முன்னேற்ற மடைந்தவர்களும் பெரும் பயன் அடைந்தவர்களும் கூட அவர் பெயரைச் சொல்லாதது, நினைவுபடுத்தாதது நன்றியற்ற தன்மையாகும். நாடகம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியார்களை மதித்துப் போற்றுவது கலையை மேன்மேலும் வளர்ப்பதாகும் என்று நான் சொல்லவும் வேண்டுமோ!

நடிகர் ஒற்றுமை

எம். எஸ். முத்துக்கிருஷ்ணன்

நடிகர் என்றால் கல்வியறிவில்லாதவர்; நல்லொழுக்கமற்றவர், நாணயமற்றவர் என்றெல்லாம் பொதுமக்கள் இழிவாகக் கருதும்படி அநேக நடிகர்கள் வாழ்ந்து வந்தார்கள், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால் நமது நாடகப்பேராசிரியர் போன்ற நல்லாசிரியர்கள் நம்மிடம் அன்பு கொண்டு நமக்குப் பயிர்ச்சியளித்ததின் பயனாகவும், தேச விடுதலை இயக்கங்களில் நடிகர்கள் பங்குகொண்டு உழைத்ததின் பயனாகவும், தற்போது மக்களின் மதிப்பிற்குரியவர்களாக விளங்குகின்றோம். குறிப்பாகக் கூறுமிடத்து "குருத் துரோகிகள் நாடகக் கூட்டத்தில் வாழ்வதென்ன?" என்று நாடகப் பிதா சங்கரதாஸ் பெரியார் பாடிக் குறிப்பிட்ட நடிகர் கூட்டத்திற்குப் பிறகு, பாய்ஸ் கம்பனி முதலாளிகளின் ஒப்பந்தம் என்கிற அடிமைத்தனம் நீங்கி, நடிகர்கள் சிலர் சொந்த நாடகக் கம்பெனிகள் துவக்கிய காலத்திற்குப் பிறகு, அதாவது 25-ஆண்டுகளாகத்தான் பொதுமக்கள் நலனை நாடும், அரசியல் சீர்திருத்த ஸ்தாபனங்களில் நடிகர்கள் தொடர்பு கொண்டு பொதுநல உதவி நாடகங்கள் நடத்தி நற்சாட்சிப் பத்திரங்களுடன், கலைவளர்ச்சிப் பட்டதாரிகளாகவும், தியாக உள்ளத்தினராகவும் காட்சியளித்து பணியாற்றி வருகின்றோம்.

பொதுமக்கள் நலனுக்குப்பாடுபடும் பல வகைப்பட்ட ஸ்தாபனங்களில், பங்கேற்று உழைக்கும் நாம், அந்தந்த ஸ்தாபனங்களில் ஒற்றுமையின்மையைக் காண்கின்றோம். கண்டவற்றை நமது மேடைகளில் காட்சிரூபத்தில் எடுத்துக்காட்டி நமது கண்டனத்தை அறிவித்து சமரசத்தை நாடுகின்றோம். இதனால் தீவிரவாதிகளென்று மக்கள் புகழுரையும் பெற்று வருகின்றோம். எனினும், திருத்தங்களைத்திரையிலும், மேன்மைகளை மேடையிலும் எடுத்துக் காட்டும் நடிகர்களாகிய நாம், நமக்குள் ஒற்றுமை உயர்வற்றிருக்கிறோம். கால்நூற்றாண்டுகளாக நடிகர் ஒற்றுமை வேண்டி பலமுறை முயற்சி செய்து நடிகர் சங்கங்கள் ஏற்படுத்தினோம். அவைகளில் ஒன்றேனும் ஓங்கி வளரவில்லையே என்று வருந்தியிருக்கிறோம்.

தற்போது "நாடகக் கழகம்" என்று நமது பொது நிலையம் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றி வருவதுடன்; நமது ஒற்றுமைக்கும், உயர்வுக்கும், பாடுபட விழைகின்றது. இந்த நாடகக்கழகத் துவக்கத்திலே நம்மில் அநேக நடிகர்கள் அங்கம் வகித்து ஒத்துழைக்கத்தயங்கிய நேரத்திலே, நாடகக்கழக நிர்வாக உறுப்பினர்கள் விடாமுயற்சியால் நாடகங்களுக்குத்தமாஷாவரிவிலக்கு அரசாங்கத்தாரிடம் இது குறித்து நடிகர்கள் எல்லோரும் நாடகக்கழகத்திற்கு நன்றி செலுத்தி, ஒற்றுமை காட்டவும் தயங்கியிருக்கிறோம். மீண்டும் நாடகங்களுக்கு தமாஷா வரி ஏற்படாமலிருக்கவேண்டுமானால், நாமெல்லோரும் நடிகர் கூட்டமும் நலியாதிருக்கவேண்டுமானால், நாமெல்லோரும் ஒற்றுமையாக "நாடகக்கழகத்தில்" பங்குகொண்டுழைக்க வேண்டும். அத்துடன் நாடகக்கழகத்தோடு இணைந்த நடிகர்சங்கம் பதிவு செய்து 10 கிளைச்சங்கங்கள் தலைநகரங்களில் நிறுவி, நடிகர் குடும்பமக்கள் எண்ணிக்கையும் பொது மக்கள் அறிய பிரசாரம் செய்யவேண்டும்.

ஜாதிபேத மொழிக்கும் அடிப்படைக் கொள்கையில் இயற்கையாகவே முற்போக்கடைந்திருக்கும் நாம், கட்சி வேறுபாட்டின் காரணமாக ஒற்றுமையற்றிருப்பது அறிவுடமையாகுமா? வருங்கால நடிகர் சமூகம் கல்வியறிவு, பொருளாதார அறிவு, சமுதாய சீர்திருத்த அறிவு அரசியல் சட்ட நிறுவன அறிவு, விஞ்ஞானக்கலையறிவு, ஆகியவைகளில் வளர்ச்சி பெற்றவர்களாக வழி வகுக்க வேண்டியகாலமல்லவா இது? ஆகவே வளமும் வளர்ச்சியும் பெற்றுள்ள பிரதமபாக நடிகர்கள், நமது கழகத்தை

யும், சங்கத்தையும் ஒற்றுமையுடன் பலம் பொருந்தியதாகச்செய்ய பேருதவியாளராக முன்வரவேண்டும். மற்றும் உதவி நடிகர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உதவியும், ஒத்துழைப்பும், தயங்காமல் அளிக்கவேண்டியதவசியம். நமது முன்னேற்றம், ஸ்தாபனரீதியாக முயற்சித்தால்தான் நலிந்த நடிகர்கள் நலமடையமுடியும். இதுவன்றி தனித்தனியே ஒதுங்கியிருந்து குறைகள் கூறிக்கொண்டிருந்தால், பெற்றிருக்கும் பெருமதிப்பும், பிறவும், பிரயோஜனமற்றதாகிவிடும் என்பதை ஆழ்ந்து சிந்திக்கவேண்டுகிறேன்.

நம்காலம் கண்ட நடிகர்கள், பிற்போக்கான முற்கால நடிகர்களை நினைத்துப் பாருங்கள், அவர்தம் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டுத் தெளிவுபெறுங்கள், இக்கட்டுரையில் நானறிந்தவரை விளக்கி எழுதவிரும்பவில்லை, நான் விரும்புவதெல்லாம் நமது ஒற்றுமை. நமது முன்னேற்றம் ஆகியவைகளுக்கு 10 ஜில்லாக்களில் நமது கிளைஸ்தாபனங்களைக்கொண்டு நமது கண்ணியத்தைக் காப்பாற்ற முயற்சிக்கவேண்டுமென்பதேயாகும். சுய நலமும் பொதுநலமும் கலந்தபணியே எப்பணியும், என்பதை பலதுறையிலும் கண்டநாம் இனி சுயநலத்திற்குப்போதுமான ஓ பகுதி நிதியும், நமது பொது ஸ்தாபனங்களுக்கு ஓர்பகுதி நிதியும், பொது நலத்திற்கு ஓர் பகுதி நிதியும், நமது ஸ்தாபனங்களின் பெயரால் உயர்தரக்கல்விக் கூடங்களுக்கு ஓர் பகுதி நிதியும், சேமிக்கும் திட்டங்களை வகுக்க வேண்டும். இதனல் பொது நலமும் பாதிக்கக்கூடாது. நமது நடிகர் நலிவுக் குடும்பங்களும் இன்னல் நீங்கி, நமது நற்காலத்தை நீடித்து பயன்படுத்தியவர்களாவோம்.

ஆதலால், சர்வகட்சியிலும் தொடர்புள்ள நடிகர்கள் ஒற்றுமையுடன், நமது ஸ்தாபனங்களை வளர்த்து நிதிசேர்க்க இன்றைய தினம் உறுதி செய்துகொள்ள வேண்டுகிறேன். நமது பேராசிரியர், ப. சம்பந்தப் பெரியார், தமது இளமையில் உறுதி செய்துக் கொண்டபடி ஒழுக்கத்தையும், நாணயத்தையும் கைவிடாது வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் பணியாற்றியிருப்பினும், தமது வாழ்நாள் முழுதும் நாடகப்பணியிலேயே ஈடுபட்டிருந்தார் என்பதற்கு சாட்சியாக 60-க்கு மேற்பட்ட அவரது நாடகங்களும், சுகுணவிலாச சபையும், அதன் பெரிதான மாளிகையும், தியேட்டரும், நமக்குக்காட்சியளிக்கின்றன. எனவே, உலகப் பெரியாரையும், நாடகப்பெரியாரையும், பகுத்தறிவுப் பெரியாரையும், தமிழ்ப் பெரியாரையும், அரசியல் நிபுணப் பெரியாரையும், கண்ட நாம், நடிகர்ப் பெரியாரையும் காணவேண்டியவர்களாக யிருக்கிறோம். ஆகையால் நடிகர் ஒற்றுமை வளர்ச்சிக்குரிய, நமது நாடகக்கழகத்திற்கும் நடிகர் சங்கத்திற்கும் அருள் கூர்ந்து ஆதரவளிப்பீர்களென்று கேட்டுக்கொண்டு, மலர்க்குழிவினருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வாழ்க நடிகர் சங்கம்! வாழ்க நாடகக் கழகம்!

நற்சரிதை நற்கவிதை நல்நடிப்பு
நாட்டினிலே நாடகத்தில் அமைக்கவேண்டும்.

—பாரதிதாசன்

தமிழ் நாடகத் தந்தை

(க. அன்பழகன் எம். ஏ.)

அமிழ்தினுமினிய நம்தாய் மொழியாம் தமிழ் மொழி தோன்றிய காலந் தொட்டே, இயல் இசை கூத்து என முப்பிரிவாக வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் இயற்றமிழ் பன்னெடுங்காலமுன்பே எவ்வாறு திகழ்ந்தது என்பதைத் தொல்காப்பிய இலக்கணத்தின் மூலமும் சங்க இலக்கியங்கள் வாயிலாகவும் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். இசைத் தமிழும் கூத்தும் அக்காலத்தில் தனித் தனியே சிறப்புற்று வழங்கின என்பதற்கு இலக்கண இலக்கியங்களில் காணப்படும் பெயர்களும், உரைக் குறிப்புக்களும், மறைந்த நூற்பெயர்களுள் காணப்படும் இசை, கூத்து நூற்பெயர்களும், சான்றுவதைத் தவிர்த்து, இசைக் கூத்து இலக்கியங்கள் எதுவும் கிடைக்க வில்லை.

இசைப் பாடல்களின் தொகுப்போ—நாடக இலக்கியமோ கிடைக்காவிடினும், சங்க இலக்கியமே முத்தமிழையும் முழங்காநிற்கும். ஆதித் தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம், தன் சிலம்பொலியிலே முத்தமிழ் ஒலியும் கேட்கச் செய்யும். ஆனால் பிற்காலத்தில், இடைக்காலம் முதற்கொண்டு, முத்தமிழாக முழங்கிய தமிழ்—இயற்றமிழாக மட்டுமே இளைத்து நிற்கும் நிலையைப் பலப்பல காரணங்களால் எய்தியது.

சென்ற நூற்றாண்டிலோ—தமிழில் நாடகம் உண்டா? என்ற கேள்வியே பிறக்கலாயிற்று. வட மொழியில் நாடக இலக்கியங்கள் உளவாதலையும், ஆங்கிலத்தில் நாடகங்கள் நாளும் வளர்வதையும் கண்ட சிலர், தமிழில் நாடக இலக்கியம் இல்லாததைக் கண்டு தமிழையே குறைவாகமதிப்பிடலாயினர். தமிழில் என்றுமே நாடகம் இருந்ததில்லை என்று வீம்பு பேசுமளவுக்கு நிலைமை இடந்தந்தது.

ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் மக்களின் எழுச்சிக்கும் நாடகம் இன்றியமையாததாகும். ஆனால் தமிழ் நாடகமோ இலக்கியமாக அமைக்கப் படாமல் வெறும் தெருக்கூத்தாக மட்டுமே நடைபெற்று வந்தது. தமிழில் நாடக இலக்கியம் இயற்றப்படாததால், தமிழ்க்கூத்து தெருக்கூத்தாகி—கேலிக்கூத்தாகும் நிலைபிறந்தது. தமிழும் ஏளனத்திற்கு ஆளாயிற்று.

தமிழ்க்கூத்து—என்றாலே புராணக்கதை அல்லது பயன்படாத கற்பனைக்கதை என்பதாகி, இரவு எட்டுமணிக்கு என்று தமுக்கடித்து, ஊர்ப்பெரியவர்களுக்காகப் பத்து மணிக்கு மேலும் காத்திருந்து, விடிய விடிய நடந்து, முடிந்தவுடன் கூத்தாடியவர் அத்தனை பேரும் கட்டிய வேடத்தைக் கலைக்காமலே தெருத்தெருவாகச் சென்று பிச்சை ஏற்றுப் பிழைக்கும் நிலை பிறந்தது. அர்ச்சுனனும் அரிச்சந்திரனும், இராவணனும், இராமனும் காலையில் வேடங் கலையாமலே பிச்சையெடுத்தனர் என்னில்—அந் நிலையை விளக்க வேறென்ன வேண்டும்?

நாடக அரங்கம், காட்சி அமைப்பு, ஒளி, நாடக மாந்தர், அவர்களது வேடப் பொருத்தம், பாட்டு, பின்னணி இசை, முதலியவற்றிலெல்லாம், எத்தகைய தாழ்ந்த நிலையில் கிடந்தனர் என்பது ஒருபுறமிருக்க—கூத்து நிகழ்த்துபவர்களே மிகவும் இழிந்த தொழில் செய்பவராகக் கருதப்பட்டனர் ஏனெனில் அந்நிலையில் கூத்து எப்படி வளரமுடியும். ஒழுக்க மற்றவர்கட்கெல்லாம்-கூத்தாடி என்பது பட்டப் பெயராக வழங்கப்பட்டது அக்காலம். எனவே அறிஞர்களும், புலவர்களும் கூத்தைக் கைவிட்டிருந்தனர் என்பதோடு—'நாடகம்' இயற்றுவதை மிகவும் அலட்சியமாகவே கருதிவந்தனர். ஓரிரு புலவர்கள் மட்டும், "குற்றாலக் குறவஞ்சி" போன்ற நடன நாடக இசைப்பாக்களை இயற்றி இருந்தனர். உண்மையில் ஆங்கில, வடமொழி நாடகங்களைப் போன்ற நாடகம் தமிழில் இயற்றப்படவில்லை என்றே கூறலாம்.

அந்நிலையை உணர்ந்து, தமிழ்மொழிப் பற்றும், பயிற்சியும் கொண்டு சிறந்ததொரு நாடகத்தை முதன் முதல் இயற்றிய பெருமை, அவ்வற்பாவால் நடக்கும் "மனோன்மணீயம்" என்னும் நாடக இலக்கியத்தை வரைந்து 1891-ல் வெளியிட்ட பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களையே சாரும். ஆனாலும் அந்த நாடகமும் நேரடியாக அரங்கில் நிகழ்த்துதற்கேற்ற உரை நடையில் அமையவில்லை என்பது கருதவேண்டியதாகும்.

அக்காலத்தில் சென்னை போன்ற நகரங்களில் ஒன்றிரண்டு தெலுங்கு நாடகங்களும், தமிழ் நாடகங்களும் நடைபெறத் தொடங்கின. அவற்றின் கதைகள் பழையனவாயினும், நாடக அரங்கில் பல முன்னேற்றங்கள் கைக்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றைக்காணும் வாய்ப்பு மாணவர் சம்பந்தத்திற்கு, அவரது தந்தையாரின் ஒத்துழைப்பால் கிடைத்தது.

ஒரு புதிய உற்சாகமும், தன்னம்பிக்கையும் அவரிடம் வளர்ந்தது. தாம் கண்ட நாடகக் கதையின் அடிப் படையிலேயே- அதைத் தழுவி நன்ருகச் செப்பனிட்டு அவர் தமது முதல் நாடகத்தை எழுதுவாராயினுர் அப்படி எழுதப்பட்ட அவரது முதல் நாடகமே "புஷ்பவல்லி" என்பதாகும். அப்படி மலர்ந்த முதல் நாடகம்— மேலும் பலப்பல நாடகங்கள்- மலரக்காரணமாயிற்று. இன்று எண்ணிஞல் 78-ஆகின்றது. விரைவில் நூருகும். மேலும் வளரும் என்பதில் ஐயமில்லை.

நாடக இலக்கியங்கள் இயற்றியது மட்டுமல்ல அவரது பெருமை. அவர் ஓர் நடிகராகவும் திகழ்ந்தார் அவரது பள்ளிப்பருவம் முதற்கொண்டே அவரிடம் காணப்பட்ட நினைவாற்றலும், உச்சரிப்புத் தவருது ஒப்புவிக்குந் திறனும் அவரது நடிப்புக்கலை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. அவரது கல்வி மேம்பாட்டிற்குக் காரணமாக இருந்த அதே நுண்ணறிவு கலைமேம்பாட்டிற்கும் துணை செய்யத் தவறவில்லை. அவரது கலை ஆர்வம் 1891-ம் ஆண்டில் பல நண்பர்களின் ஆதரவுடன் "சுகுணவிலாச சபையாக" மலர்ந்தது. அதன் மூலம் அவரது நாடகங்கள் பலவும் சிறப்பாக அரங்கேற்றப்பட்டன. அவரே எழுதி, அவரே பயிற்றுவித்து, அவரே நடித்து, தமது நாடகங்களையெல்லாம் நல்லமைப்பைப் பெறும்படி செய்து வந்தார்.

அக்காலத்தில், திகழ்ந்த பரிதி மாற்கலைஞன் அவர்களும், மற்றும் சிலரும் வேறு சில நாடகங்கள் வரைந்தனர் என்ருலும், அவர்களது நாடகங்கள் நாடக அரங்கிற்கும், காலத்திற்கும் ஏற்க அமையாததால் முழுவெற்றி பெறவில்லை என்றே கூறலாம். ஆனுல் சம்பந்த முதலியாரின் நாடகங்கள் நாடக மேடையின விறு விறுப்புக்கும் சமுதாயத்தின் நிலைமைக்கும் ஏற்ப அமைந்து மக்களின் உள்ளத்திற்கு விருந்தாயின.

திருவாளர், சம்பந்த முதலியார் அவர்கள், வடமொழியில் தோன்றிய நாடகங்கள் அனைத்தையும் ஆங்கிலப்பெரும் புலவர்களின் நாடகங்களையும் கற்றறிந்தார். அவற்றிலே சிறந்த சிலவற்றை மொழி பெயர்த்தும், சிலவற்றைத் தழுவியும், தமிழ்நாடக இலக்கியத்தை வளர்ப்பாராயினர். சமுதாய சிக்கல்களைக் கண்டு அவற்றை நீக்கும் நோக்கத்துடன் அவரே இயற்றிய நாடகங்களும் உண்டு. அவர் ஓர் புரட்சிக்காரர் அல்லவெனினும் ஓர் புதுமை விரும்பியாகத் திகழ்வதை அவரது நாடகங்களில் காணலாம். அவரது நாடகங்களிலே பலவும், சமுதாயத்தின் கண்ணுடியாகவே விளங்குவன. அவர் காலச் சமுதாயத்தைக் காண விரும்புவோர் அவரது நாடகங்களைப் பயின்ருலே போதும் என்று கூறலாம்:

அவ்வாறு தன் காலத்தை, சமுதாயத்தை நாடக மேடையில் ஏறச் செய்து, தமிழ் மொழியில் நாடக இலக்கியம் இல்லாத குறையைப் போக்கி நாடக மேடையின் குறைகளையும் நாளடைவில் நீங்கச் செய்து, தமிழ்நாடகத்திற்கே மறுமலர்ச்சியளித்து, தமிழுக்குப் புத்துயிரளித்த, நாடகப் பேராசிரியர், பம்மல் சம்பந்த முதலியார் அவர்களைத் தமிழ்நாடகத் தந்தை என்றழைப்பதே பொருத்தமன்ருே !

தமிழ் நாடகத் தந்தையின் முயற்சி, மேலும் ஓங்கி, தமிழ் மொழியும், நாடும் மேலும் வளம் பெற வாழ்த்துரைப்போமாக !

வாழ்க நாடகத் தந்தை !

வளர்க நாடக மறுமலர்ச்சி !!

"அழகும், கற்பும், அமுத மொழியும், அமைந்த மனைவி. கணவனைத் திருத்துவது போல் கெட்ட ஒழுக்கமுள்ளவர்களையும் நல்லொழுக்கமுள்ளவர்களாக்குகின்றன நாடகங்கள்."

—நவாப் டி. எஸ் ராஜமாணிக்கம்.

அமெச்சூர் நாடகங்கள்

[பு. ரா. வெங்கடாசலம்]

"நாட்டிலே அமெச்சூர் நாடகங்கள் மலிந்துவிட்டன. இது நாடகக்கலை முன்னேறி வருவதற்கு நல்ல எடுத்துக்காட்டு" என்று பேசப்படுகிறது. ஆனல் உண்மையில் நாடகக் கலை "முன்னேறுகிறது" என்று கூறுவதைவிட "மூடமாக்கப் படுகிறது" என்று சொல்வது சாலப் பொருந்தும்!

நாடகம் என்பது நாடு—அகம் அதாவது நாட்டை, நாட்டு மக்களின் வாழ்க்கையைத் தன்னகத்தே அடக்க வல்லது என்றே அகம் - உள்ளத்தை, நாடுவது - தொடுவது என்றே பொருள் கொள்ளலாம். இந்தச் சொல்லின் பொருள் அறியாத நிலையில் இன்று நாட்டிலே நீர்க்குமிழிபோல் தோன்றி மறையும் அமெச்சூர் நாடக மன்றங்களுக்கு அளவில்லை. அவை ஒரே நாடகத்தோடு மறைந்து விடுகின்றன. அதற்கான காரணங்கள் சில கீழே கொடுக்கப்படுகின்றன - சம்பந்தப்பட்டவர்களின் தெளிவுக்காக!

பொதுவாக நடிக்கப்பெறும் நாடகங்கள் நாடக வரம்பிற்கு உட்பட்டனவாக இருப்பதில்லை. நாடகமேடை பேச்சுமேடையாக்கப்படுகின்றது. ஒரே சுய புராணப்பேச்சு இல்லையெனில் வசைபுராணப் பொழிவு! நாடகத்திற்கும் பேச்சிற்கும் தொடர்பு இருக்கிறதோ இல்லையோ ஏதோ வீராவேசமாகப் பேசிவிட்டால் மக்களின் ஆதரவு கிடைத்துவிடும் என்ற சபலம்! நாடகத்திலே கொள்கைப் பிரச்சாரம் கூடாது என்பதல்ல. அதற்கும் ஒரு எல்லை வேண்டும். கதையுடன் தொடர்பு கொண்டதாக அமைக்கப்படல் வேண்டும். அலங்காரச் சொற்களால் அடுக்குத் தொடராக வசனம் எழுதி அழுத்தந் திருத்தமாகப் பேசிவிட்டால் மாத்திரம் போதாது. சொற்களிலே பொருளிருக்கவேண்டும். கருத்துகள் மலரவேண்டும். இதை யாரும் கவனிப்பதில்லை.

கதை : நாடகக் கதை நாட்டின் நிலையை, மக்களின் வாழ்வை உயர்த்தப் பயன்படக் கூடியதாக இருப்பதில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திருடி, புதுக் கதம்பக் கதை எழுதி, பல நாடகங்களின் வசனங்களைத் திரித்துப் புகுத்தி நாடகமாக்கிவிடுகின்றனர். எனவே எந்த நாடகத்தை எடுத்தாலும் ஒரேமாதிரியான (Stereo--type) கதையமைப்புடையதாகத் தோன்றுகின்றது. இதிலே தலைப்பை மாற்றித் 'தகிடுதத்தம்' செய்யும் முறையும் உண்டு!

நடிகர்கள் : நடிகர்கள் பாத்திரங்களுக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆட்களின் அந்தஸ்து, செல்வாக்கு இதற்கேற்ப முக்கிய பாகங்களைக் கொடுத்துவிட்டு"நடிப்பு"என்றால்"எத்தனை வீசை ரூபாய்க்கு?" என்று கேட்பவர்கள் மேடையிலே வந்து முழிப்பதையும், மொழிக்கொலை செய்வதையும் பார்த்தால் யாருக்கும் ஆத்திரம் வருவது இயல்பு தானே? இந்த வகையில் ஆர்வம் காரணமாகவோ, ஆசை காரணமாகவோ தானே கதை எழுதி வசனம் தீட்டிப் பாட்டுகள் அமைத்து 'டைரக்டராகி' பரிதாப நிலையில் நாடகத்தை அரங்கேற்றும் சில மேதாவிகளும் உண்டு!

இதைத் தவிர உண்மையிலேயே நாடகக் கலையில் உள்ள ஆர்வம் காரணமாகச் சில நலம் விரும்பிகள் அனுபவமுள்ள சிலரைக் கூட்டி நாடகம் நடத்த முயல்வது இயல்புதான். நாடக அனுபவமுள்ளவர் நல்லவர்களாயின் அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி அனுப்புவர். ஆனல் இந்த அப்பாவி ஆர்வமுள்ளவர்களை, யாரை மடக்கலாம் என்று வாய்திறந்த வண்ணம் உலவும் நாடக உலக முதலைகள் ஈர்த்துக்கொள்ளுகின்றன. ஆர்வம் அவர்கள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் இடங் கொடுக்கும்படி செய்கிறது. ஏதோ ஒரு குப்பையை நாடகமாக்கிக் கூத்தடித்து

விட்டுக் கடைசியில் முதலேகள் வருவாயை முழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு ஒதுங்கி விடு கின்றன. ஆர்வம் கொண்டவர்கள் மன மொடிந்த நிலையில் கடனைக் கலங்குவ தைத் தவிர வேறு வழி? முதலேகள் எப்படியும் தங்கள் பெயரைத் தம்பட்டமடிக்கப் புது வழிகளேயும், ஆட்களேயும் எப்படியோ பெறத்தான் செய்கின்றன. நாடகங்களே நடத்துகின்றன - தங்கள் வாழ்வை நடத்த; கலே கலேக்கல்ல தன் சுயநலத்திற்கு என்பது அவர்கள் முடிவு! என்ருலும் வெளிஉலகிற்கு 'நாடகங்களே நடத்துகிறேம்' என்ற அறிவிப்புச் செய்து வெளிச்சம் போடத்தான் முடிகிறதே என்ற எக்காளம் அவர்களுக்கு! வஞ்சகமும் சூதும் எத்தனே நாளேக்கு நிலேக்கும்?

மேற்கூறியவை கண்கூடாகக் காணப் படுபவை. இதன் காரணமாகவே நாடக மன்றங்கள் நிலேயாக இயங்குவதில்லே. நாடகங்களும் மக்களே ஈர்ப்பதில்லே.

இத்தகைய நாடகங்களால் நாடகக் கலே முன்னேறுகிறது என்று யாராவது கூற முடியுமா?

உண்மையிலேயே நாடகக் கலேயில் ஆர்வம் காரணமாக நாடகங்களே நடத்த விரும்பும் நல்லவர்கள் கீழ்க்கண்ட வற்றில் நல்ல கவனம் செலுத்தினல் தாங்கள் வெற்றியடைவதோடு கலேக்கும் தொண்டும் செய்தவர்களாவார்கள்:

1. நல்லார் உறவு

2. பொருளாதார முதலீட்டில் கூட்டுப் பொறுப்பு.

(அ) நல்ல நிர்வாக அமைப்பு.

(ஆ) சரியான கணக்கு வழக்குகளே வைத்துக்கொள்ளல்.

(இ) சிக்கனமான செலவு.

3. நாட்டின் நலிவு நீங்க, மக்களின் நிலே உயரப்|பயன்படும் நற்கருத்தைக் கொண்ட சிறந்த கதைத் தேர்வு.

4. எல்லோரும் கேட்டு, உணர்ச்சியுற்று, மகிழும்படியான யாரையும் குறிப்பாகத் தாக்காத, எளிய வசனம் அமைத்தல்.

5. சகல துறையிலும் மேம்பட்ட ஒருவரைக்கொண்டு நடிப்புப் பயிற்றுவித்தல்.

6. பாகங்களுக்குப் பொருத்தமான நடிகர்களேத் தேர்ந்தெடுத்தல்.

7. வார்த்தைகளே மெல்லினம், வல்லினம் பிசகாமல் சுத்தமாக உச்சரிக்கும் பயிற்சி.

மேற்கண்டவைகள் பூரணமாக நிறைவேற்றப்பட்டால் மக்களின் ஆதரவை எளிதில் அடையலாம். நிலேயான ஒரு அமைப்பையும் ஏற்படுத்தலாம். முடியுமா?

"ஆட்டும் பாட்டும் அலுப்புத் தீரவே;
நாட்கம் பார்ப்பது நலிகள் மறக்க;
சித்திர இன்பமும் சிரமம் தீர்க்கவே;
சிற்பச் சிலேகளும் சிந்தனே யூட்டவே"

—நாமக்கல் கவிஞர்

தமிழே சிறந்தது

[சங்கரதாஸ் சுவாமிகள்]

பல்லவி

தமிழே சிறந்ததென உனது நாமம் விளங்க
சாற்றும் அந்தப் பொருளை யாரறிவார்—அம்மா (தமி)

கண்ணிகள்

அமிழ்தினிற் சிறந்தது ஆரியத் துயர்ந்தது
அகத்திய னார்சிவ னிடத்திலு ணர்ந்தது
அடிசீர் மோனை எதுகை தொடைசேர் தளையின்வகை
யாகும் பாவினஞ் சந்தமா விரிந்தது வண்ணத் (தமி)

திணைபால் காட்டும் விகுதி சிறப்புப் பொதுப்பகுதி
சேர்ந்தவி தங்களெல்லாம் தென்மொழிக்கே தகுதி
இணையெனும் வடமொழி இருமொழியின் பேர்வழி
இசைக்கும் எழுதுவ தெல்லாம் வலஞ்சுழி அதால் (தமி)

அகரத்தோடகரஞ்சேர் வடமொழி தீர்க்கசந்தி
ஆகுமென் றுரைப்பார்கள் அறியார்கள் புத்தி நந்தி
மகரவொற் றழிவிதி மார்க்கமென் பதைப் புந்தி
வைத்தவர் மருவென்றூரே மூந்தி அதால் (தமி)

கயற்கண்ணி மொழிபெயர்ப்பதற்கென வுரைசெய்வார்
கந்தபுராணமதின் காப்புச் செய்யுளறியார்
இயற்படப் புணரியல் என்னுடன் வாதாடுவார்
இசை மராடி என்பதற்கென்புகல்வார் அதால் (தமி)

வடமொழி வழக்கில்லை வழங்குவர் தமிழ்ச்சொல்லை
மலைவேங் கடங்குமரி மற்றிரு கடல் எல்லை
இடமாக வகுத்தவர் இன்றுளார்களு மில்லை
இயம்பும் மீனாட்சி என்ற பெயர் வல்லை அதால் (தமி)

நாடகக் கலையின் பழமை

[டாக்டர் ஆர். கே. ஷண்முகம்]

நாடகக்கலை என்பது நமது தமிழ் நாட்டிலே பழமையானது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பும் இருந்தது. ஆனல், இன்று சிலர் 'நாடகம்' என்ற சொல் கூடத் தமிழல்ல—சமஸ்கிருதம்! என்று கருதுகிறார்கள். சமஸ்கிருதம் என்றாலே செம்மைப் படுத்தப்பட்ட மொழி என்றுதான் பொருள். ஆரியர்கள் இங்கு வரும்போது, சமஸ்கிருதத்தை வளமான ஒரு பாஷையாகக் கொண்டுவரவில்லை. இங்கு வந்து தமிழ் மொழியிடமும், தமிழ்க் கலையிடமும் இக்கருத்துக்களைப் பெற்றுத் தங்கள் மொழியை வளர்த்துக் கொண்டனர். அப்படிச் செம்மைப் படுத்தப்பட்ட மொழியே சமஸ்கிருதம் என்பது. சிலர் எதைப் பார்த்தாலும் இது சமஸ்கிருதத்திலிருந்து வந்தது-இது ஆரியக்கலை, என்று கூறித் தமிழருக்கு இழிவு தேடுகிறார்கள்.

நாடகம் என்ற சொல், நடை என்ற தமிழ்ச்சொல்லின் கருத்தைக் கொண்டது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலே நாடகக்கலை இருக்கிறது. அதன் அரங்கேற்று காதையிலே, நாடக மேடையின் அமைப்புக்கூடச் சரியாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தனை கோல் நீளத்தில் இத்தனை கோல் அகலத்தில் இவ்வளவு உயரமுள்ளதாக நடன மேடை இருக்க வேண்டுமென்று அதிலே சொல்லப் பட்டிருக்கிறது. கோல் என்றால் என்ன? என்று நான் மலையாள நாட்டினரைக் கேட்டேன். அவர்கள் அந்த அளவைக் கூறினார்கள். இன்னும், அவர்களின் நில அளவு முறையிலே கோல் கணக்கேதான் இருக்கிறது.

★ ★ ★

நாட்டியத்தை நாம் இன்று பரத நாட்டியம் என்று கூறுகிறோம். நாட்டியக்கலையே பரதன் என்பவர் எழுதிய நூலை ஆதாரமாகக் கொண்டது என்று சிலர் கூறுகின்றனர். பிறகு நான் யோசித்தேன். தமிழ் நாட்டிலே நாட்டியத்துக்குப் பரத நாட்டியம் என்று பெயர் வருவானேன்? தமிழருக்கு என்று நடன நூல் இருந்ததில்லையா என்று யோசித்தேன். பரதன் என்ற சொல் எப்போது வந்தது என்று யோசித்தேன். சுமார் இருபத்து ஐந்து வருடங்களாகத்தான் இந்தப் பரத நாட்டியம் என்ற சொல் வழங்குகிறது. சென்னையிலே மியூசிக் அகாடமி போன்றவைகள் தோன்றிய பிறகே 'பரத நாட்டியம், என்ற பெயர் உபயோகிக்கப் பட்டது. முன்பெல்லாம் அதனைச் சதுர்க்கச் சேரி என்றே சொல்லி வந்தார்கள். பரதம் எழுதப்பட்டுச் சுமார் ஆயிரம் வருடமிருக்கும். சிலப்பதிகாரமோ 2000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டது. எனவே பரத நாட்டிய நூல் தோன்றுவதற்கு முன்பே தமிழ் நாட்டிலே நாட்டியக் கலை விருத்தியாகி இருந்தது.

"மக்களின் சக்தியைத் திரட்டி அறிவு விலாசத்தைப் பெருக்க நாடகங்களைப் போன்ற சிறிய சாதனம் வேறெதுவும் கிடையாது.',

'கல்கி'

ந கை ச் சு வை

(டி. என். சிவதாணு)

நகைச்சுவையைப் பற்றி எழுதும்போது அதைப் படிப்பவர்கள் அவலச்சுவையில் ஆழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமே என்று கொஞ்சம் அச்சமாகத்தானிருக்கிறது. நகைச்சுவையை 'நவரஸம்' என்றும் சிலர் சொல்லுவார்கள்.

'நவரஸம்' என்ருல் பருப்பு ரஸம், மிளகு ரஸம், மைசூர் ரஸம், பூண்டு ரஸம் என்று யாராவது எண்ணி என் கட்டுரைக்கு சோக ரஸத்தை உண்டுபண்ணி விடக்கூடாதே என்று தான் முன் ஜாக்கிரதையாக 'ரஸம்' என்று குறிப்பிடாமல் 'சுவை' என்று பொறித்தேன்.

நகைச்சுவை; அதாகப்பட்டது, தங்கம், வெள்ளி, வைரம், முதலியவற்ருல் செய்த பல விதமான நகைகளைப்போட்டு நமது தாய்மார்கள் அனுபவிக்கக் கூடிய சுவை; நகைச்சுவை......''

''ஓகோ! மன்னிக்க வேண்டும் மூளை தவருக வேலை செய்கிறது.'' ஒன்பது சுவைகளிலே இந்த நகைச்சுவையும் ஒன்று என்று சொல்லுகிருர்கள். மற்ற எட்டுச் சுவைகளும் இந்த நகைச் சுவைக்குள் அடக்கம் என்பது அடியேனுடைய மேலான அபிப்பிராயம்.

ஆபாசமான வார்த்தைகளை அள்ளிக் கொட்டுவது, பிறர் மனது புண்படும்படியாகக் கேலி செய்வது இவைகள்தான் நகைச்சுவை என்று ஒரு சிலர் கருதுகிருர்கள். அது அடியேனுக்கு உடன் பாடல்ல.

நகைச்சுவை மக்கள் வாழ்க்கையோடு கலந்திருப்பது. மற்றச் சுவைகளைவிட பொதுமக்களை, அதிலும் சிறப்பாக இளம் பிள்ளைகளை அதிகமாகக் கவருவது நகைச்சுவைதான். நாடக, சினிமா, சர்க்கஸ் நடிகர்களில்கூட மற்றவர்களைவிட நகைச்சுவை நடிகர்கள் மிக எளிதில் மக்களின் அபிமானத்திற்குப் பாத்திரராகி விடுகிருர்கள்.

நகைச்சுவை ஒரு சிறந்த 'டானிக்' என்று டாக்டர்கள் சொல்லுகிருர்கள். ''துன்பம் வரும்போதுகூட சிரித்துக் கொண்டேயிரு' என்று நமது திருவள்ளுவப் பெரியார் கூறுகிருர்,

ஒரு மனிதனுக்குக் கோபம், வருத்தம், வெறுப்பு முதலிய சுவைகள் ஏற்படுவதற்குக் காரணம் வேண்டும். ஆனுல், சிரிப்பதற்குக் காரணம் தேவையில்லை; பக்கத்திலிருப்பவர் சிரித்ததும் விவரம் புரியாமலே நாமும் சிரிக்கிருேமல்லவா?...........

இன்னெரு முக்கியமான நன்மை நகைச்சுவையால் ஏற்படுகிறது. சாதாரணமாகச் சொல்ல முடியாத சில விஷயங்களை நகைச்சுவையோடு கலந்து சொன்னுல் எதிரிகூடத் தன்னை மறந்து சிரிக்கிருன். ஒருவர் செய்யும் குற்றத்தை அவரிடம் நேரிடையாக எடுத்துக் காட்டும்போது அவருக்கு நம்மீது வெறுப்பு ஏற்படுகிறது. அதே விஷயத்தை சிரிப்புடன் கலந்து சொல்லும்போது நல்ல பயன் ஏற்படுகிறது.

இன்னும் நகைச்சுவையைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். உதாரணங்களை அள்ளி வீசலாம்; மூளையில் எண்ணங்கள் வந்து அலை மோதுகின்றன; என்ன செய்வது? உங்களுக்குப் பிராப்தமில்லை. ஏனையோர் கட்டுரைகளுக்கும் இடம் வேண்டுமே என்ற கருணையுள்ளம் எனது பேனுவைத் தடுத்து நிறுத்துகிறது. எங்கே, கொஞ்சம் சிரியுங்கள்!.........

பிழைக்கும் வழிகாட்டிய பெருமான்

(வி. என். சம்பந்தம்)

நாடகப் பேராசிரியரின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது குறித்துக் கலைவுலகில் நிலவிவரும் ஒவ்வொருவர் உள்ளமும் பூரிப்புக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

திரு சம்பந்த முதலியார் அவர்கள் தமிழ் நாட்டிலே நாடகம் என்ருல் என்ன! என்பதை முதல் முதலாக ஆரம்பித்துவைத்த அண்ணல் என்பதற்காகவோ, தனது எண்பது வயதிற்கும் எண்பது நாடகங்களை எழுதிய இணையற்ற எழுத்தோவியர் என்பதற்காகவோ. இந்த நிறைவு விழாவை நடத்துவதாக யான் நினைக்கவில்லை. என்னைப்போன்ற எழுத்தாளர்களுக்கும் சுருக்கமாகச் சொன்னுல், இன்று கலையின் பேரால் வயிறுவளர்க்கும் அத்தனை பேர்க்கும், **'பிழைக்கும் வழிகாட்டிய பெருமான்'** என்பதற்காகவே இந்த விழா நடத்துவதாக நினைக்கிறேன்.

சிந்தித்துப் பாருங்கள்! அன்று நீதிபதியாக—நல்ல நிலையில் இருந்துகொண்டு—நாடகம் எழுதித்தான் வயிறு வளர்க்க வேண்டும் என்ற அவசியம் எள்ளளவும் இல்லாமல் இருந்தும்....பொதுநலக் கண்ணேடு, நாடகத்தை எழுதி, நடித்து அதில் மக்களைத் திருப்பிவிட்டார் பேராசிரியர்.... அன்றைக்கு அவர் அப்படிச் செய்திரா விட்டால்....இன்று நாடகம் இந்த மேல் நிலைக்கு வந்திருக்குமா? சினிமாதான் வளர்ந்திருக்குமா?

வாழ்க நாடக வள்ளல்!

[மகா மதுரகவி வீ. வே. முருகேச பாகவதர்]

முத்தமிழாம் ஆழ்கடலில் மூழ்கி, ஆங்கே
முறைமைநிறை நாடகமா முத்தைத் தேடி
அத்தனையும் ஒருங்கிணைத்து மாலை யாக்கி
அழகொழுகத் தமிழ்த்தாயின் அடியிற் சூட்டிச்
சித்த மெல்லாம் பூரிக்கும் கலைஞர்; இந்தத்
திரு நாட்டின் பெரும்புதையல்; நடிப்பின் உச்சி!
நத்தும் உயர் நாடக சம்பந்தம் மக்கள்
நல்இதய ஒளிவிளக்காய் வாழ்க! வாழ்க!!

நடிகர்களைக் கூத்தாடி என்றே, நாடு
நவின்ற இழிப் பழிச் சொல்லை ஒழிக்க, உள்ளம்
துடிதுடித்தார் தளராமல் உழைக்க லானார்;
சுகுண விலாச சவையைத் தோற்றுவித்தார்!
படியிலுறை மக்கள் மகிழ் நாடகங்கள்
பல தீட்டி வைத்தார்; அப் பயனால் இன்று
நடிகர்களும் நாட்டுக்குப் பணியே ஆற்றும்
நல்லறிஞ ராவா ரென் றுணர்த்தி விட்டார்!

நாடகமே வாழ்வைப் பண் படுத்துங் கோயில்;
நல்லெண்ணம் மலர்விக்கும் சோலை! நல்ல
நாடகமே நாட்டுக்குச் சீவன்—என்ற
ஞானத்தில் நனி பழுத்த வள்ளல்! தூய
ஆடகப் பொன் மலர்க்குள் அரும் மணமும் சேர்ந்த
தன்ன திரு சம்பந்தம் தன்னால் இன்று
நாடகங்கள் சிறந்தன; அந் நாடகத்தால்
நற்கலைஞர் சம்பந்தம் பெருமை பெற்றார்!

இன்றைக்கு உயர்கல்வி கற்றாரெல்லாம்
இயங்குகின்ற திரைப்படத்தில், நாடகத்தில்
முன்வந்து நடிக்கின்றார் என்றால் அந்த
முழுப்பெருமை சம்பந்த முதலியார்க்கே!
என்றோர்ந்து நன்றியுடன் கழகத்தாரும்
இனும்அறிஞர் குழுவும் பொன் னுடை போர்த்தி
வென்றி விழாக் கொண்டாடிக் களிக்கின்றார்கள்;
மேதை இவர் பல்லாண்டு வாழ்க என்றே!

தென்னாட்டில் நாடகக்கலை

[கோவை கிழார்]

'சங்கத் தமிழ் மூன்று' என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு. இயல், இசை, நாடகம் என்பது அம் மூன்றின் பெயர்களாகும். தமிழ்மொழி சிறந்திருந்த நாளில் இம்மூன்றும் சமஉரிமையோடு சமமான சிறப்புப் பெற்றிருக்கவேண்டும். அந்தக் கருத்தை ஒட்டித்தான் இளங்கோவடிகள் தாம் அருளிச்செய்த சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் சமசிறப்போபாடிவைத்தார்போலும். ஆனல் இந்த சமசிறப்பு பின் வந்த நூல்கள் எவற்றிலும் காணப்படுவதில்லை. காப்பிய காலத்திற்குப் பின் வந்த புலவர்கள் இயலையே சிறப்பாகக் கொண்டார்கள். பிறகு சைவ, வைணவ மேம்பாட்டுக் காலத்தில் இயலோடு இசையையும் சிறப்பாகப் பாராட்டினர்கள்.

அப்போதுதான் தேவாராதிகளும், ஆழ்வார்கள் பாசுரங்களும் தோன்றின. பிறகு தஞ்சைச் சோழர் காலங்களில் இயலே சிறந்து ஓங்கியது. அவர்களுக்குப் பின் தமிழ் நாடு தன்னுரிமை இழந்த பிறகு எவ்வகைத் தமிழுக்கும் பாராட்டுதல் இல்லாமல் போய்விட்டது. பின்னர் சைவ மடத்தார்களும், தென்னாட்டுக் குறுநில மன்னர்களும், தோன்றின போது சமய நூல்களும், சில்லறைப் பிரபந்தங்களும் தோன்றின. தெற்கு வட்டாரங்களில் பாளையக்காரர்களை அண்டி வயிறு வளர்த்து வந்த புலவர்கள் புகழ்ச்சிப் பிரபந்தங்களோடு ஒருவகை எளிய நாடகப் பிரபந்தங்களை இயற்றினர்கள். அவைகளில் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் யட்சகாணம். தெருக்கூத்து, விலாசம் முதலியவைகள் தோன்றின. இவைகள் எல்லாம் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவைகள் என்று கூறலாம். காப்பிய காலத்திற்குப் பிறகு 15 நூற்றாண்டுகள் வரை உறங்கிக் கொண்டிருந்த நாடகத் தமிழ் மீண்டும் தோன்றினல் தாழ்ந்த நிலைமையில் தான் இருக்குமல்லவா? இவ்வாறுவளர்ச்சியில் தடைபட்டுக் குறிக்கோள் ஒன்றுமில்லாமல் நாடகத் தமிழ் சீர்கெட்டதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வோம்.

உலகமொழிகளிலேயே உயர்ந்த நாடகங்கள் தோன்றியிருப்பவை கிரேக்க மொழி, வடமொழி, ஜெர்மானிய மொழி, ஆங்கிலமொழி என்பன. இவைகள் சிறப்பு அடைந்ததற்கு அருமையான காரணங்கள் பல உண்டு. பண்டைக்கால மொழிகளிலே நாட்டு அன்பை வளர்த்தவர்கள் புலவர்களே யாவார்கள். கிரேக்க மொழியிலே, 2300- ஆண்டுகளுக்கு முன்னமே நாடகங்கள் தோன்றியிருந்தன. அப்போது மக்களை உற்சாகப் படுத்தி வீரர்களாகச் செய்தது நாடகமே. கிரேக்கர்களுடைய சுதந்தர வாஞ்சையை, வெளி நாட்டார்கள் படையெடுத்து அழிக்கத் தொடங்கின போது, அம்மொழியில் வல்ல புலவர்கள் நாடகங்கள் எழுதி மேடையில் நடத்திக் காட்டி மக்களை உற்சாகப் படுத்தினர்கள். ஜெர்சஸ் (Xerxas) என்ற பாரசீக மன்னன் கிரீக் தேசத்து, ஆதன்ஸ் நகரின் மீது படையெடுத்த காலத்தில் புலவர்கள் மூட்டிய உற்சாகத்தினல்தான் மிகப்பெரிய அரசனை அச்சிறிய நாட்டார்கள் வென்றார்கள். அதற்குக் காரணம் சபோக்கிலிஸ் (Sophocles) யூரிபைடிஸ் (Euripides) போன்ற நாடகாசிரியர்கள் எழுதிய நாடகங்களின் தூண்டுதலேயாகும். எந்த நாட்டிற்கும் உணர்ச்சி ததும்பிய கருத்துக்கள் துன்பம் வந்த காலங்களில்தான் தோன்றும்.

இனி ஆங்கில மொழிச் சரித்திரத்திலும் இந்தப் போக்கையே காண்கின்றோம். ஆங்கில மொழியில் சிறந்த புலவர் ஷேக்ஸ்பியர் (Shakspere) என்பவர். அவருக்குப்

புகழ் வந்தது அவரியற்றிய நாடகங்களாலேயே. அவர் வாழ்ந்த காலந்தான் அம்மொழிக்குப் பொற்காலம் என்பர். அப்போது ஆங்கில நாடு மிகச் சிறிய நாடாக இருந்தது. அதைவிடப் பன்மடங்கு பெரிதாக இருந்தது ஸ்பெயின் நாடு. அந்த நாடு ஆங்கிலேயரை நசுக்க வேண்டுமென்று அத்தீவின் மீது படையெடுத்தது. ஆங்கில மக்கள் மிகப் பீதி அடைந்திருந்தார்கள். அப்போது தோன்றிய புலவர்கள் தங்கள் கருத்தோவியங்களால் மக்களுக்கு உற்சாக மூட்டினர். அந்தக் காரணத்தினால் ஆங்கிலேயர்கள் வென்றார்கள். உலகிலேயே மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தையும் உண்டாக்கினார்கள். பீதி அடைந்திருந்த காலத்தில் உற்சாகத்தை ஊட்டிப் பேரரசாக விளைவித்தவர்கள் ஷேக்ஸ்பியர் போன்ற நாடகாசிரியர்களே.

இனி ஐரோப்பாவில் நாடகக் கலையில் சிறந்த பிரன்சு, ஜெர்மானியம் போன்ற மொழிகளில் சிறந்த புலவர்கள் நாடகாசிரியர்களே. ஜெர்மானியத்தில் பாஸ்டு (Faust) என்ற நாடகத்தை எழுதிய கத்தே (Gathe) என்ற புலவன்தான் மிகச் சிறந்தவன். அப்படிப்பட்ட சிறந்த ஆசிரியர்களின் நாடகங்களைக் கண்டுதான் ஜெர்மானியர்கள் ஒன்றுபட்டு ஒப்பற்ற புகழ் பெற்றார்கள்.

இனி, நமது பாரத நாட்டிலும் நாடகக் கவிதைகளாற் சிறப்படைந்த மொழி வடமொழி என்னும் சமஸ்கிருதமாகும். 15 நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே வடமொழியில் மேற்கு நாட்டு மொழிகளைப் போல நாடகங்கள் தோன்றின. வடமொழியிலே சிறந்த கவிஞன் காளிதாசன் என்ற நாடகாசிரியனே. அவன் எழுதிய சாகுந்தலம், விக்கிரமோர்வசீயம், மாலவிகாக்கினிமித்ரம், என்ற நாடகங்கள் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டன. அவைகள் ஏற்பட்ட காலம் எப்படிப்பட்டதென்று கூறுவோம். வட நாட்டில் குப்தர்களுடைய பேரரசு தலைசிறந்திருந்தது. அப்போது வடமேற்கு மூலையிலிருந்து மிலேச்சர்களான ஹூணர்கள் பரத கண்டத்தின் மீது படையெடுத்து வந்தார்கள். குப்த வம்சத்துப் பேரரசர்கள் அம்மிலேச்சர்களோடு போர்புரிந்து துரத்தி விட்டார்கள். அந்த நெருக்கடியான காலத்தில் வடமொழியைச் சிறப்பித்தவன்தான் காளிதாசன்.

மேலே கூறிய வரலாறுகளினால் மக்களையும் அவர்களது மொழிகளையும் உயர்த்தி வைக்கும் பண்பாடு கொண்டது நாடகம் என்று அறிய வேண்டும். அதைப் போலவே தென்னாட்டு அரசியலும் ஏற்பட்டிருந்தால் தமிழிலும் பல நாடகங்கள் தோன்றியிருக்கலாம். நாட்டினுடைய வரலாறும் வேறு வகையாகத் திரும்பியிருக்கலாம்.

தமிழ் மொழியில் சங்கத்தார் காலந்தான் பொற்காலம் என்று கூறவேண்டும். அதனைத் தொடர்ந்து வந்த காப்பியக் காலமும் ஒளி பொருந்திய காலமாகும். அக்காலத்தில்தான் சிலப்பதிகாரம் தோன்றிற்று. அதில் நாடகப் பகுதியிருந்தது. அது முதிர்ச்சி அடைந்திருந்தால் தென்னாடும் சீரிய நாடாகவே ஆகியிருக்கும். ஆனால் நாட்டு அரசியல் போக்கு மாறிவிட்டது. காப்பிய காலத்தை ஒட்டினாற்போல சமணர் ஆதிக்கம் தென்னாட்டில் தோன்றியது. மன்னர்களும், மக்களும், சமணத்தில் ஈடுபட்டார்கள். சமணர்கள் சமயம் துறவு முதலியவைகளிலேயே மூழ்கியிருந்தார்கள். அவர்களுக்கு நாடகம் என்றால் மிகக் கசப்பாக இருக்குமல்லவா? அவர்களை அடக்கி மேம்பாட்டிற்கு வந்த சைவ வைணவ அடியார்களும் இயல், இசை என்ற இரண்டைப் போற்றினார்களே ஒழிய நாடகத்தைத் தொடவேயில்லை. சோழர் சாம்ராஜ்யத்திலும் இயல்மட்டும் போற்றப்பட்டது. அதுவரை தென்னாட்டில் படையெடுப்புகளும் இல்லை. மக்களை வீரரசத்துக்குள் புகுத்திவைக்கும் புலவர்கள் எப்படித் தோன்றுவார்கள்? சோழ சாம்ராஜ்யத்திற்குப் பிறகு அலாவுதீன் படையெடுப்பினால் தமிழர்களின் தன்னுரிமை போய் அடிமைத்தனம் மேம்பட்டுவிட்டது. அப்போது உற்சாகம் எப்படி ஏற்படும்? நாடகக்கலை அடியோடு போய்விட்டது. நாட்டுப் புறத்துத் தெருக்கூத்தும், பாவையாட்டமும் தவிர நாடக வளர்ச்சி நாட்டில் ஏற்படவில்லை. இது

தான் முத்தமிழில் மூன்ருவது தமிழ் மறைந்தற்குக் காரணம் எனலாம்.

இப்படியிருக்க ஆங்கிலர்கள் வந்த பிறகு ஆங்கில மொழியைக் கற்ற சில அறிஞர்கள் அதிலுள்ள நாடகங்களைப் படித்துவிட்டுத் தமிழிலும் அவ்வாருன நாடகங்களை இயற்றுவதற்கு அடிகோலினர்கள். அப்படிப்பட்ட நாடகங்கள்தான் சுந்தரம் பிள்ளையின் மனேன்மணீயம், சூரியநாராயண, சாஸ்திரியாரின் 'ரூபாவதி' 'கலாவதி' சலசலோசனசெட்டியாரின் 'சரசாங்கி' முதலியன. அப்போது கருத்துக்கள் மிளிர்ந்தனவும் எண்ணிக்கையில் உயர்ந்தனவும் ஆன நாடகங்கள் திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுடையவையே. அவர்களாலேயே தமிழில் நாடகங்கள் உண்டு என்ற ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட புகழ்பெற்ற பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் நாட்டு நாடகத் தொண்டில் ஈடுபடுவார்களாக.

★

"சென்னையில் நாடகப் பேராசிரியர் திரு. ப. சம்பந்த முதலியார் அவர்களின் வீட்டிற்கு யான் அநேக தடவைகள் சென்றிருக்கிறேன். அங்கு அவர் நாடகங்கள் எழுதும் மேஜையும், அவர் எழுதி ஒழுங்காய் வைத்திருந்த கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் முதலியவைகளும், அவர் பூஜை அறையில் தம் தாய் தகப்பனர் படங்களின் முன்பு புத்தகங்களின் முதல் அச்சுப் பிரதியை வைத்து, தம் அன்பையும், மரியாதையையும் காட்டும் பண்பும் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன. தினம் டாக்டர்கள் எவ்வளவு நேரம் எழுதச் சொல்லுகிருர்களோ அவ்வளவு நேரம் மட்டும் வேலை செய்து விட்டுப் பிறகு மாடியில் சூரிய கிரண ஸ்நானம் செய்வதும் (Sun Bath) பிறகு சாப்பாட்டிற்குப் போவதும், மாலையில் சிறிது நேரம் உறங்குவதும், பிறகு உலாவப் போவதும் கடியாரம் செய்வது போல் செய்வார்; அவருடைய பழக்க வழக்கங்கள் மேல் நாட்டார்களைப்போல் அவ்வளவு கணக்காக இருக்கும். இந்தக் குணமும் என்னைப் பெரிதும் கவர்ந்தது."

—சி. ஆர். மயிலேறு

சிறந்த

ஹாப் - டோன் ★

லைன் & மூவர்ண

★ பிளாக்குகளுக்கு

நிகரற்ற இடம்

நியூடன் & கோ.,

80, வாலாஜா ரோடு

மவுண்ட்ரோடு, சென்னை

பம்பாயில் நாடகக் கலையின் நிலை

"வேணு"

சிந்தனையின் வெளியீடு இலக்கியம். சொல்லின் சித்திரம் இசை. செயலுக்கு, மனிதவாழ்வின் வளர்ச்சிக்கு, வழிக்கு உருவம் அமைப்பது நாடகம். பழந் தமிழர் காலம் தொடங்கி தமிழ் மூன்று கவடாகப் பிரிந்து, விரிந்து, வளரும் நிலை இது.

உணவு தோன்றிய காலம் என்றே அன்றே நாடகமும் தோன்றி விட்டது என்பது மிகையாகாது மொழி விழி மலராத நாட்களில் மனித இனம் தன் உணர்ச்சிகளைச் செயல் மூலமேதான் வெளியிட்டிருக்க வேண்டும்.

காலம் அசைந்து, நகர்ந்து, ஆடி, ஓடிவந்த வேகத்திலே அத்தகைய செயல், இலக்கியத்தின் சிந்தனை, இசையின் ஓசை நயம் இவற்றின் பின்னணியில் இலங்கி நாடக மென்னும் தனித் தன்மை பெற்று விட்டது. இன்றே நாகரீகம் புகாத நாடுகளில் கூட நாடகம் ஏதாவதொரு உருவில் புகுந்து விட்டது.

"செப்பு மொழி பதினெட்டிலும் சிறந்த நாடகாசிரியர்களும், நாடகக் கலைஞர்களும் தோன்றி அவரவர் மொழிக்கு அழகும், அமைப்பும் கொடுத்துக் கொண்டும் வருவது மகிழ்தற்பாலதே.

பலவாறான மக்களினத்தவர் பம்பாயிலே வசிக்கின்றனர். இந்நகர் உலகின் ஐந்தாம் பெரு நகரெனப் போற்றப்படுகிறது. மக்கள் முதலிலே இதைப் பார்க்க நேரும்போது திகைக்க வைக்கும் அழகு வாய்ந்த நகரிது.

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த மொழி பேசப்படும் வட்டாரங்களில் ஏதாவதொரு பகுதி கலையின் வளர்ப்புப் பண்ணையென வாழ்ந்து வருவது அனுபவ உண்மை. ஆனால் இப்பெருநகர் தன் தல விசேஷத்தால் எம்மொழியினருக்கும் இடம் தந்து அத்திறத்தவர் தத்தம் மொழியினை அவரவர் ஆர்வத்திற்கும், திறமைக்கும் ஏற்ப வளர்க்க இடம் தருகின்ற பெருமை பெற்றுள்ளது சுவாரஸ்யமான விஷயம். இதனாலேயே பம்பாயில் நாடகக் கலையைப் பற்றி எழுதப் புகும்போது பற்பல மொழியினரது கலை நிலையையும் எழுத வேண்டியது அவசியமாகி விடுகின்றது.

தமிழ் மேடையை மற்ற மொழியாளர்களின் மேடையோடு ஒப்பிட்டுப் பார்ப்பின் அதன் விளைவிலே நாம் பெருமையும், பெரு மகிழ்ச்சியும் கொள்வது மொழிப் பற்றினால் அல்ல, படிகமான உண்மை நிலை கண்டதினால் தான் என்பது ஒப்பிட்டுப் பார்த்தவர்கள் ஒப்புக் கொள்ளக் கூடியதே.

திரை வந்த பிறகு மேடைக்கு மவுசு குறைந்து போயிற்று. நஷ்டத்தைத் தாக்குப் பிடிக்க முடியாதவர்கள் மேடையினின்று சற்று சற்றாக நழுவித் திரையில் படிய ஆரம்பித்தனர். அவ்வாறாகத் திரையில் மறைந்த மேடை சமீபகாலம் தொட்டு சில உழைப்பாளிகளின் முயற்சியால் மறுபடி வெளியில் தோன்ற ஆரம்பித்துள்ளது. அதன் புனர் ஜன்மம், நமது பேறு. அவர்கள் நன்றிக் குரியவர்கள்.

பம்பாயில் உள்ள நாடகக் குழுக்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை பிரபலமாக, பெருவாரியான மக்களுக்குத் தெரிந்த அளவில் செயலாற்றுவதில்லை. இதன் காரணம் அந்தக் குழுக்கள் ஒற்றுமையுடன் வேலை செய்யாததோ, அல்லது அடிக்கடி தொடர்ச்சியாகத் தரமான நாடகங்களை அரங்கிடாததோதான். இந்நிலை எங்கும் காணப்படும் பொதுநிலையாயினும் இப்பெரு நகரில் அத்தகைய நிலை பெருவாரியான நாடக சபைகளுக்கு ஏற்பட்டிருப்பது குறிப்பாக உணரப்படுகின்றது.

இங்கு தரும் நாடகத்தின் நிலையை ஆராய்வதன் முன் மற்றவர்களது மேடையை பார்க்க வேண்டும். குறிப்பாக இந்தி, மராட்டி, குஜராத்தி நாடக மேடைகள் கண்டு கொள்ளப்பட வேண்டியவை.

இந்தி சமீப காலத்தில் தான் பிரசாரப் படுத்தப்பட்ட மொழி. அது தேசீய மொழி ஆகியும் அதிக நாட்கள் சென்று விடவில்லை. ஆகவே, இந்தியில் நாடகக் கலை அவ்வளவு வளர்ந்து விட்டதாகச் சொல்லிவிட முடியாது. அதிகமாகத் தெரிந்த அளவில் பிரியம் கொண்டு பயில் முறை (Amateur) சபைகள் ஒன்றும் இயங்குவதாக இல்லை. தொழில் முறை (Professional) யிலே பிருத்வி தியேட்டர்காரர்கள் அருமையான சேவை செய்கின்றனர். இதை நடத்தும் பிருத்வி ராஜ் கபூர் நல்ல நடிகர். பயிற்றுவோரும் (Director) கூட. இவரிடம் தயாரான பலர்

இன்று திரைத் தாரகைகளாக விளங்குகிறார்கள். பிருத்வி தியேட்டேர்ஸின் 'சகுந்தலா', 'தீவார்' (சுவர்), 'பத்தான்' (பட்டாணியன்), 'கலாகார்' (கலைஞன்) முதலியவை பொதுமக்களின் பாராட்டை வெகுவாகப் பெற்றுள்ளன. ராமாநந்த் சாகர், கே. ஏ. அப்பாஸ் இருவரும் இம்மொழியில் நல்ல நாடகங்களை இயற்ற முடிந்தாலும், அவர்களது கவனம் அதிகமாகத் திரையிலேதான் செல்லுகிறது.

மராட்டி நாடகக் கலை 19-ம் நூற்றுண்டின் இடைப்பகுதியிலேதான் தோன்றியது. ஆரம்பத்தில் முப்பது வருடங்கள் அதன் நடமாட்டம் அதிக திடமானதாக இல்லை. பின் கிர்லோஸ்கர், ராஜ்வாடே போன்றவர்களால் மராட்டி மேடை பிரகாசமாயிற்று. அப்போதெல்லாம் அரங்கேற்றப்பட்டவை புராண சம்பந்தமான நாடகங்களே. 1920-க்குப் பின் தேவல் என்பவருடைய 'சாரதா' வுடன் அந்த அரங்கிலே சமூக நாடகங்கள் தோன்றின. இதுதான் மராட்டி மேடையின் மறுமலர்ச்சி என்றே சொல்லலாம். இன்னும் கட்கரியின் 'ஏகச் பேலா' (ஒரே கோப்பை), கோல்காட்கரின் 'வது பரிக்ஷ' (மணமகள் பரிசிலனை), காடில்கரின் 'கீசக வத்' (கீசக வதம்) முதலியன பொது மக்களிடையே பரபரப்பை உண்டு பண்ணியவை. கடைசியில் கூறப்பட்ட 'கீசக வதம்' புராணக் கதையைத் தழுவிய உணர்ச்சி மிக்க அரசியல் நாடகம். இன்று மேடை எழுத்தில் சிறந்து விளங்குவோர்களாக உள்ளவர்கள் மாமாவரேர்கர், பி. கே. அத்ரே முதலியோர். வரேர்கரின் 'ஸோன்யாசா குலஸ்' (தங்கப் பதுமை), அத்ரேயின் 'லக்னுசி பேடி' (மண விலங்கு), 'உத்யாசா சன்சார்' (வருங்கால உலகம்) 'ஜக் காய் மணேல்' (உலகம் என்ன சொல்லும்) முதலியவைகள் சிறந்த நாடகங்களென வெகுவாக ரசிக்கப் பட்டு மற்றவர்களாலும் மொழி பெயர்க்கப் பட்டு அரங்கிடப் படுகின்றன.

மறைந்த நாட்களில் ஜோக்லேகர், பெண்டார்கர், பால கந்தர்வா, பக்னிஸ் போன்ற நடிக மணிகள் மக்களின் லட்சியக் கலைஞர்களாக விளங்கியவர்கள். இன்றும் கஜனுன் ஜாகிர்தார், கேசவராவ் தாதே, பேன்ட்ஸே, மாஸ்டர் நரேஷ், நவ்ரேசர், ஜ்யோத்ஸனுபோலே, பிரமிளா ஜாதவ், ஸ்நேகப்ரபா பிரதான் முதலியவர்கள் மேடை மாணிக்கங்களெனத் திகழுபவர்கள். அல்டேகர், தாதே, பேன்ட்ஸே இவர்களுக்குத் திறமை மிக்க பயிற்றுவோர் (Director) எனப் பெயர் உண்டு.

பெயர் சொல்லும் அளவிற்குத் தொழில் முறையில் நடக்கும் நாடக சபை பால கந்தர்வ மண்டலி ஒன்றுதான். பயில்வோர் சபைகளாக பல இங்கரில் இருந்தாலும் கவனத்தைக் கவரும் அளவில் பணியாற்றி வருபவை பத்தோ அல்லது பதினைந்தோதான். இவற்றில் எம். ஜி. ராங்க்னேகரின் 'நாட்டிய நிகேதன்' இன்னும் 'சம்யுக்த நாடக சங்கம்', 'மகாராஷ்டிர நாடக சங்கம்', 'நாட்டிய கலோபாசக்,-இவைகள் குறிப்பிடத் தக்கவை.

1944-ல் மராட்டி மேடையின் நூற்றுண்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அப்போது திறந்த வெளி அரங்கு முறையைக் கையாண்டு ஓரளவு வெற்றியும் கண்டனர் அவர்கள்.

நூற்றுண்டு நிரம்பிய மேடைக்கு, நூதனமான நாடகாசிரியர்கள் பலர் தோன்றுமல் இருப்பது அவர்களுள் பெருங் குறையாக உள்ளது. சென்ற ஐந்து ஆண்டுகளில் அருமையான நாடகம் ஏதுமே எழுதப்படவில்லை என்பதும் வருந்தத் தக்கதே. இப்போதெல்லாம் புது நாடகங்களுக்காக மொழி பெயர்ப்புகள் தான் உபயோகப் படுகின்றன.

இன்றைய மராட்டி நாடகங்களில் அடிபடும் கருத்துக்கள் தாழ்த்தப் பட்டோரின் துயரம், மத்திய வகுப்பாரின் நிலை, உழைப்பாளி-முதலாளி போராட்டம்-இவைகளே.

குஜராத்தி அரங்கம் சமீப காலத்தில்தான் புதுவாழ்வு பெற்றுள்ளது. 1853-ல் இந்த மொழியினரின் நாடகங்கள் தோன்றினும், அவை பெரும்பாலும் விரசக்கூத்துக்களாகவோ அல்லது புராணக் கதைகளாகவோதான் ஆடிக் கொண்டிருந்தன. ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்களது பெருமுயற்சியால் குஜராத்தி மேடை புது மெருகு அடைந்தது ஐந்தே வருடத்திற்கு முன்பு தான்.

தொழில் முறையில் 'தேசீய நாடக் சமாஜ்' பலர் அறிய இயங்குவது. பயில் முறையிலோ 'பாரதீய கலா கேந்திரம்', 'நாட்டிய பாரதி' 'இந்தியன் நேஷனல் தியேட்டர்', 'ரங்க் பூமி', என்பவை நல்ல சேவை செய்கின்றன. சந்திரவதன் பட், ஆதிமர்ஸபான், பிரோஷ் ஆன்டியா, மதுகர் ரந்தணு போன்ற கலைஞர்கள் இதன் முன்னேற்றத்திற்காக அரும்பாடு படுகின்றனர்.

இன்றைய தேவைக்கு உகந்ததாக முன்ஷி சில நல்ல நாடகங்களை எழுதியுள்ளார். தவிர பிரபுலால் திருவேதி மற்றுமொரு நல்ல நாடகாசிரியர். இருப்பினும் குஜராத்தியில் நடிப்பனவையாக அதிக அளவில் நாடகங்கள் தோன்றி விட்டதாகக் கூறிவிட முடியாது. அதிகமாக மொழிபெயர்ப்புகளே அங்கு இப்போது கையாளப்படுகின்றன. அவற்றுள் அத்ரேயின் மராட்டி நாடகங்கள் குறிப்பாக உள்ளன. காரணம், அவை பெரும்பாலும் நகைச்சுவை நாடகங்களாக இருப்பதுதான்.

குஜராத்தி மேடையின் நூற்றாண்டு விழாவும் இவ்வருடந்தான் கொண்டாடப்பட்டது.

குஜராத்தி நடிகர்களிடம் நல்ல நடிப்பு உள்ளது. இசை நாடகங்களென்றே தனியாக நாடகங்களை நடத்தி வருவதால் பொதுவாக அவர்களது மற்றைய நாடகங்களில் பாட்டுகள் இருப்பதில்லை. சமீபத்தில் குஜராத்தியையே தாய்மொழியாகக் கொண்ட பார்ஸிகளும் இதில் கவனம் செலுத்திச் சேவை செய்கிறார்கள். இவர்களது மேடையின் சிறந்த எதிர்காலத்தைக் குறிக்க 'பாரதீய வித்தியா பவ'னில் அடிக்கடி நிகழும் நாடகங்களே நல்ல முன்னேட்டம்.

பம்பாயிலே இம்மூன்று மொழியாளர்களின் மேடைகளைத் தவிர ஆங்கிலம், கன்னடம், கொங்கணி இன்னும் பலரது மேடைகளும் ஏதாவது காலங்களில் முழங்குகின்றன. ஆனால் இவற்றில் ஏதும் தொடர்ச்சியாக நாடகங்களை நடத்துவதோ, பிரசித்தியான அளவிற்குச் சேர்ந்து ஒரு குழுவினராக வேலை செய்வதோ இல்லையென்று சொல்ல வேண்டும். இன்னும், 'இந்தியன் பீப்பிள்ஸ் தியேட்டர்' பல மொழிகளிலும் சிறந்த முறையில் சில நாடகங்களை நிகழ்த்தி ரசிகர்களது கவனிப்பையும், பாராட்டையும் பெற்று வருகின்றது.

இனித் தமிழ் நாடகமேடை. 1924-ல் தமிழர்கள் என்ற கூட்டுணர்ச்சி பம்பாயில் எழுந்த அன்றே, இங்கே தமிழ்மேடை உதயமாகி விட்டது என்று சொல்லலாமாயினும் இன்று அந்த உதய முதற்கதிரின் வாழ்ந்து வரும் சின்னமாக விளங்குவது, 1933-ல் சித்தரஞ்சனி சபையாக ஆரம்பமான இன்றைய தியாகராஜ சபைதான். ஆனால் ஆரம்ப காலங்களில் இதுவும் இன்னும் பலவும் புராண நாடகங்களையே அரங்கேற்றி வந்தன. எவ்வாறாயினும் அவை பம்பாய்த் தமிழரிடையே நாடக உணர்ச்சியைப் பரப்பிய தொண்டிற்குப் பெருமை கொள்ளத் தக்கவை.

இலக்கிய சேவை செய்து வந்த பம்பாய்த் தமிழ்ச் சங்கம் 1947-ல் முதன்முறையாகத் தீவிரமான சமூகக் கருத்துக்கள் கொண்ட நாடகத்தை அரங்கேற்றியது பம்பாய்த் தமிழ் நாடக மேடையின் புது விழிப்பு. இதைத் தொடர்ந்து மற்றைய பல சபைகள் இது போன்ற புதுமைக் கருத்துகள் கொண்ட நாடகங்களைத் தயாரிக்க ஆரம்பித்தன.

பயில்வோர் சபைகளாக சுமார் ஏழெட்டு சபைகள் இங்கே உள்ளன. அவைகளில் மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர இன்னும் 'அமெச்சூர் டிரமாடிக் பார்ட்டி,' 'கலா நிலையம்', 'நாடக மன்றம்', 'நெல்லை நாடக சபா', 'மறுமலர்ச்சி நடிகர் மன்றம்'— இவைகளும் நல்ல சேவை செய்து வருபவை. வட நாட்டவரின் மேடைகளிலே குடும்ப மகளிர், உயர்வான வாழ்க்கையில் உள்ள பெண்கள் பங்கு கொண்டு கலை வளர்ப்பது அவர்கள் பெருமைப்பட வேண்டிய அம்சம். இந்திய மேடையிலே முந்தி நிற்பதாக நினைத்து மகிழ்ந்து போகும் நாம் இந்த முன்னேற்றத்தில் பிந்தி இருப்பதை நினைத்து வெட்கப்பட வேண்டிய அம்சமும்கூட. நாகரிகம் பெருத்த நகராகச் சொல்லப்படும் இங்கே இத்தகைய உண்மையான நாகரிகத்தைத் தமிழ் மேடை அடைய முயற்சிக்கவேண்டும்.

பம்பாயில் தமிழ் நாடக மேடை தமிழகத்தின் சிறந்த கலைத் தூதுவனாகச் செயலாற்ற முடியும். உலகின் ஐந்தாம் பெருநகரெனப் பேசப்படும் பம்பாய் தமிழரின் ஐந்தாம் தலைநகராகவும் இருப்பது பலர் அறியாத செய்தி. சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் வசிக்கும் இந்நகரில் தமிழன் உயர்ந்து இயங்க வழியுண்டு. தமிழ் மேடை ஓங்கி வளர வகையுண்டு. இவற்றிற்கெல்லாம் தமிழினம் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு ஒற்றுமையுடன் வேலை செய்தால் காலம் நல்ல பதிலைக் கொடுக்கும். அத்தகைய நல்லுணர்ச்சி நாளுக்குநாள் வளருவது காண இன்பமேதான்.

தமிழ் நாடக மேடை கவர்ச்சியானது. அதிலுள்ள கலை நுணுக்கம் இந்தியாவில் மற்றவர்கள் கையாளாதவை. சமீபத்தில் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் விஜயம் செய்த டி. கே. எஸ். சகோதரர்கள் தங்களது கலையின் மூலம் பம்பாயிலே புதிய ஒளியைப் பரப்பினார்கள்.

கலையின் வளர்ச்சிதான் மக்களினத்தின் வளர்ச்சி. கலைஞர்களுக்கு மனித இனம் என்றுமே கடமைப்பட்டதுதான். திரு. ப. சம்பந்த முதலியார் கலை மன்னர். தமிழ் நாடக மேடையிலே அவர் ஏற்றி வைத்த ஒளி நந்தா விளக்கு.

மறுமலர்ச்சி கண்ட நாடகப் பெருந்தகை

[டி. கே. ஷண்முகம்]

ஆசிரியர் எம். கந்தசாமி முதலியாரவர்களைப் பற்றி உங்களில் பலர் அறிந்திருக்க மாட்டீர்களென்றே கருதுகிறேன்.

டி. கே. எஸ். சகோதரர்களோ அவர்களது கம்பெனி நடிகர்களோ நல்ல தமிழ் பேசுகிறார்கள் என்றால் அப்பெருமை சங்கரதாஸ் சுவாமிகளைச் சேர்ந்தது. அதே போன்று டி. கே. எஸ். சகோதரர்களோ அவர்களது நடிகர்களோ, நன்றாக நடிக்கிறார்களென்றால் அப்பெரும் புகழ் முழுதும் முதலியாரவர்களைச் சேர்ந்தது.

முதலியாரவர்கள் ஆசிரியர் சுவாமிகளைப்போல் செந்தமிழில் தீஞ்சுவைப் பாடல்கள் எழுதும் ஆற்றலுடையவரல்லர். சங்க இலக்கியங்களின் சாரத்தை எல்லாம் பிழிந்தெடுத்துத் தந்தவரல்லர். எனினும் இப்பெரியார் தமிழ் நாடக உலகிற்குச் செய்த தொண்டு அளப்பரிது. அது நாடக வுலகிற்கு மட்டுமின்றி நாட்டுக்கும் நன்மையைத் தந்தது.

நாடகத்தைத் தொழிலாகக் கொள்ளாது "அமெச்சூர்" நாடகவுலகில் புதுமை தோற்றுவித்த பெருமை எவ்வாறு நமது நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியாரவர்களுக்கு உரிமையுடையதோ அதே போன்று தொழில் முறை நாடக வுலகில் மறுமலர்ச்சியுண்டாக்கிய பெருமை இப்பெரியாரைச் சேர்ந்ததாகும்.

இப்பெரியாரின் பெயர் உங்கள் செவிகளில் விழாதிருக்கலாம். ஆனால் இவர்கள் தமிழகத்திற்குச் செய்த நற்றொண்டின் பயனை உங்களில் ஒவ்வொருவரும் அடைந்திருப்பீர்களென்று உறுதியாய்க் கூற முடியும்.

நாவலாசிரியர் திரு. ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள் தமது புத்தகங்களில் மறைத்து வைத்திருந்த புதையல்களையெல்லாம்தோண்டித்துருவியெடுத்துத் தமிழ் நாடகவுலகிற்கு அளித்தவர் இப்பெரியார்தான்.

சாவித்திரி, வள்ளி திருமணம், பவளக்கொடி, அல்லி அர்ஜுனா, நல்லதங்காள், சதாரம்...இவை போன்ற பெயர்களையே கேட்டும், பார்த்தும், சலிப்புற்றிருந்த மக்கள், இராஜாம்பாள், இராஜேந்திரா, சந்திரகாந்தா, மோகன சுந்தரம், ஆனந்த கிருஷ்ணன் என்னும் பல புதிய பெயர்களைக் கேட்கவும், பார்க்கவும் செய்தவர் இப்பெரியாரே யாவார்.

ராஜாம்பாளின் மூலம் காதலின் வலிமையையும், ராஜேந்திரனின் மூலம் வரதட்சணையின் அலங்கோலத்தையும், சந்திரகாந்தாவின் மூலம் பண்டாரச் சன்னதிகளின் திருவிளையாடல்களையும், மோகன சுந்தரம் மூலம் பொருந்தா மணத்தின் போக்கையும், மக்களுக்கு நாடகவாயிலாக எடுத்துக்காட்டிய இப்பெரியாருக்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

"சுவாமிகாள்! சுவாமிகாள்!!" என்று தமிழ்நாடு முழுதும் சிலகாலம் அமளிப்பட்டதே! ஞாபகமிருக்கிறதா? அந்தப் பகல் வேஷப்பண்டார சன்னதிகளை ரகவாரியாக ரம்பைகளைத் தேடிப்பிடித்த அங்கு மடத்தடிகளை முதன் முதலாக நாடக மேடையில் கொண்டுவந்து நிறுத்தியவர் ஆசிரியர் கந்தசாமி முதலியார் அவர்களே.

வடுவூர் துரைசாமி ஐயங்காரவர்களின் அபூர்வ சிருஷ்டியான "மேனகா"வை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென நம்புகிறேன். நாடகமாகவும், பேசும்படமாகவும் உங்களில் பலர் பார்த்திருப்பீர்கள். அந்த மேனகாவை நாவல் வடிவிலிருந்து நாடக வடிவாக்கி எங்கள் சபைக்குப் பயிற்றுவித்த பெரியாரும் திரு கந்தசாமி முதலியாரவர்கள்தான்.

இப் பெரியாரின் இளம்பருவச் செயல்களைப்பற்றியும், வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும், விரிவாகச் சொல்ல யானறியேன். முதலியாரவர்களைப்பற்றி நானறிந்ததை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இப்பொழுது மயிலாப்பூர் என்று வழங்கப்படும் இடம் சிலகாலத்திற்கு முன் "திருமயிலை" என்று வழங்கப்பட்டு வந்தது. அந்தத் திருமயிலையில் வசித்து வந்த திரு. தணிகாசல முதலியார் என்ற பெருந்தகையாருக்கும், திருமதி பாப்பாத்தியம்மாள் என்ற குலக்கொடிக்கும், புதல்வராக ஆசிரியர் முதலியாரவர்கள் 1874-வது ஆண்டில் பிறந்தார்.

இவர்கள் பிறப்பிலேயே ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் நடந்தது.

இவர்களுடைய தாயார் பூரண கர்ப்பவதியாயிருக்கும் பொழுது ஒருநாள் சென்னையிலுள்ள "கந்த கோட்டம்' என்னும் கந்தசாமி கோவிலுக்குத் தரிசனம் செய்யச் சென்றிருந்தார்களாம். உட்பிராகாரத்தைச் சுற்றிவரும் பொழுது பிரசவ வேதனையேற்பட்டு வீடு செல்ல இயலாத நிலையேற்பட்டதாம். வேறுவழியின்றி, கோவில் நிர்வாகிகள் பிரகாரத்திலேயே பிரசவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய அவ்விடத்திலேயே ஆசிரியர் பிறந்தாராம்.

கந்தசாமி கோவிலில் பிறந்தமையால் இவர்களுக்குக் கந்தசாமி என்றே பெயரிடப்பட்டது.

> "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
> முந்தியிருப்பச் செயல்"

என்ற பொய்யா மொழியை நன்குணர்ந்த இவர்கள் தந்தையார் இவர்களுடைய கல்வி வளர்ச்சியில் மிகவும் சிரத்தை யெடுத்துக் கொண்டார். அதன்

பயனாக, 1894-ம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். சென்னை அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஆபீஸில் உத்தியோகத்திலமர்ந்தார்.

முதலியாரவர்களை நாடகத்துறைக்கு இழுத்தது நமது நாடகப் பேராசிரியர் அவர்கள்தான். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சென்னை சுகுண விலாச சபையில் முதலியாரவர்கள் அங்கம் வகித்துப் பெண் வேடதாரியாயிருந்து பெருந்தொண்டாற்றினார். மகாகவி ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களில் முதலியாரவர்கள் மிக அருமையாக நடிப்பாரென்று அறிஞர் பலர் கூறக்கேட்டிருக்கிறேன்.

இவர்கள் சுகுணவிலாச சபையில் தொண்டாற்றியதன் பயனாக, நமது நாடகப் பேராசிரியரவர்களின் மனோகரா, இரத்தினாவளி, வேதாள உலகம், ஆகிய பல நாடகங்கள் தமிழ் நாடக மேடையில் தோற்றமளித்தன.

நமது பேராசிரியரவர்களின் சுகுண விலாச சபை இரு ஆசிரியர்களைத் தமிழ்நாட்டிற் களித்தது. ஒருவர் பதிபக்தி, பம்பாய் மெயில், பஞ்சாப் கேசரி, கவர்னர் கப்.........என்ற திடுக்கிடும் பெயர்களால் நாடகங்கள் தயாரித்தவரும், இங்கிலாந்துக்குச் சென்று தமிழ் நாடகங்களை நடத்தியவருமாகிய தேசபந்து ஆசிரியர் டி. கே. பாவலர் அவர்கள். மற்றொருவர் கந்தசாமி முதலியாரவர்கள். இவ்விரு பெரியார்களையும் ஆசிரியர்களாகப் பெறும் பேற்றினை நாங்கள் பெற்றோம்.

ஆசிரியர் பாவலர் அவர்களால்பயிற்றுவிக்கப்பட்ட இரண்டொரு கம்பெனிகளைத் தவிர, தமிழ் நாட்டில் நடைபெற்ற பெரும்பாலான கம்பெனிகளில் நமது நாடகப்பேராசிரியரவர்களின் நாடகங்களைப் பயிற்றுவித்தவர் இவரேயென்றால் அது மிகையாகாது.

சுகுணவிலாச சபையிலிருந்து தொழில் முறை நாடக உலகில் இவரை இழுத்தது ஸ்திரிபார்ட் சுந்தரராவ் அவர்களுடைய கம்பெனிதான். அங்கு சிலகாலம் இருந்த பின் பிரசித்தி பெற்ற திருமதி பாலாமணி அம்மையார் கம்பெனியில் இவர் ஆசிரிய ஸ்தானம் வகித்தார். அந்தச் சமயம் 1906-வது ஆண்டில் ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தி வேல்ஸ் இளவரசராயிருந்த காலையில், சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். அவர்களது முன்னிலையில் நமது முதலியாரவர்கள் நாடகத்தைச் சிறப்புற நடத்திக் காண்பித்து, அவர்களிடமிருந்து நற்சாட்சிப் பத்திரமும், தங்கப்பதக்கமும் பரிசாகப் பெற்றார்.

அதன் பின் ஆஞ்சநேயர் கோவிந்தசாமி நாய்க்கர் அவர்கள் கம்பெனியில் ஆசிரியராக இருந்து மைசூர் சென்று மகாராஜா அவர்கள் முன்னிலையில் நாடகங்களைத் திறம்பட நடத்திப் பரிசு பெற்றார்.

பிறகு திரு. P. S. வேலுநாயரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னைக்கு வந்து “ மனோஹரா ” முதலிய நாடகங்களை அவர்களுக்குப் பயிற்றுவித்தார்.

சிலகாலம் ஸ்பெஷல் நடிகர்களாகப் பெயர் பெற்று விளங்கிய திரு. பைரவசுந்தரம் பிள்ளை அவர்களையும், மற்றும் பல பெரிய நடிகர்களையும் சென்னைக்குக் கூட்டிவந்து புதிய நாடகங்களைக் கற்பித்துச் சிறப்புற நடத்தினார்.

பாய்ஸ் கம்பெனிக்கு இவரைக் கொண்டுவந்தவர் திரு. ஜெகனாதய்யர் அவர்களாகும். அவர்களது “மதுரை பாலமீன ரஞ்சனி சங்கீத சபையில்” முதலியாரவர்கள் சிலகாலம் ஆசிரியராயிருந்தார்.

1920-ம் ஆண்டில் சென்னை “ஹாட் அண்டு கம்பெனி”யாருடன் கூட்டுறவு கொண்டு “ஸ்ரீ குமார லட்சுமி விலாச சபா” என்ற பெயருடன் ஒரு பாலர் கம்பெனியைத் தோற்றுவித்துச் சில காலம் நடத்திவந்தார்.

அதன் பின் மதுரை திரு சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் “ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி”யில் ஆசிரியரானார்.

பிறகு 1925-ம் ஆண்டில் எங்கள் ஸ்ரீ பாலஷண்முகானந்த சபைக்கு வந்து சேர்ந்தார்.

எங்கள் கம்பெனியில் ஆசிரியராயிருந்த போது எட்டையபுரம் சமஸ்தானாதிபதிகள் இவரது திறமையை வியந்து பெரும் பரிசுகள் ஈந்தனர்.

அதன்பின் பிரபல நடிகையாகிய திருமதி B. இராஜாம்பாள் அம்மையார் நடத்திவந்த கம்பெனியில் சிலகாலம் ஆசிரியராயிருந்தார்.

“ராமானுகூல சபா” என்னும் பெயர் கொண்ட ஓர் சபைக்கு ஆசிரியராகி சிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களுக்குச் சென்று புகழ்பெற்றார்.

ரங்கூன் ஹரிகிருஷ்ண பிள்ளையவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட “மெட்ராஸ் டிராமாடிக் ட்ரூப்” என்னும் நாடக சபையை பர்மாவில் நடத்திச் சிறப்புற்றார்.

அதன் பின் மதுரை நாகலிங்கம் செட்டியாரவர்கள் கம்பெனியில் சில காலம் ஆசிரியராயிருந்தார்.

அதன் பின் பழனியப்பச் செட்டியாரவர்கள் கம்பெனியின் மூலம் கொழும்புக்குச் சென்றார். கடைசியாக லெட்சுமி சாரதாக் கம்பெனியிலும், மதராஸ் பாய்ஸ் கம்பெனியிலும் ஆசிரியராக இருந்தார். பொதுவாகத் தமிழ் நாட்டில் நடைபெற்ற எல்லாக் கம்பெனிகளிலும் நமது ஆசிரியர் பங்கெடுத்துக்கொண்டார் என்று கூறுவது பொருந்தும். விரிவுரை வேண்டியதில்லை.

பல நாடக சபைகளில் இவர் ஆசிரிய ஸ்தானம் வகித்தாலும், நீண்டகாலம் இருந்து தொண்டாற்றியதும், ஏராளமான நாடகங்களைப் பயிற்றுவித்ததும் இரு சபைகளுக்குத்தான். ஒன்று மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, மற்றொன்று எங்கள் நாடக சபை.

இன்று தமிழ்ப் பேசும் படவுலகில் முன்னணியில் நிற்கும் நடிகர்களிற் பெரும்பாலோர் இவ்விரு கம்பெனிகளிலுமிருந்தே தோன்றியுள்ளார்களென்பது ஆசிரியர் முதலியாரவர்களுக்குப் பெருமையளிப்பதாகும்.

தோழர்கள், கலைவாணர் கிருஷ்ணன், காளி N. ரத்தினம்: K. P. கேசவன், K. K. பெருமாள், K. P. காமாட்சி, P. U. சின்னப்பா, M. V. மணி, S. V. சகஸ்ரநாமம், M. G. ராமச்சந்திரன் மற்றும் பல எண்ணிறந்த நடிகர்கள் இன்று பொதுமக்களி டையே பெற்றுள்ள நன்மதிப்புக் கெல்லாம் அவர வர்கள் சொந்தத் திறமையோ, முயற்சியோ காரண மென்றாலும், அத்தனை சுடர் விளக்குகளுக்கும் தூண்டு கோலாயிருந்தவர் இப்பெரியாரே யென்ப தில் சிறிதும் ஐயமில்லை.

நடிப்பின் முக்யத்வத்தை இப்பெரியாரால் தான் நாங்கள் நன்குணர்ந்தோம். நடித்துக் காட்டிப் பயிற்றுவிப்பதில் சினிமாவுலகில் திரு. P. K. ராஜா சாண்டோ அவர்களையும், நாடகவுலகில் இப்பெரி யாரையுமே நாங்கள் உயர்ந்தவர்களாகக் கருது கின்றோம்.

முதலியாரவர்கள் பயிற்சியளிக்கும்போது நடிகன் சலிப்புறுவானேயன்றி, ஆசிரியர் முதலியாரவர்கள் சிறிதும் சலிப்படையமாட்டார். ஒரு நடிகன் கீழே விழுவது இயற்கையாயிருக்க வேண்டு மென்ப தற்காக ஆசிரியரவர்கள் ஐம்பது முறையானாலும் வெட்டுண்ட மரம்போல் விழுந்தே காண்பிப்பார்.

நாங்கள் மேடையிலிருந்து நடித்துக் கொண்டிருப் போம். எங்கள் ஆசிரியர் பக்கப்படுதாவில் நின்று கொண்டு எங்களைப் பார்த்தபடி நடித்துக் கொண் டிருப்பார். அழவேண்டியகட்டங்களில் நாங்கள் அழு வது போல் பாவனை செய்வோம்; எங்கள் ஆசிரியர் உள்ளே நின்றபடி தேம்பித் தேம்பி அழுவார். அத்துணை நடிப்புணர்ச்சி! அத்துணை ஆர்வம் அவருக்கு.

ஆசிரியரவர்களின் ஆர்வ மிகுதியினால் சில சமயங் களில் முன் வரிசையிலிருப்பவர்களுக்கு எங்கள் குரலோடு ஆசிரியர் குரலும் கலந்து கேட்கும். சிற் சில சமயங்களில் கையிலிருக்கும் நாடகப் புத்தகத் தில் பாதி கூட வெளியே தெரிவதுண்டு! அவ்வளவு தூரம் தன்னை மறந்து நடிப்பில் ஈடுபட்டு விடுவார்.

நாடகத்தை ஒத்திக்கை பார்ப்பதென்றால் இப் போதைய நடிகர்களுக்கு வேப்பங்காய் மாதிரி. நேராக மேடையிலே நடிப்பதில்தான் பலருக்கு ஆர்வம். ஆனால், அது சாத்யப்படுவதில்லை. ஒத்தி க்கையில் அலட்சிய மனப்பான்மை கொள்ளும் நடிக மணிகள்தான் மேடையில் வந்து குளறி வழி வது இன்றும் வழக்கமாயிருந்து வருகிறது. இந்த வகையில் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். எவ்வாறு தமது மனதில் கற்பனை செய்திருப்பாரோ அந்த அளவுக்கு நடிகர்கள் ஒத்திக்கையிலேயே நடித்துக்காட்டும் வரை எத்தனை நாட்களானாலும் நாடகத்தை நடத்த அனுமதி தரமாட்டார்.

கற்பனையாக ஒரு நாடகத்தை எழுதுவதைவிட நானூறு, ஐநூறு பக்கங்கள் கொண்ட பெரிய நாவல்களை நாடகங்களாக்குவது எவ்வளவு கஷ்ட மான வேலை யென்பது அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். அத்துறையில் பூரண வெற்றி பெற்றவர் நமது ஆசிரியரவர்கள்.

நாடக நடிகர்கள் சினிமாவில் நடிக்கத் தகுதியற்ற வர்களென்பது ஒருசில பிரகஸ்பதிகளின் கூக்குரல். நாடக ஆசிரியர்கள் சினிமாவுக்கு சம்பாஷணை கள் எழுத முடியாதென்பதும் அதே போன்ற கூக்குரல்தான். எங்கள் ஆசிரியர் முதலியாரவர்கள் 1934-ம் ஆண்டில் சினிமாத் துறையில் பிரவேசித்து கோவை மனோரமா பிலிம்ஸாரால் தயாரிக்கப்பட்ட "சதி லீலாவதி"க்கு சம்பாஷணைகள் எழுதிக்கொ டுத்து டைரக்டர் எல்லிஸ் R. டங்கனுக்கு உதவியா யிருந்து அதிலும் தமது நுண்ணறிவை வெளிக் காட்டியுள்ளார்,

அதைப் பின்பற்றி, சந்திர மோகனா, பக்த துளசி தாஸ், மாயா மச்சீந்திரா முதலிய படங்களுக்கு சம் பாஷணைகள் எழுதியிருக்கிறார்.

நாடகங்களுக்கு விளம்பரங்கள் தயாரிப்பதில் நமது முதலியாரவர்களின் மூளை மிக மிக அபூர்வ மாக வேலை செய்யும். ஆங்கிலத்தில் "மனோஹரன்" நாடகத்திற்கு நோட்டீஸ் வரைவார், நடுவில் கவிதை யொன்று காணப்படும். அதில் ஒரு புறத்திலுள்ள கடைசி எழுத்துக்களைக் குறுக்கே படித்தால் "ஷண் முகம்" என்றிருக்கும் மற்றொரு புறத்திலுள்ள எழுத் துக்களை அதேபோல் படித்தால் "மனோஹரன்" என்றிருக்கும்.

நாடக முடிவில் சிகரெட் பெட்டி யொன்று பொது ஜனங்களுக்கு வழங்கப்படும், இலவசமாக சிகரெட் கிடைப்பதை யெண்ணிச், சிலர் ஆவலோடு திறந்து பார்ப்பார்கள். உள்ளே சிகரெட்டுப்போல் சுருள் காகிதங்கள் காணப்படும். பிரித்துப்பார்த் தால் ஒவ்வொன்றும் மறுநாளைய நாடகத்தின் காட்சிகளைப்பற்றிய வர்ணனையாயிருக்கும்.

மற்றொருநாள் அதேபோல் சீட்டுக்கட்டு வழங் கப்படும். திறந்து பார்ப்பார்கள். உள்ளே முப்பத்தி ரெண்டு கார்டுகளிருக்கும். அவற்றில் நாடகத்தின் காட்சிகளைப் பற்றியும், நடிகர்களைப்பற்றியும் வர்ணித்திருக்கும்.

திடீரென்று ஒருநாள் ஊரிலுள்ள ஜனங்கள் வீட்டிற்கெல்லாம் "தந்தி ப்யூன்" வந்து தந்தி கொடுத்துக் கையெழுத்து வாங்கிப் போவான். எல் லோருக்கும் ஒரே தந்திதான். ஒரே வாக்கியம்தான் அன்று நடைபெறும் எங்கள் நாடகத்திற்கு வரும் படி அவசரத் தந்தி......!

இப்படியே விதவிதமாகப் புதிது புதிதாக ஆசிரியர வர்கள் அபாரக் கற்பனை செய்வார்.

ஆசிரியரவர்கள் தமிழ் நாட்டுக்குத் தமது செல்வ மாக ஒரு நன்மகவை யளித்துள்ளார். முதலியார வர்களை நீங்கள் அறிந்திராவிட்டாலும் அவரது ஒரே புதல்வரை நன்கறிவீர்கள்.

"இவன் தந்தை என் னோற்றான் கொல்!" என்னுஞ் சொல்லுக்கு இலக்கியமாக விளங்கும் அவர்தான் இனிய தன்மையும், எளிய குணமும் படைத்த நடிகமணி தோழர் M. K. ராதா.

முதலியாரவர்கள் என்பால் அளவற்ற அன்பு கொண்டவர். "நான் சொல்லிக் கொடுப்பதை என்னிஷ்டப்படி நடித்துக் காண்பிப்பவன் ஷண்முகம் ஒருவன்தான்" என்று தமது புதல்வரிடம் அடிக்கடி கூறுவார். மரணத்தருவாயில் கூட "ஷண்முகத்தைப் பார்க்க விரும்புகிறேன்" என்று கூறிக் கொண்டிருந்ததாக தோழர் M. K. ராதா சொன்னர்.

1939-ல் நாங்கள் திருவண்ணுமலையில் நடித்துக் கொண்டிருந்த சமயம் ஆசிரியரவர்கள் சென்னையில் தமது இல்லத்தில் காலஞ்சென்றதாகத் தந்தி கிடைத்தது. நான் உடனே புறப்பட்டுச் சென்றேனுயினும் உயிரற்ற உடலையும் காண இயலாது போயிற்று!

1939–மார்ச்சுமீ 8உ புதன்கிழமை தமது *67*-வது வயதில் ஆசிரியரவர்களின் ஆவி பிரிந்தது.

இது அகால மரணமெனக் கூறமுடியாது இந்தியர்களின் சராசரி வயதைக் கணக்கிட்டால் ஆசிரியரவர்கள் இவ்வுலகில் அதிககாலம் வாழ்ந்துள்ளாரென்றே கூறவேண்டும். ஆனுல், எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் உயிர் பிரிந்தால் நாம் துக்கப்படாமலிருக்க முடிவதில்லை. "இன்னும் சிலகாலம் வாழ்ந்திருந்தால் நன்ருயிருக்கும்" என்று சொல்லாமலிருப்பது மில்லை. இது இயற்கை.

எத்தனையோ மனிதர்கள் பிறக்கிருர்கள்; வாழ்ந்து மடிகிருர்கள். இது சகஜம். அவர்களில் மடிந்த பின் மனத்தால் நினைக்கப்படுபவர் சிலருண்டு. மனத்தால் நினைப்பதோடன்றி உள்ளத்தில் உறைவிடம் பெறுவோர் வெகு சிலர். உள்ளத்தில் மட்டுமில்லாமல் ஓவியத்திலும், இலக்கியத்திலும் இடம் பெறுபவர் மிகச் சிறிய தொகையினர். அவர்களில் ஒருவர் நமது ஆசிரியர் முதலியார் அவர்கள்.

தமிழ் நாடக மறுமலர்ச்சியைப் பற்றிய சரித்திரம் வரையப்படும் பொழுது முதலியாரவர்களின் திருப்பெயர் முன்வந்து நிற்குமென்பதில் ஐயமில்லை

இத்தகைய பெரியார் காட்டிய வழியைப் பின்பற்றுவதே நாடகவுலகம் அவருக்குச் செய்யும் மரியாதையாகும். தமது வாழ்க்கை முழுதும் நாட்டுக்கு நலந்தரும் சமூக நாடகங்களையே தயாரித்த இப்பெரியாருக்கு, அதைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருந்த இப்பெருந்தகையாருக்குச் சிறப்பளிக்கும் முறையில் நல்ல சமூக நாடகங்கள் பலவற்றைத் தோற்றுவித்து, நாடகக்கலையை வளர்ப்பதே நாம் அவருக்குச் செய்யும் கைமாருகும். ஆசிரியர் கந்தசாமி முதலியாரவர்களின் பெயர் தமிழகம் உள்ளளவும் குன்ருது நின்று நிலவுக !

★

முகப்பரு, சொரி சிரங்கு
வேனல் கட்டி தீப்பட்ட புண்
முதலியவைகளுக்குச்
சிறந்தது

சைபால்

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்குச்
சிறந்தது
ரமணீஸ்

பேபி கிரைப்

தயாரிப்பவர்கள் :

தி சவுத் இந்தியன் மானுபேக்ச்சரிங் கம்பெனி

44, தானப்ப முதலி தெரு, மதுரை.

ஜுபிடர் &
மேகலா
எம்.ஜி.ராம்சந்தர்
நடிக்கும்
நாம்
மார்ச் 5உ முதல்
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா
சித்ரா......
ராஜகுமாரி
மற்றும் தென்னாடெங்கும்......
கதை, வசனம்: மு.கருணாநிதி... டைரக்ஷன்: A.காசிலிங்கம்... சங்கீதம்: C.S.ஜெயராம் ......ஸ்டுடியோ: நெப்ட்யூன்

விரைவில் வெளிவருகிறது!

★

★ டி. ஆர். ராஜகுமாரி

★ பி. எஸ். சரோஜா

★ ஸ்ரீராம்

★ டி. எஸ். பாலையா

மற்றும் பலர் நடிக்கும்

★

ஆர். ஆர். பிக்சர்ஸ்

வாழப் பிறந்தவள்

★

டைரக்ஷன்: ராமண்ணா

சங்கீதம்: ராமனாதன்

ஸ்டுடியோ: ...... வாஹினி

விவரங்களுக்கு :

ஆர். ஆர். பிக்சர்ஸ்

கோட்ஸ் ரோட், சென்னை—17.

நாடகக் கழகம்

தோற்றமும் வளர்ச்சியும்

நாடகக் கழகம் உயர்ந்த கலை வளர்க்கும் பொது நிலையம். இதன் தோற்றத்திற்குக் காரணமாயிருந்தது 1949-ல் சென்னை தேனாம்பேட்டையில் நடந்த காங்கிரஸ் பொருட் காட்சியின் கலைவிழாவாகும். அந்தக் கலைவிழாப் பகுதியின் நிர்வாகியாக விளங்கிய டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் திரு கே. சாரங்கபாணி, திரு டி. என். சிவதாணு முதலிய கலைஞர்களுடன் கலந்து பேசி மற்றக் கலைஞர்களின் கூட்டுறவுடன் கழகம் தோன்றுவதற்கு வழி கோலினர்.

1950-ஜனவரி 28-ல் நாடகக் கழகம், அப்போது மராமத்திலாகா அமைச்சராயிருந்த திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 1950 ஜனவரி 11–ல் கழகம் சட்ட பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது.

கலைஞர்களின் கூட்டுறவு உருவாகி 22–1–50–ல் தமிழகத்தின் கலைஞர்கள் காங்கிரஸ் மைதானத்திலே ஒரு பூர்வாங்கக்கூட்டம் நடத்திக்கழகநிர்வாகிகளை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர். வழக்கறிஞர், திரு. கே. வேங்கடரமணி அவர்களின் ஆழ்ந்த யோசனையுடன் கழகத்தின் விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

கழகத்தின் வளர்ச்சி

உருப்பெற்ற சில நாட்களுக்குள்ளேயே கழகம் சுறுசுறுப்பாகக் கலைத்தொண்டாற்றத் தொடங்கியது. கழகத்தின் உயர்ந்த நோக்கங்களைப் பாராட்டி திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் ரூ. 2501 நன்கொடை அளித்து உற்சாகமூட்டினர். 18–3-50-ல் பத்திரிகையாளரை ஒருங்கு கூட்டி அவர்கள் முன்னிலையில் கழகத் தலைவர் திரு டி. கே. ஷண்முகம் அவர்கள் கழகத்தின் நோக்கங்களையும். வேலைத்திட்டங்களையும் விளக்கி விரிவாகப் பேசினர்.

கழகச் செயற்குழுவின் தீர்மானப்படி 25—3—50 முதல் 30—4—50 வரை காங்கிரஸ் மைதானத்தின் திறந்த வெளி அரங்கிலே முதலாவது நாடகக் கலைவிழா நடைபெற்றது. எட்டு நாடகங்களும், ஐந்து நாட்டியக் கச்சேரிகளும், ஒரு இசை நிகழ்ச்சியும் நடந்தன. முதல் வகுப்பு எட்டணு, இரண்டாவது வகுப்பு நாலணு என்று மிகக் குறைந்த கட்டணத்தில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தார்கள்.

பிரமுகர்கள் விஜயம்

இந்த முதலாவது கலைவிழா நிகழ்ச்சிகளின்போது மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் கனம் ராஜாஜி அவர்களும், சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா அவர்களும், மத்திய சர்க்கார் மந்திரி கனம் ஆர். ஆர். திவாகர் அவர்களும், சென்னை மந்திரிகள் கனம் கோபால் ரெட்டி, கனம் மாதவ மேனன், அவர்களும் சென்னை பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னர், சபா நாயகர் திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும், விஜயம் செய்து நாடகக் கழகத்தை வெகுவாகப் பாராட்டினர்கள்.

பல்வேறு மாகாணங்களின் விளம்பர அதிகாரிகளாலும், கழகம் மிகவும் புகழப்பட்டது. "முதல் முதலாக இந்தியாவில் திறந்த வெளி அரங்கை நிறுவிய பெருமை நாடகக் கழகத்தையே சாரும்" என்று பவநகர் மகாராஜா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நாடகக் கழகம் போன்ற ஸ்தாபனங்கள் நாட்டிற்குப் பெரிய சேவை செய்கின்றன" என்று மத்திய சர்க்கார் மந்திரி கனம் திவாகர் அவர்கள் புகழ்ந்தார்.

நாடகக் கழகத்தின் உயர்ந்த நோக்கங்களையும் சேவைகளையும் பாராட்டி டில்லி அகில இந்திய ஒலிபரப்பு நிலையத்திலிருந்து திரு. சத்திய நாராயண அவர்கள் வானொலியில் பேசினர்.

பம்பாய் சர்க்காரால் வெளியிடப்படும் செய்திப் பிரசுரம் கழகத்தைப் பாராட்டி எழுதியது.

மத்திய சர்க்காரின் கல்வி அமைச்சர் மௌலானு அபுல் கலாம் ஆஸத் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தியக் கலாசார உறவுக்குழு நாடகக் கழகத்தை ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டது.

மற்றும் பலசங்கங்களின் பாராட்டுதல்களையும், நமது கழகம் பெற்றது.

தமாஷா வரி விலக்கு முயற்சி

கலை விழா முடிந்ததும் கழகம் முதல் வேலையாக தமாஷா வரி விலக்கு முயற்சியில் ஈடுபட்டது. இந்த வரி ஒழிந்தால்தான் நாடகக் கலை உயிர் நிலைக்க முடியுமென்பதை உணர்ந்த கழகம் சர்க்காரிடம் இதைப்பற்றி வற்புறுத்திப் பேச ஒரு சிறு குழுவை நிறுவியது. சென்னைப் பத்திரிகைகள் கழகத்தின் இந்த நன் முயற்சிக்கு நல்லாசி கூறின.

30—4—50-ல் கழகத்தின் கோரிக்கையை நன்கு பரிசீலனை செய்வதாக நிதி அமைச்சர் கனம் கோபால் ரெட்டி அவர்கள் வாக்களித்தார்.

துணைக் கழகங்களும் நிகழ்ச்சிகளும்

1950-மே மாதம், துறையூரில் நாடகக் கழகம் காட்டிய வழியைப் பின்பற்றித் திறந்த வெளி அரங்கிலே வெற்றிகரமாக நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களின் தேவி பாலவிநோத சங்கீத

சபையார் நாடகங்களை நடத்தி மக்களை மகிழ் வித்தார்கள். மே மாதம் பொதட்டூர் பேட்டையில் தமிழர் முன்னேற்ற நாடகக் கழகம் ஒன்று கழகத்தின் செயலாளர் திரு. சிவதாணு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1950 ஜூன் மாதம் திருநெல்வேலி யில் நெல்லை நா கக் கழகம் என்ற நிலையத்தைத் திரு. கே. சுப்ரமண்யம் அவர்கள் திறந்து வைத்தார்.

1950 ஜூலை மாதம் அமைச்சர் கனம் கோபால் ரெட்டி அவர்களிடம் கழகம் தூது சென்று மீண் டும் தமாஷா வரி நீக்கத்தின் அவசர நிலையை எடுத்துக் கூறியது.

இதே மாதத்தில் பிலிம் விசாரணைக் கமிட்டியின் அங்கத்தினராகச் சென்னைக்கு விஜயம் செய்திருந்த டைரக்டர் திரு. சாந்தாராம் அவர்களைக் கலைஞர் என்ற முறையில் நாடகக் கழகம் வரவேற்று உப சரித்தது.

அறிஞருக்கு அநுதாபம்

பேராசிரியர் ஜார்ஜ் பெர்னட்ஷா அவர்களின் மறைவுக்கு வருந்தி 16—11—50-ல் பிலிம் வர்த்தக சபைக் கட்டிடத்தில் கழகம் ஒரு கூட்டம் நடத்தி யது. முன்னாள் அமைச்சர் கனம் கோபால் ரெட்டி அவர்கள் தலைமையில் பல பிரமுகர்கள் பேசினார்கள்.

முதல் ஆண்டு விழாவும் இரண்டாவது கலை விழாவும்

1950 டிஸம்பர் 30-ந்தேதி முதல் 1951 ஜனவரி 7-ந் தேதி வரை திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் பாடசாலைக் கட்டிடத்திலுள்ள திறந்த வெளி அரங் கிலே இரண்டாவது நாடகக் கலை விழா நடை பெற்றது. தமிழ் நாட்டிலுள்ள பிரபல நாடகக் குழுவினர் பலரும், இவ்விழாவிற் பங்கு கொண்டது குறிப்பிட தக்கது. இக் கலை விழா நிகழ்ச்சிகளைப் பல்லா யிரக் கணக்கான மக்களும் திருவாங்கூர், கொச்சி ராஜப் பிரமுகர் ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகாராஜா அவர்களும், முன்னாள் சென்னை பிரதமர் கனம். பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களும், ஸர். சி. பி. ராம சாமி ஐயர் அவர்களும், பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர் களும், மற்றும் பல பிரமுகர்களும் கண்டு மகிழ்ந்து பாராட்டினார்கள்.

சென்னைக்கு விஜயம் செய்திருந்த திரு. நார்மன் மார்ஷல் அவர்களின் ஷேக்ஸ்பியர் நாடகக் குழுவின ருக்கு 1951 ஜனவரி 1-ந் தேதியன்று கழகம் ஒரு விருந்துபசாரம் நடத்தியது.

அதே தேதியில் கழகத்தின் முதல் ஆண்டுவிழா வும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கனம். கோபால் ரெட்டி அவர்கள் அவ்விழாவுக்குத் தலைமை தாங்கினர். வெளிநாட்டு நாடகக் குழுவினரும் விஜ யம் செய்திருந்தனர்.

சென்னைக்கு விஜயம் செய்திருந்த ரஷ்யக் கலைஞர் களாகிய திருவாளர்கள் புடோவ்கின், செர்க்கசாவ், முத லியோருக்கு நாடகக் கழகத்தின் சார்பில் திருவல்லிக் கேணி கலாமண்டபத்திலே 1951 ஜனவரி 31-ந்தேதி ஒரு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமாஷா வரி நீங்கியது

கழகத்தின் தளரா முயற்சியின் பயனாக 1951-ஏப்ரல் முதல் தேதி நாடக நிகழ்ச்சிகளுக்குத் தமாஷா வரி நீக்கப் பட்டது. நிதி அமைச்சர் கனம் கோபால ரெட்டி அவர்கள் இதற்காக எடுத்துக்கொண்ட நன்முயற்சி யைப் பாராட்ட 16-3-51-ல் ஏ. வி. எம். ஸ்டுடியோ வில் ஒரு கூட்டம் நடைபெற்றது. நாடகப் பேராசிரி யர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களும் பிரசித்தி பெற்ற கன்னட நடிகரான குப்பி வீரண்ணா அவர் களும் மற்றும் பல கலைஞர்களும், சர்க்காரைப் பாராட்டிப் பேசினார்கள்.

நடனம் இசைக்கும் வரி நீங்கியது

நாடகக் கழகம் தமாஷா வரிக்காக எடுத்துக் கொண்ட முயற்சியால், நாட்டியம்-இசைக் கலை வளர்ச்சிக்கும், பளுவாயிருந்துவந்த தமாஷாவரி நீக்கப்பட்டதென்று நாம் பெருமைப்பட உரிமை உண்டு. கழகத்தின் சார்பில் அமைச்சர்களைப் பேட்டி கண்ட தூதுக்குழுவினர் இசை-நாட்டியக் கலைகளுக்கும் வரி நீக்கப் படவேண்டிய அவசி யத்தை வற்புறுத்தினார்கள். அதன் காரணமாக அத்துறைகளில் ஈடுபட்டுள்ளோர்கள் பெருங் கிளர்ச்சி நடத்த வேண்டிய அவசியமில்லாது போயிற்று.

வெளிநாட்டு அழைப்பு

ஆஸ்லோவில் நடந்த சர்வதேச நாடக காங்கிர ஸுக்கு அகில இந்தியாவின் பிரதிநிதியாக ஒருவரை அனுப்புமாறு கல்வி அமைச்சரிடமிருந்து நமது கழகத்திற்கு அழைப்பு வந்தது. அசௌகரியம் காரணமாகக் கழகம் இதில் பங்கு கொள்ள இயல வில்லை. கழகத்தில் அப்போது துணைத்தலைவரா யிருந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்கும் செயலாளர் கே. சுப்பிரமண்யம் அவர்கட்கும், திரு மதி டி. ஏ. மதுரம் அவர்கட்கும், ரஷ்ய சர்க்காரிட மிருந்து வந்த அழைப்பின் பேரில் அவர்கள் சென்று திரும்பியவுடன் 27—10—51-ல் திருவல்லிக்கேணி கடற்கரையில் கழகத்தின் சார்பில் ஒரு பிரமாண்ட மான கூட்டம் நடத்தி வரவேற்பளிக்கப்பட்டது.

ரஷ்யாவில் மிகச் சிறப்புக்குரிய நாடகக்கலைஞர் களை மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்க்கும் ''அகில உலக நாடக மன்றம், மாஸ்கோ'' என்ற ஸ்தாபனத்தில் நமது நாடகக்கழகத்தின் செயலாளரான திரு கே. சுப்பிரமண்யம் அவர்களையும், திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்களையும், கௌரவ உறுப்பினரா கச் சேர்த்துக் கொண்டிருப்பதைக் குறித்துக் கழகம் பெருமைப்படுகிறது.

இடைக்காலத்தில் காங்கிரஸ் மைதானத்தில் இருந்த நமது கழக அலுவலகம், வேறிடத்திற்கு மாற்ற நேர்ந்த சமயம் திரு ஏ. வி. மெய்யப்பச் செட் டியார் அவர்கள் தமது ஏ. வி. எம். ஸ்டுடியோவில் கழக அலுவலகத்திற்கு இடம் கொடுத்துதவியதற்கும், அவ்வப்போது கூட்டங்களை நடத்த தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையார் இடம் கொடுத்து உதவிய தற்கும் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

கழகத்தின் ஆரம்ப ஆண்டுகளிலேயே மிகப்பெரிய கலைவிழாக்களை நடத்தத் திட்டமிட்டு வெற்றியோடு நடத்தியதின் காரணமாக கழகத்தின் நிதி நிலைமை திருப்தி அளிப்பதாக இல்லாமற் போக நேர்ந்தது.

கழகத்தின் கலை நிகழ்ச்சிகளுக்கு மக்கள் பேராதரவு காட்டினார்கள் என்றாலும், மிகக்குறைந்த கட்டணங்களை ஏற்படுத்தியதாலும், தொழில் முறை நாடகசபை-அமெச்சூர் நாடக சபை என்ற பேத மில்லாமல் கழகத்தின் நோக்கத்தை அனுசரித்துச்செயலாற்ற முற்பட்டதாலுமே நிதிநிலைமையில் குறைவு ஏற்பட்டதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

புதிய செயற்குழு

1952 ஏப்ரல் 27ல் நடை பெற்ற பேரவைக் கூட்டத்தில் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 'கலைவாணர்' திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைவராகப் பதவியேற்றார். செயற்குழுவினரின் விவரம் தனியே வேறொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

1952 செப்டம்பர் 10-ம் தேதி முதல் கழக அலுவலகம் மவுண்ட் ரோடு சுகுணவிலாச சபைக் கட்டிடத்தில் செயலாற்றி வருகின்றது. அலுவலகத்திற்கு இடங்கொடுத்து உதவிய சுகுணவிலாச சபையாரைக் கழகம் மிகவும் பாராட்டுகின்றது.

ராயலசீமைப் பஞ்ச நிவாரணத்திற்காக ரஷ்யாவிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டுவந்த சோவியத் தூதுக் குழுவினருக்கு 5-10-1952ல் மியூசியம் தியேட்டரில் கழகம் ஒருவரவேற்பு நடத்தியது. நாடக நிகழ்ச்சிகளும் நடை பெற்றன.

இந்திய சினிமா தூது கோஷ்டியில் தென்னிந்தியப் பிரதிநிதிகளாக அமெரிக்கா சென்று மீண்ட கழகத் துணைத்தலைவர் டைரக்டர் கே. சுப்பிரமணியம் அவர்களுக்கும், நடிகை டி. சூர்ய குமாரிக்கும் 29-10-1952ல் சுகுணவிலாச சபை மேடையில் கழகம் ஒரு வரவேற்பு அளித்தது.

1952–பிப்ரவரி முதல் தேதி நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் 80-ம் ஆண்டு நிறைவு விழாவை வரலாறு கண்டறியாத மகத்தான விழாவாக, இதுவரை "யாரும் கண்டும் கேட்டும் இராத அவ்வளவு சிறப்பான முறையில் அசாத்திய கோலாகலத்தோடு" திருவல்லிக்கேணி கலாமண்டபத்தில் கொண்டாடிய பெருமை நாடகக் கழகத்திற்கே உரியது. விழாவின் விவரம் தனியே தரப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டுகளில் நாடகக் கழகம் செய்துள்ள மகத்தான சாதனைகளை முன்னிறுத்திப் பார்க்கும் போது நிதி நிலைமையைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. மக்களின் பேராதரவை நாடகக் கழகம் பெற்றிருக்கிறது. நாடக மேடை சென்ற ஆண்டுகளில் பெருமைப் படத்தக்க அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்த நிலைமையில் கழக உறுப்பினர்களின் பரிபூரண ஒத்துழைப்பு இருந்தால் நிதி நிலைமை வெகு சீக்கிரத்தில் திருப்தி அளிக்கும் முறையில் வளர்ச்சி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

நன்றி

கழகம் தோன்றுவதற்கு இடம் தந்து பல வகையாலும், உதவி செய்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி யாருக்கும், இடைக்காலத்தில் கழகத்திற்கு இடம் கொடுத்து உதவி ரூ. 2501 நன்கொடை வழங்கிய திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களுக்கும், இரண்டாவது கலைவிழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்த உதவி புரிந்த திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் பாடசாலை நிர்வாகிகளுக்கும், கழகக் கூட்டங்களை நடத்த உதவி அளித்த தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையாருக்கும், தற்போது கழகத்தின் அலுவலகத்திற்காக ஓர் அறையை ஒதுக்கித் தந்த சுகுணவிலாச சபையாருக்கும், கழகத்திற்கு ரூ. 500 நன்கொடை அளித்து உதவிய ஜூபிடர் பிக்சர்ஸாருக்கும். ஏனைய நன்கொடையாளர்களுக்கும் கழகத்தின் வழக்கறிஞர் திரு. கே. வேங்கடரமணி அவர்கட்கும், கழகத்தின் கணக்குகளைப் பரிசோதித்துதவும்திரு.எம்.எஸ். கிருஷ்ணன் அவர்கட்கும், கழக நடவடிக்கைகளைப் பற்றி விளம்பரப்படுத்தி ஊக்கமளித்து வரும் பத்திரிகையாளர்களுக்கும், கழக வளர்ச்சிக்கு உதவும் கலை அன்பர்கள் அனைவருக்கும் கழகத்தின் நன்றி உரித்தாகும்.

வாழ்க நாடகக் கலை!

★

கழகம் அமைத்தே நாடகமாங்
கலையை வளர்த்து வருகின்றோம்.
பழகும் நடிகக் குழுவினரே,
பயிற்சி நிறைந்த நடிகர்களே,
தொழில்வல் லுநரே, சபைநடத்தத்
துணிந்துள் ளோரே, ரசிகர்களே,
அழகுக் கதைகள் அளிப்போரே,
ஆதர வளிக்க வேண்டுகிறோம்.

—"புத்தமணி"

நாடகக் கழகம்

[பதிவுற்றது]

14, மவுண்ட் ரோடு : : சென்னை-2

ஆதரவாளர்கள் (Patrons)

திரு. கே. காமராஜ் நாடார்
,, ப. சம்பந்த முதலியார்

பொறுப்பாளர்கள் (Trustees)

திரு. எஸ். எஸ். வாஸன்
,, ஏ. வி. மெய்யப்ப செட்டியார்
,, ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)
,, டி. கே. ஷண்முகம்
,, வி. ஸி. கோபாலரத்னம்

செயற் குழு

[1950 முதல் 1952 ஏப்ரல் வரை]

தலைவர்

திரு. டி. கே. ஷண்முகம்

துணைத் தலைவர்கள்

திரு. எம். கே. தியாகராஜபாகவதர்
,, வி. ஸி. கோபாலரத்னம்
,, என். எஸ். கிருஷ்ணன்
,, எஸ். டி. சுந்தரம்
,, எஸ். வி. சஹஸ்ரநாமம்
,, ஜி. கே. சேஷகிரி

பொதுச் செயலாளர்கள்

திரு. கே. சுப்ரமண்யம்
,, டி. என். சிவதாணு

பொருளாளர்

திரு. கே. சாரங்கபாணி

கிளை உறுப்புச் செயலாளர்கள்

திரு. எம். வி. மணி
,, எம். விஸ்வம்
,, டி. கே. கிருஷ்ணசாமி
,, நாரண துரைக்கண்ணன்
,, ஜி. கோவிந்தராஜுலுநாயுடு
,, எஸ். கிருஷ்ணசாமி

[1952 ஏப்ரல் முதல்]

தலைவர்

திரு. என். எஸ். கிருஷ்ணன்

துணைத் தலைவர்கள்

திரு. டி. கே. ஷண்முகம்
,, கே. சுப்ரமண்யம்
,, கே. எஸ். பிரகாஷ் ராவ்
,, நாரண துரைக்கண்ணன்
,, எஸ். வி. சகஸ்ரநாமம்
,, 'நாரதர்' சீனிவாசராவ்

பொதுச் செயலாளர்கள்

திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியன்
,, டி. வி. சுந்தரம்

பொருளாளர்

திரு. ஜி. கோவிந்தராஜுலு நாயுடு

கிளை உறுப்புச் செயலாளர்கள்

திருமதி. டி. ஏ. மதுரம்
திரு. ஜி. கே. சேஷகிரி
,, டி. என். சிவதாணு
,, எஸ். டி. சுந்தரம்
,, டி. என். குப்புசாமி
,, ஆர். கிருஷ்ணமாச்சாரி

கௌரவ சட்ட நிபுணர்:

திரு. கே. வெங்கடரமணி

கணக்கு ஆய்வாளர்:

திரு. எம். எஸ். கிருஷ்ணன்

★ நாடகப் பேராசிரியரின் 80-ம் ஆண்டு நிறைவு விழா ★

ஒன்றுபட்ட தமிழர் முன்னணிக்கு வழிகோலிய ஒப்பற்ற திருவிழா!

நாடகக் கழகத்தின் மகத்தான சாதனை

★

நாடகக் கழகத்தின் ஈடற்ற முயற்சியால் நாடகப் பேராசிரியர் திரு. ப. சம்பந்த முதலியார் அவர்களின் 80-ம் ஆண்டு நினைவு விழா 1953 பிப்ரவரி 1-ல் சென்னையில் மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்று காலை 8 மணிக்கு நாடகக் கழக அலுவலகம் அமைந்துள்ள சுகுண விலாச சபையிலிருந்து கலைஞர்களின் மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு முற்பகல் 10 மணிக்கு திருவல்லிக்கேணி கலாமண்டபத்தை யடைந்தது. காமெடியன் திரு கே. சாரங்கபாணி யானை மீது அமர்ந்து நாடகக் கலைக் கொடியை ஏந்திச் சென்றார். அவருக்குத் துணையாக இருந்தார் ஜெமினி கணேசன். சாரட்டு ஒன்றில் முதுபெருங் கிழவர் ப. சம்பந்த முதலியார், கழகத் தலைவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் அமர்ந்திருந்தனர். திருவாளர்கள் நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, எம். ஆர். ராதா, டி. ஆர். ராமச்சந்திரன், மனோஹர், ஏ. டி. கிருஷ்ணசாமி, டி. என். சிவதாணு, கே. சுப்ரமணியம், ஸி. வி. வி. பந்தலு, எம். எஸ். முத்துகிருஷ்ணன் முதலிய எண்ணற்ற கலைஞர்களும், ஏராளமான பொது மக்களும் புடைசூழ ஊர்வலம் மிகுந்த கோலாகலத்துடன் காணப்பட்டது. திரு டி. எஸ். பாலையா சாரட்டின் சாரதிக்குப் பக்கத்திலிருந்து வாழ்த்தொலிகள் முழக்கி வந்ததுபொது மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. டி. கே. எஸ். குழுவினர், நவாப் ராஜமாணிக்கம் கம்பெனி நடிகர்கள், சுகுண விலாச சபையினர், திருவல்லிக்கேணி நுண்கலைக் கழகத்தினர் அமெச்சூர் நடிகர் குழுவினர் முதலிய பலதிறப்பட்ட கலையன்பர்கள் நாடகக்கலைக் கொடிகளை ஏந்திக்கொண்டு முன்னேறிய. காட்சி கலையின் வெற்றிக்கு அறிகுறியாக விளங்கியது.

கலாமண்டபத்தில் திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் பள்ளி மாணவிகளின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் விழா ஆரம்பமாயிற்று. மேடை மீது திரு. எஸ். பி. பி. பட்டாபி ராமராவ், திரு கே. வெங்கடசாமி நாயுடு முதலிய சென்னை அமைச்சர்களும், ஜஸ்டிஸ் டபிள்யூ எஸ். கிருஷ்ணசாமி நாயுடு, ஜஸ்டிஸ் பஷீர் அஹமது சயத் முதலிய நீதிபதிகளும், மேயர் திரு. டி. செங்கல்வராயன், மற்றும் நகர பிரமுகர்களும், பிரபல நடிகர்கள் பலரும் கலையார்வத்தால் நெருங்கி அமர்ந்திருந்தனர். பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் அழகிய பந்தலில் குழுமியிருந்தனர். ஏராளமான பெண்களும் கலந்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

நாடகக் கழகத் தலைவர் திரு என். எஸ், கிருஷ்ணன் அவர்கள் எல்லோரையும் வரவேற்றார். சென்னை முதலமைச்சர் ராஜாஜி அவர்கள் நாடகப் பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்தினார். சர். சி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் தலைமை ஏற்றுப் பேராசிரியரைப் பெரிதும் பாராட்டினார்.

பின்னர், நாடகக் கழகப் பொதுச் செயலாளர் திரு புத்தனேரி ரா. சுப்பிரமணியம் வாழ்த்துச் செய்திகளைப் படித்து "நாடகக் கலைக் களஞ்சியம்" என்னும் சிறப்பு மலரை நாடகப் பேராசிரியருக்கு வழங்கினார். நவாப் திரு டி. எஸ். ராஜமாணிக்கம் தமது கம்பெனியின் சார்பில் பேராசிரியருக்கு மாலை சூட்டி ஐயப்பன் உருவம் பொறித்த ஷீல்டு ஒன்றைப் பரிசாக வழங்கினார். டைரக்டர் கே. சுப்ரமணியம், குடந்தை ராஜண்ணா பிள்ளை. எம் ஆர் ராதா, எம். கருப்பையா, புத்தனேரி சுப்ரமண்யம் முதலியோர், தெ. இ. பிலிம் வர்த்தகசபை, அ. இ. நாதஸ்வரக் கலைஞர்கள் சங்கம், காங்கிரஸ் ஊழியர்கள் சங்கம், தமிழ் எழுத்தாளர் சங்கம் முதலிய பல ஸ்தாபனங்களின் சார்பில் பேராசிரியருக்கு மாலைகள் சூட்டினர். ராஜாஜி அவர்கள் கேட்டுக்கொண்டபடி திரு டி. கே. ஷண்முகம், திரு சின்ன அண்ணாமலை ஆகியோர் இன்னிசை முழக்கிப் பரவசம் உண்டாக்கினர். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் பம்மல் சம்பந்தம் நூல் நிலையத்தைத் தொடங்கி வைத்துச் சொற்பெருக் காற்றினார். செட்டிநாட்டரசர் திரு எம்.ஏ. முத்தைய செட்டியார், திரு ம. பொ. சிவஞானம், திரு ப. ஜீவானந்தம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பின்னர் பேராசிரியர் பம்மல் சம்பந்தம் அவர்கள் தமக்களித்த பாராட்டிற்காக நன்றி தெரிவித்தார். திரு என். எஸ் கிருஷ்ணன் நன்றி கூறியபின் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவெய்தின.

பிற்பகல் நிகழ்ச்சிகள் குடந்தை ராஜண்ணா பிள்ளை, குளிக்கரை பிச்சையப்பா குழுவினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாயிற்று. சீர்காழி எஸ். கோவிந்தராசன் சில இனி பாடல்களைப் பாடினார். திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் டாக்டர் மு. வரதராசனார், திருவாளர்கள் மேயர் டி. செங்கல்வராயன், வி. ஸி. கோபாலரத்னம், கொத்தமங்கலம் சுப்பு, கே. எஸ். ராமசாமி சாஸ்திரி, எஸ். டி சுந்தரம், சின்ன அண்ணாமலை, கண்ணதாசன், அன்பழகன், கம்பதாசன், நடிகர் பாலசந்தர், திருமதி நீலாவதி ராமசுப்ரமண்யம் ஆகியோர் நாடகப் பேராசிரியருக்குப் பாராட்டுரை வழங்கினர். பாராட்டுரைகளின் இறுதிப் பகுதிக்கு அறிஞர் சி. என். அண்ணாத்துரை தலைமை வகித்துப் பேசினார். தஞ்சை சுதர்ஸன் சபையின் சார்பில் திரு. எஸ். ராமனாதன் செட்டியார் பேராசியருக்கு மாலை சூட்டினார். விழாச் செயலாளர் புத்தனேரி சுப்பிரமணியம் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

பின்னர் பேராசிரியர் எழுதியுள்ள பிரபல நாடகங்கள் சிலவற்றிலிருந்து சிற்சில பகுதிகள் நடித்துக் காண்பிக்கப் பெற்றன. இக்கதம்ப நிகழ்ச்சியில் சுகுண விலாஸ சபையாரின் "சபாபதி", டி. கே. எஸ். குழுவைச் சேர்ந்த டி. என். சிவதாணு, கே. ராமசாமி ஆகியோரின் "ரத்னாவளி", திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்டஸ் கிளப் அன்பர்கள் நடித்த "இரு நண்பர்கள்", கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம், கே. ஆர். சீதாராமன் முதலியோர் நடித்த "மனோஹரா", அமெச்சூர் நடிகர் குழுவினரின் "காதலர் கண்கள்" எம். ஆர். ராதா, டி. எஸ். பாலையா, டி. கே. சம்பங்கி ஆகியோர் நடித்த "கள்வர் தலைவன்", கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன் வி. டி. கிருஷ்ணசாமி, எஸ். டி. சுந்தரம், பி. டி. சம்பந்தம், மனோஹர், வி. சுசீலா முதலியோர் நடித்த "சபாபதி" ஆகிய நாடகங்கள் இடம் பெற்றிருந்தன.

கூடியிருந்த பொது மக்கள் அனைவரும் நாடகக்கதம்ப நிகழ்ச்சிகளைப் பெரிதும் ரசித்தனர். விழாச் செயலாளர் திரு புத்தனேரி ரா. சுப்பிரமணியன் விழா வெற்றிகரமாக நடைபெறத் துணைசெய்த எல்லோருக்கும் நன்றி கூறினார். மாறுபட்ட கருத்துடைய அரசியல் தலைவர்களையும், கலைஞர்களையும் ஒரே மேடையில் கலந்துகொள்ளுமாறு செய்து ஒற்றுமை மனப்பான்மையை வளர்த்த நாடகக் கழகத்தின் பெருமையை மக்கள் வியப்போடு பாராட்டிக் கொண்டே முகமலர்ச்சியோடு சென்றனர்.

பத்திரிகைகளின் பாராட்டு

பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று படைப்புக் கடவுளான பிரமன் பிரமித்து விட்டார் தன்! எண்ணத்தில் எழும் உருவங்களை, பூமியில் வடித்து, சகல விசித்திர ஜீவராசிகளையும். சூழ்நிலைகளையும் ஏற்படுத்தும் பிரமன் அன்றைய தினம் மூர்ச்சையாகி விழுந்து விட்டார் !! கல்ப கோடி காலமாகக் கடலையும், கற்பாறைகளையும் பூமியில் கிடத்தும் உறுதி வாய்ந்த பிரமன் 'தன் வாழ்நாளிலே என்றும் கண்டிராத விசித்திர-விநோத நிகழ்ச்சி' யொன்றை மேற்படி தினத்தில் கண்டார். அசாத்தியம் என்று அவர் தம்செயல் பற்றி இறுமாந்திருந்த எண்ணத்திலே இடி விழுந்து எண்ணற்ற சுக்கல்களாக்கி விட்டது ! சோர்வுற்று அவரை மூர்ச்சித்து விழச் செய்து விட்ட்து.

ஆம், மேற்படி தினம் என்றுமே சேராத வட்துருவமும் தென் துருவமும் ஒன்று சேர்ந்து, ஒருங்குகூடி வெற்றி முழக்கம் செய்தன!

சென்னை திருவல்லிக்கேணி கலாமண்டப அரங்கத்தில் அன்றைய தினம் இந்த சம்பவம் நடைபெற்றது. பல்வேறு அபிப்பிராயங்களைக் கொண்ட பல கட்சிகளின் தலைவர்கள் இந்த மன்றத்தில் ஒருங்கு கூடி, ஒரே ஒரு விஷயத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடில்லாமல், எண்ண வேற்றுமை இல்லாமல், ஒரே குரலாக ஒன்று சேர்ந்து கூறினார்கள். இவர்கள் எழுப்பிய அந்தக் குரல் திக்கெட்டும் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

அப்படியாக வட்துருவமும், தென் துருவமும் என்று கருதப்படும் கட்சி வேறுபாடுளில் இவர்கள் ஒருங்கு ஆமோதித்தது "நாட்கப் பேராசிரியர் சம்பந்த முதலியாரின் நாட்கப்பணி ஈடு இணையற்றது" என்பதைத்தான்.

பம்மல் சம்பந்த முதலியாரின் எண்பதாவது ஆண்டு விழாவை நாடகப்பணிக்கு அவர் சலியாது சேவை செய்த காரணத்வை முன்னிட்டு ஒரு பாராட்டு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று நாட்கக் கழகம் தீர்மாணித்திருந்தது. 'எண்ணுவது எளிது; செய்கை கடினம்' என்று சொல்லுவார்கள் ! ஆனால் நாட்கக் கழகத்தின் விஷயத்தில் இது மிக மிக அடிப்பட்டுப் போய் விட்டது. அவர்கள் நினைத்ததைச் செய்து முடித்தார்கள்! இது மட்டுமல்ல, எண்ண வடிவிலே உருப்பெற்ற 'பாராட்டு விழா'வை இந்தியா கண்டும், கேட்டுமிராத மிகப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடி விட்டார்கள் !

—ரஸிகன்

தமிழ் நாட்க விழா என்று ஒன்றும் இந்த வருஷம் சென்னையில் நடைபெறவில்லைதான். ஆனால் சென்ற ஞாயிறன்று திருவல்லிக்கேணிப் பகுதியில் யாராவது இருந்திருந்தால், அங்கு காணப்பட்ட கோலாகலமான காட்சிகளைப் பார்த்து தமிழ் நாட்க விழாதான் நடைபெறுகிறதோ என்று பிரமை கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம். தமிழ் நாட்கப் பேராசிரியர் ஸ்ரீ ப. சம்பந்த முதலியாருக்கு 80 வருஷம் பூர்த்தியானதைக் கொண்டாடி, அவருக்குப் பொன்னாடை போர்த்திய தினம் அது.

கலைஞர்களைக் கௌரவிக்கும் விஷயத்தில் தமிழ் மக்கள் அனைவருமே கட்சி வித்தியாசங்களை யெல்லாம் மறந்துவிட்டு ஒன்று கூடுவார்கள் என்பதற்கு இந்தக் கொண்டாட்டம் ஒரு உன்னதமான எடுத்துக் காட்டாக விளங்கியது. ராஜாஜியைப் போன்ற காங்கிரஸ் தலைவர்களிலிருந்து ஸ்ரீ ஜீவானந்தம் போன்ற கம்யூனிஸ்டு தலைவர்கள் உட்பட், ஸ்ரீ அண்ணாத்துரை போன்ற திராவிட் முன்னேற்றக் கட்சித்தலைவர் வரை, எல்லாக் கட்சியினருமே கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ ஸி. பி. ராமசாமி ஐயர் போன்ற கட்சிப் பற்றற்ற பிரமுகர் இக்கொண்ட்டாட்டத்தின் பிரதான நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். தமிழ் முது கிழவர் ஸ்ரீ திரு வி. க. வும் நாட்கப் பேராசியரைக் கௌரவிப்பதில் கலந்து கொண்டார்.

இப்படி தமிழ்த் தலைவர்கள் எல்லோருமாக ஒன்றுகூடி ஒரே மேடையில் பேசினார்கள் என்றால், தமிழ் மக்கள் மற்றெல்லா விஷயங்களையும் விட கலையுணர்ச்சிக்கு முதலிடம் தரும் பண்பாடு வாய்ந்தவர்கள் என்பதுதான் அதற்குக் காரணம்.

—தினமணி கதிர்

பம்மல் சம்பந்தம் நூல் நிலையம்

[திரு. வி. க]

திரு. பம்மல் சம்பந்த முதலியாரை நான் இளமையிலிருந்தே அறிவேன். எல்லா வழிகளிலும் அவர் உழைத்திருக்கிறார். ஆனாலும் தமிழில் அதிக ஊக்கம் கொண்டு உழைத்திருக்கிறார். தமிழ் உலகத்திற்கு அவர் பெருந் தொண்டு செய்திருக்கிறார். அவரது கல்வியறிவை யெல்லாம் நாடகக் கலைக்கே செலவழித்திருக்கிறார். நாடகக் கலைக்கே அவர் தந்தை யென்றும் சொல்லவேண்டும். இயல், இசை இரண்டும் பொருந்தியதே நாடகக்கலை. திரு சம்பந்த முதலியார் முக்கலை வல்லவர்தான். சிறப்பாக நாடகத்தில் மிக வல்லுநர். அவரது பெயரால் நாடகக் கழகம் நூல் நிலையம் ஒன்று நடத்த முன் வந்துள்ளது மிகப் பொருத்தம். இந்த நூல் நிலையம் வளர்ந்தோங்கிப் பயன் தருமாக! நாடகக் கலை வாழ்க!

அன்று நாட்கப் பேராசிரியருக்கு அளிக்கப்பட்ட அந்தக் குதூகல மரியாதை நாட்கக் கலைக்கே அளிக்கப் பட்டதாகவே கொள்ள வேண்டும். இந்த ஏற்பாடு செய்த நாட்கக் கழகத்தினர் உருப்படியான ஒரு காரியத்தைச் செய்தமைக்கு அவர்களைப் பாராட்ட வேண்டியது அவசியம். —குண்டூசி.

"சமீப காலத்தில் யாரும் கண்டும் கேட்டும் இராத அவ்வளவு சிறப்பான முறையில், அசாத்திய கோலாகலத்தோடு, விசேஷ ஆர்வத்தோடு, சென்னை நாடகக் கழகத்தினர், ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியாரைக் கௌரவித்து விட்டனர். இதுவரை யாருடைய 80-வது வயது பூர்த்தி விழாவிற்கும் இப்படிப் பல கட்சியினரும் சேர்ந்ததில்லை; இப்படி யானையோடு கூடிய பிரம்மாண்டமான ஊர்வலம் நடந்ததில்லை. இப்படி அவருடைய பாராட்டு விழாக் கூட்டத்திற்குப் பதினாயிரம் ஜனங்கள் கூடியதும் இல்லை. —நாரதர்

எங்கள் நன்றி

—★—

அனைவரும் பாராட்டும் முறையில் நாடகப் பேராசிரியர் திரு. ப. சம்பந்த முதலியார் அவர்களின் 80-ம் ஆண்டு நிறைவு விழா வெற்றிகரமாக நடைபெற்றதற்குக் காரணமாகவும் துணையாகவும் இருந்த தலைவர்களுக்கும், நடிகர்களுக்கும், கலையன்பர்களுக்கும், ஏற்பாடுகளில் பங்கு கொண்ட எல்லோருக்கும் எங்கள் அன்பார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகும். விழா ஏற்பாடுகளில் ஏதேனும் குற்றம் குறையிருந்தால் மன்னித்து வெற்றியைக் கருதிப் பாராட்டுமாறு அன்பர்களை வேண்டுகிறோம். கருத்து வேற்றுமைகளை மறந்து, தலைவர்களும் கலைஞர்களும் கலையின் பெயரால் ஒன்றுபடும் இதுபோன்ற வாய்ப்பு அடிக்கடி ஏற்பட வேண்டுமென்பதே எங்கள் ஆவல்.

—நாடகக் கழகத்தினர்.




நேஷனல் பிக்சர்ஸ்
பூங்கோதை
அஞ்சலி பிக்சர்ஸ்
தயாரிப்பு
கதை வசனம்:
T.K. கிருஷ்ணசாமி
டைரக்ஷன்:
பிரசாத்
G.H. RAO

ஜெயந்தி புரொடக்ஷன்ஸ்
முதல் தயாரிப்பு
பொன்வயல்
கதை: கல்கியின் "பொய்மான் கரடு"
G.H. RAO
பூரண உரிமையாளர்கள்: மதறாஸ் பிக்சர்ஸ் சர்க்யூட் மதறாஸ் 14

ஜெயந்தி புரொடக்ஷன்ஸ்

பொன் வயல்

கதை: கல்கியின் "பொய்மான் கரடு"

டைரக்ஷன்: ஏ. டி. கே.

நேஷனல் புரொடக்ஷன்ஸ்

உலகம் பலவிதம்

டைரக்ஷன்: டி. ஆர். ரகுநாத்

எனெஸ்கே பிலிம்ஸ்

தோட்டக்காரன்

வசனம்: மு. கருணாநிதி

டைரக்ஷன்: என். எஸ். கிருஷ்ணன்

பூரண உரிமையாளர்கள்:

மதராஸ் பிக்சர்ஸ் சர்க்யூட்.

ராயப்பேட்டை...... சென்னை. 14

G.H. RAO